விலை ரூபா 20 பக்கங்கள் 28

# உதயன்

சுடர் 31 கதிர் 033 வள்ளுவர் ஆண்டு 2046 மார்கழி 13, செவ்வாய்க்கிழமை 29.12.2015



29°c - 26°c

மழை தொடரும்

## மழை தொடரும்

யாழ்ப்பாணம், டிசெ. 29

வளிமண்டலத்தில் ஏற்பட்ட குழப்பம் காரணமாக யாழ்.குடாநாட்டில் நேற்று மாலை கடும் மழை பெய்துள்ளது. இன்றும் பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் பக். 23


# தமிழ் மக்கள் பேரவையில் துரோகிகள், எதிரிகள் கூட்டு

## ஒருபோதும் இணையோம் என்கிறார் ரெலோவின் தலைவர் செல்வம் எம்.பி.

கொழும்பு, டிசெம்பர் 29

எதிரிகள், துரோகிகள் கூட்டுடன் உருவாக்கப்பட்டுள்ள தமிழ் மக்கள் பேரவையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான தமிழ் ஈழ விடுலை இயக்கம் (ரெலோ) ஒருபோதும் இணையாது என்று திட்டவட்டமாகத் தெரிவித்தார் அந்த இயக்கத்தின் தலைவரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன்.

வவுனியாவில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்ற ரெலோவின் பக். 06



## விடுவிக்கப்படும் காணிகளை இனங்காணச் செல்கிறது குழு

யாழ்ப்பாணம், டிசெ. 29

வலி. வடக்குப் பகுதியில் தைப்பொங்கலுக்கு முன்பாக விடுவிக்கப்படவுள்ள காணிகளை இனம்காணும் பணிக்காக அதிகாரிகள் குழு இன்று செவ்வாய்க்கிழமை குறித்த பிரதேசங்களுக்கு நேரில் செல்லவுள்ளதாக யாழ். அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

வலி.வடக்குப் பகுதியில் படையினர் வசம் உள்ள காணிகளில் குறிப்பிட்ட அளவு காணிகளை விடுவிப்பது தொடர்பில் இன்று (நேற்று) ஜனாதிபதி செயலகத்தில் பக். 23

## ஐ.எஸ். ஆதரவுப் போக்கு இலங்கையில் அதிகரிப்பு

### புலனாய்வு அமைப்புக்கள் எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 29

ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத அமைப்புக்குச் சார்பானவர்களின் செயற்பாடுகள் இலங்கையில் அதிகரித்து வருவதாகப் புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்மூலம் இலங்கைக்கு அச்சுறுத்தல் இருப்பதாக அயல் நாடுகள் இலங்கையை எச்சரித்துள்ளதாகவும், ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதச் செயற்பாடுகள் குறித்து ஜனாதிபதி மற்றும் பிரதமருக்குப் புலனாய்வுத் துறையினர் அறிக்கையொன்றைச் சமர்ப்பித்துள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

இலங்கையிலிருந்து இதுவரை சுமார் 45 பக். 23

## உறுதியளித்தவற்றை நிறைவேற்றியுள்ளோம்

### ஜனாதிபதி மைத்திரி பெருமிதம்

கொழும்பு, டிசெ. 29

தான் பதவிக்கு வந்து ஒரு வருட காலத்தினுள் உறுதியளித்த விடயங்களை நிறைவேற்றியுள்ளதாகவும் அது சந்தோசமளிப்பதாகவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

காலியில் நேற்று இடம்பெற்ற கண்காட்சி நிகழ்வைத் திறந்து வைத்து உரையாற்றியபோதே பக். 24



முச்சந்தி முரளி



பொங்கல் களைகட்டப் போகுது எண்டுறியளோ...

## படகு கவிழ்ந்ததில் மீனவர் ஒருவர் சாவு

### ஒருவரைக் காணவில்லை வடமராட்சிக் கடலில் சம்பவம்

வடமராட்சி, டிசெ. 29

பருத்தித்துறை முனைப் பகுதியில் தொழிலுக்குச் சென்ற மீனவர் ஒருவர் படகு கவிழ்ந்ததில் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். அவருடன் தொழிலுக்குச் சென்ற பிறிதொரு மீனவர் நீரில் அடித்துச் செல்லப்பட்டு காணாமற் போயிருப்பதோடு, மேலும் ஒருவர் நீந்திக் கரை சேர்ந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 4 மணியளவில் பருத்தித்துறை முனைப் பகுதியில் இடம்பெற்றிருக்கிறது.

காணாமற்போன மீனவரைத் தேடும் பணிகள் கடற்படையினரின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருவதாகப் பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது:-

பருத்தித்துறை முனைப் பகுதியில் இருந்து நேற்றுப் படகில் தொழிலுக்குச் சென்ற மூன்று மீனவர்களின் படகை அலை பந்தாடியது. இதில் மீனவர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். அவரது சடலம் நேற்று மதியம் கரையொதுங்கிய நிலையில், பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. அவரோடு பயணித்த மேலும் பக். 06

## தேசிய தைப்பொங்கல் விழா பலாலி அம்மன் ஆலயத்தில்

### ஜனாதிபதி, பிரதமர் பங்கேற்பர்

யாழ்ப்பாணம், டிசெ. 29

தேசிய தைப்பொங்கல் விழா வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள பலாலி இராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில், ஜனாதிபதி மைத்திரிபால, பிரதமர் ர[illegible] விக்கிரமசிங்க ஆகியோரின் பங்கேற்புடன் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தேசிய தைப்பொங்கல் விழாவை, யாழ்.மாவட்டத்தில் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 15 ஆம் திகதியளவில் நடத்துவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தேசிய தைப்பொங்கல் விழாவின் பொங்கல் நிகழ்வினை, வலி.வடக்கில் உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந் பக். 24

## ஒயில் கலந்த பகுதிகளுக்கு தொடர்ந்தும் குடிதண்ணீர்

### வடக்குப் பிரதம செயலாளர் பணிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 29

கழிவு ஒயில் நிலத்தடி நீருடன் கலந்துள்ளமையினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு மேற்கொள்ளப்பட்டு வந்த குடிதண்ணீர் விநியோகத்தைக் கால வரையறையின்றித் தொடர்ந்து மேற்கொள்ளுமாறு வடக்கு மாகாணப் பிரதம செயலாளர் அ.பத்திநாதன் உள்ளூராட்சி மன்றங்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

குடிதண்ணீர் விநியோகத்துக்காக மாதாந்தம் 20 லட்சம் ரூபா வரையில் செலவாகும் நிலையில், பக். 06

## தமிழரின் காணிகளைக் கிழக்கில் கைப்பற்றுகின்றனர் முஸ்லிம்கள்

### மக்கள் பேரவைக் கூட்டத்தில் குற்றச்சாட்டு கூட்டமைப்புக்கு எதிராகவும் விமர்சனங்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 29

தமிழ் மக்களின் காணிகளை முஸ்லிம் மக்கள் கிழக்கு மாகாணத்தில் கைப்பற்றுகின்றனர். இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இவ்வாறு கிழக்கு மாகாணத்திலிருந்து, தமிழ் மக்கள் பேரவையின் கூட்டத்தில் கலந்து கொண்ட பிரதிநிதிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராகக் கடுமையான விமர்சனங்களையும் அவர்கள் முன்வைத்துள்ளனர்.

தமிழ் [illegible] பேரவையின் இரண் [illegible], நேற்றுமுன் தி[illegible]ற்றுக்கிழமை யாழ். பொதுநூலகத்தில் இடம்பெற்றது. பக். 23

## வித்தியா வழக்கின் ஆய்வு அறிக்கைகள் இன்னும் இல்லை

யாழ்ப்பாணம், டிசெ. 29

புங்குடுதீவு மாணவி கூட்டு வன்புணர்வின் பின்னர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கில், இதுவரை எந்தவொரு ஆய்வு அறிக்கையும் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படவில்லை. அந்த வழக்குடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 10 சந்தேக நபர்[illegible] மீதான வழக்கும் எதிர்வரும் 11 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. பக். 24

## கத்திமுனையில் மிரட்டல் விடுத்து வீடுகளில் நகை, பணம் கொள்ளை

### வடமராட்சியில் நேற்றிரவு சம்பவம்

நெல்லியடி, டிசெ. 29

வடமராட்சி வதிரி, கரவெட்டிப் பகுதிகளில் உள்ள வீடுகளுக்குள் நேற்று முன்தினம் இரவும் நேற்று அதிகாலையும் அத்துமீறி நுழைந்த கொள்ளையர் கும்பல் வீட்டில் இருந்தோரைக் கத்தி முனையில் அச்சுறுத்தி 50 லட்சம் ரூபாவுக்கும் அதிகமான பெறுமதிகொண்ட நகை மற்றும் பணம் என்பவற்றைக் கொள்ளையடித்துத் தப்பிச் சென்றுள்ளது.

அத்துடன் வடமராட்சி கிழவி தோட்டம் பக். 06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15 பவுண் தங்க நகைகளை உரியவரிடம் ஒப்படைத்த நீதிமன்றப் பணியாளர்

சாவகச்சேரி, டிசெ.29

வீதியில் கண்டெடுத்த 15 பவுண் தங்க நகைகளுடனான கைப்பை ஒன்றை பொலிஸார் மூலம் உரியவரிடம் ஒப்படைத்தார் சாவகச்சேரி நீதிமன்றப் பணியாளர்.

கடந்த வியாழக்கிழமை இரவு 8 மணியளவில் மானிப்பாய் வீதியில், மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த நீதிமன்றப் பணியாளர் வீதியில் கைப்பை ஒன்று காணப்பட்ட நிலையில் அதனை எடுத்து வீட்டுக்குக் கொண்டு சென்று பார்த்துள்ளார். அதனுள் பலவகையான தங்க நகைகள் இருப்பதைக் கண்டு அது குறித்து மறுநாள் பகுதிக் கிராம அலுவலருக்குத் தெரியப்படுத்தினார்.

கைப்பையினுள் உடுவிலைச் சேர்ந்த பெண்ணின் தேசிய அடையாள அட்டை, சாரத்திய அனுமதிப்பத்திரம் உள்ளிட்ட ஆவணங்கள் காணப்பட்டதை அடுத்து அவருடன் கிராம அலுவலர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு சுன்னாகம் பொலிஸ் நிலையத்துக்கு வருமாறு அறிவித்துள்ளார். அங்கு வந்த பெண் நகைகளை அடையாளம் காட்டிப் பெற்றுக் கொண்டார்.

இதேவேளை - குறித்த பெண் ஓட்டோவில் சென்ற போது கைப்பை தவறி வீழ்ந்தமை தெரியாமல், ஓட்டோ சாரதி திருடி விட்டார் என்று பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார் என்று கூறப்பட்டது.

(ற-ஐ-9)

# தென்மராட்சியில் மீள டெங்கு பரவும் அபாயம்

*மீண்டும் ஆரம்பித்துள்ள மழையால்*

சாவகச்சேரி,டிசெ.29

தென்மராட்சிப் பிரதேசத்தில் மழை வெள்ளம் வற்றியதை அடுத்துக் குறைந்திருந்த டெங்குத் தொற்று கடந்த இரு தினங்களாகத் தொடர்ந்து பெய்து வரும் மழையால் மீண்டும் அதிகரிக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அதனால் பொதுமக்கள் தமது குடியிருப்புகள் மற்றும் காணிகளைத் துப்புரவாக வைத்திருக்குமாறு சுகாதாரப் பகுதியினர் அறிவுறுத்தியுள்ளனர்.

இந்தப் பகுதியில் தேங்கியிருந்த வெள்ளம் வடிந்திருந்த நிலையில் டெங்குத் தொற்றுப் படிப்படியாகக் குறைந்திருந்தது. இந்தநிலையில் கடந்த இரு தினங்களாகத் தொடர்ந்து பெரு மழை பெய்து வருவதால் மீண்டும் பல இடங்களில் வெள்ளம் தேங்கத் தொடங்கியுள்ளது.

இந்த மாதத்தின் முற்பகுதியில் தினமும் பத்துக்கு மேற்பட்டோர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகி வந்தனர். தற்போது படிப்படியாக தினமும் இரண்டு பேர் எனும் அளவுக்கு குறைவடைந்து வந்தது.

இந்த நிலையில் மீண்டும் கடந்த இரு தினங்களாக தொடர் மழை இடம்பெற்று வருவதால் டெங்குத் தொற்று மீண்டும் அதிகரிக்கக் கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை–கடந்த வாரம் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட டெங்குக் கட்டுப்பாட்டு வாரத்தில் குடியிருப்புகள் மற்றும் காணிகளைத் துப்புரவாக்க வழங்கப்பட்ட கால அவகாசம் தொடர் மழை காரணமாகப் பின்போடப்பட்டுள்ளது.

(ற-ஐ-9)


# கூரையைப் பிரித்து திருடிய திருடன் சி.சி.ரி.வி. கமராவில் பதிவானான்

## தெரிந்தவர்கள் தகவல் தருமாறு பொலிஸார் கோரிக்கை

நெல்லியடி, டிசெ.29

வடமராட்சி வல்வெட்டித்துறையில் உள்ள பிரபல மருத்தகம் ஒன்றுக்குள் இரவு நேரம் கூரையைப்





பிரித்து உட்புகுந்த திருடன் அங்கிருந்த பால்மாப் பைக்கற்றுகள், தொலைபேசி மீள் நிரப்பு அட்டைகள் முகப்பூச்சுக் கிறீம்கள் என்பவற்றை திருடிச் சென்றுள்ளான்.

குறித்த திருடனின் முகம் அங்கிருந்த பாதுகாப்புக் கமராவில் பதிவாகியுள்ளது என்றும், அதனை அடிப்படையாகக் கொண்டு தீவிர தேடுதல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்றும் வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் மீடின் தெரிவித்தார்.

வடமராட்சி வல்வெட்டித்துறையில் உள்ள பிரபல மருந்தகம் ஒன்றுக்குள் கடையின் சீற்றைப் பிரித்து உள்ளிறங்கிய திருடன் கடையில் இருந்த பால்மாப் பைக்கற்றுகள், தொலைபேசி மீள் நிரப்பு அட்டைகள், முகப்பூச்சுக் கிறீம்கள் என்பவற்றைத் திருடியுள்ளான். இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை இரவு 10 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் கடை உரிமையாளரால் செய்யப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த கடை கடந்த ஜூன் மாதமும் உடைக்கப்பட்டு பொருள்கள் களவாடப்பட்டிருந்தன. அதையடுத்து கடை உரிமையாளர் பாதுகாப்புக் கமரா பொருத்தியிருந்தார். இந்தநிலையில் கடந்த புதன்கிழமை திருடிய திருடனின் முகம் பாதுகாப்புக் கமராவில் பதிவாகியுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபரை யாராவது கண்டாலோ அல்லது தெரிந்தாலோ தமக்குத் தகவல் வழங்குமாறு பொலிஸார் கேட்டுள்ளனர்.

குறித்த நபரையோ அல்லது அவரின் முகத்தை ஒத்த நபரையோ எங்காவது கண்டால் வடமராட்சி பகுதி மற்றும் காங்கேசன்துறை 2 பிரிவுக்குப் பொறுப்பான உதவி பொலிஸ் அத்தியட்சகரின் தொலைபேசி இலக்கமான 0718591322 என்ற இலக்கத்துக்கோ அல்லது வல்வெட்டித்துறை-பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் ரீ எம் மீடினின் தொலைபேசி இலக்கமான 0718591325 என்ற இலக்கத்துக்கோ அல்லது வல்வெட்டித்துறை பொலிஸ் நிலைய தொலைபேசி இலக்கமான 0212263573 என்ற இலக்கத்துக்கோ தகவல் வழங்க முடியும் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(ற-109)

# காப்பெற் வீதியாக மாற்றப்படவுள்ள புதுக்குடியிருப்பு - கேப்பாப்பிலவு வீதி

*இராணுவத்தினர் மட்டுமே அதனைப் பயன்படுத்துகின்றனர்*

புதுக்குடியிருப்பு,டிசெ.29

இராணுவத்தினர் மாத்திரம் பயன்படுத்தி வரும், புதுக்குடியிருப்பிலிருந்து கேப்பாப்பிலவினூடாக வற்றாப்பளை செல்லும் வீதி ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியில், காப்பெற் வீதியாகத் தரமுயர்த்திப் புனரமைக்கப்படவுள்ளது என்று முல்லைத்தீவு மாவட்ட வீதி அபிவிருத்தித் திணைக்களப் பொறியியலாளர் கௌசிகன் தெரிவித்துள்ளார்.

மூன்று கிலோ மீற்றர் வரையிலான குறித்த வீதியால் பொதுமக்கள் போக்குவரத்துச் செய்யப்பட முடியாமல் தடையை ஏற்படுத்தி அதனை இராணுவத்தினர் மட்டும் பயன்படுத்துகின்றனர். இந்த வீதிக்குச் சமாந்தரமாக மடு காட்டுப் பகுதியை அண் மித்து பொதுமக்களுக்காக தூரம் கூடிய மாற்று வீதி ஒன்று இராணுவத்தால் அமைக்கப்பட்டு பாவனைக்கு விடப்பட்டுள்ளது.

குடியமர்விலிருந்து இன்று வரை வற்றாப்பளைக்குச் செல்வதற்குப் பொது மக்கள் இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட மாற்று வீதியையே பயன்படுத்துகின்றனர்.

இந்த நிலையில் தற்போது வற்றாப்பளை செல்லும் வீதிக்கான புனரமைப்புப் பணிகள் சம்பந்தப்பட்ட திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதுகுறித்து முல்லைத்தீவு மாவட்ட வீதி அபிவிருத்தி திணைக்கள நிறைவேற்றுப் பொறியியலாளர் கௌசிகனை தொடர்பு கொண்டு கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உத்தியோகபூர்வ பராமரிப்பில் தற்போது இராணுவத்தினரின் பாவனையில் மட்டும் உள்ள புதுக்குடியிருப்பிலிருந்து கேப்பாப்பிலவினூடாக வற்றாப்பளை செல்லும் வீதியே உள்ளடக்கப்பட்டுள்ளதால் இந்த வீதியே புனரமைக்கப்படும். குறித்த வீதியானது ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி ஒதுக்கீட்டில் புனரமைப்புச் செய்வதற்கான ஆரம்ப கட்டப் பணிகள் ஆரம்பிக்கபட்டுள்ளன. புனரமைப்புப் பணிகள் 18 மாத காலத்துக்குள் பூர்த்தி செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இராணுவத்தினர் மட்டும் பயன்படுத்தும் குறித்த வீதி புனரமைக்கப்படுவது குறித்து பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் நிலை நாட்டத் துடிக்கும் இந்த நல்லாட்சி அரசின் ஊடாக இந்த வீதியை மக்களின் பாவனைக்குத்திறந்துவிடுவதற்கான முயற்சிகளை அரச அதிபரும், அரசியல்வாதிகளும் முன்னெடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-ஐ-21,102)

# பாவனைக்கு உதவாத மாட்டிறைச்சி அழிப்பு

*சுகாதாரப் பகுதியினர் குருநகரில் மேற்கொண்ட திடீர் சோதனையில்*

யாழ்ப்பாணம்,டிசெ.29

குருநகர் சின்னக்கடைப் பகுதியில் உள்ள மாட்டிறைச்சிக் கடைகளில் யாழ். மாநகர சுகாதாரப் பகுதியினர் நேற்றுக் காலை மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது மக்கள் பாவனைக்கு உதவாத ஒரு தொகுதி மாட்டிறைச்சி கைப்பற்றப்பட்டு உடனடியாக அழிக்கப்பட்டது.

குருநகர்ப் பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஜே.ராஜா தலைமையில் சென்ற சுகாதாரக் குழுவினர் மாட்டிறைச்சிக் கடைகள் மீது திடீர் சோதனையில் ஈடுபட்டனர். இதன்போது ஒரு மாட்டிறைச்சிக் கடையில் மிருக வைத்திய அதிகாரியின் அனுமதி பெறப்படாது, வெட்டப்பட்ட மாட்டிறைச்சி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இறைச்சியை விற்பனைக்கு எடுத்து வந்த மாட்டிறைச்சிக் கடையின் உரிமையாளர் கடுமையாக எச்சரிக்கப்பட்டதுடன் குறித்த இறைச்சி உடனடியாகவே அழிக்கப்பட்டது.

இரு வாரத்துக்கு முன்பாகவும், மக்கள் பாவனைக்கு உதவாத மாட்டிறைச்சி மீட்கப்பட்டு அழிக்கப்பட்டது என்று சுகாதாரப் பகுதியினர் தெரிவித்தனர். (ற-ஐ-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூடிய அறைக்குள் இருந்துகொண்டு பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது

*மக்கள் பேரவை குறித்து சி.க.செந்தில்வேல் கருத்து*

யாழ்ப்பாணம், டிசெ. 29

குடிதண்ணீர்ப் பிரச்சினைக்கே தீர்வைக் காணாதவர்கள், மூடிய அறைக்குள் இருந்து கொண்டு தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வைக் கண்டுவிட முடியாது என்று குறிப்பிட்டுள்ள மாக்சிச லெனினிசக் கட்சியின் செயலாளர் சி.க.செந்தில்வேல், உருவாக்கப்பட்டுள்ள பேரவையில் இணைந்து கொள்ளுமாறு எங்களுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை, அவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டாலும் அதனை உடனடியாக ஏற்கவும் போவதில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் அரசியல் தீர்வு தொடர்பில், தமிழ்க் கட்சிகளை இணைத்து செயற்படவுள்ளதாகப் புதிதாக உருவாக்கப்பட்ட தமிழ் மக்கள் பேரவை தெரிவித்துள்ளது. இவ்வாறானதொரு நிலையில், மாக்சிச லெனினிசக் கட்சிக்கு தமிழ் மக்கள் பேரவையில் இணைந்து கொள்வதற் கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதா எனக் கேட்ட போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள தமிழ் மக்கள் பேரவையில் இணையுமாறு எங்கள் கட்சிக்கு எந்தவொரு அழைப்பும் இதுவரையில் விடுக்கப் படவில்லை. இனிமேல் அவ்வா றான தொரு அழைப்பு விடுக்கப்பட்டாலும், நாங்கள் அதனை உடனடியாக ஏற்றுக் கொள்ளப்போவதில்லை.

தமிழ் மக்கள் பேரவையை உருவாக்கியவர்களுக்கே, அதன் நோக்கம் தொடர்பில் தெளிவில்லாத நிலைமை தான் காணப்படு கின்றது. தமிழ் மக்கள் பேரவையிலுள்ள வர்கள், நாங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பினருக்கு எதிரானவர்கள் அல்ல, நாங்கள் இன்னொரு கட்சியை உருவாக்கப் போவதில்லை என்பதைத்தான் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். அவர் களிடம் ஒருமுகப்பட்ட முடி வென்பது இல்லை.

எமது கட்சியைப் பொறுத்தவரை இது இன்னொரு தேசியவாத நிலைப்பாடுதான். மக்களுக்கு மாற்றம் தேவைப்படுகின்றது. அடிப்படைக் கொள்கையில் இருந்து மாற்றுக் கொள்கைக்கு வரவேண்டும். பிற்போக்கான தமிழ்த்தேசியம் தான் உள்ளது. முற்போக்கான தமிழ்த்தேசியம் வரவேண்டும்.

வடக்கு-கிழக்கு மட்டுமன்றி ஏனைய பகுதிகளில் வாழும் தமிழ் மக்களின் அபிலாசைகள் பிரதிபலிக்க வேண்டும். இப்போதும் சாதி, சமூகப் பிறழ்வு இருக்கின்றது. மாற்றுத் தலைமை அவசியம். இனம், மதம், மொழி தொடர்பில் பேசக்கூடிய தலைமை தான் தற்போதும் உள்ளது. சாதாரண மக்களை பிரிதி நிதித்துவப்படுத்தும் வகையில் யாரும் இல்லை. வாக்குகளைப் பெற்ற மேய்ப்பர்கள் தான் உள்ளனர். யாரும் சேவை செய்வற்குத் தயாராக இல்லை.

எதிர்ப்பு அரசியல் என்ற ஒரே காரணம்தான் கூட்டமைப்பின் வெற்றிக்குக் காரணம். புதுப் பெயர்களை தாங்கி வந்தாலும் அவை பிற்போக்கானவைதான். பழைய கள் புதிய லேபிலில் வருகின்றது. அடிப்படையில் எந்த மாற்றமும் இல்லை. அப்படியான இடத்திற்கு நாங்கள் போகத் தயாரில்லை.

நாங்கள் மக்கள் பக்கம் நிற்கிறோம். அது மக்களுக்கு விளங்கவில்லை. மக்கள் எழுச்சி பெற வேண்டும். மக்கள் இயக்கம் உருவாகவேண்டும். பொது நூலகத்தில் ஒரு மூடிய கதவுக்குள் தமிழ் மக் களுக்குத் தீர்வு கண்டுவிட முடியாது. மாகாண சபையையே சரியாக நிர்வகிக்க முடியவில்லை. ஏன் குடிதண்ணீர்ப் பிரச்சனைக்கே சரியான தீர்வில்லை.

நாங்கள் சிறிய கட்சிதான். அநீதிக்கு எதிராகப் போராடுவோம். ஆனால் மக்களை ஒரு போதும் ஏமாற்ற மாட்டோம் - என்றார். (த-5-10)

# காத்தான்குடியில் நேற்று ஓட்டோச் சாரதிகள் பேரணி

வாகனங்களுக்கு வழங்கப்படும் வீதி அனுமதிப் பத்திரத்தை, ஓட்டோக்களுக்கும் வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து காத்தான்குடி ஓட்டோச் சாரதிகளினால், நேற்றுக் காத்தான்குடி நகரில் கண்டனப் பேரணி நடத்தப்பட்டது.

எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் கிழக்கு மாகாணப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையினால் புதிதாக நடைமுறைப்படுத்தப் படவுள்ள ஓட்டோக்கள் பயணிக்கும் வீதி அனுமதிப் பத்திரத்துக்கு எதிர் புத் தெரிவித்தே, இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படுவதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

மேலும், இலங்கையின் எப்பகுதியிலும் நடைமுறையில் இல்லாமல் இருக்கும் குறித்த பதிவு , மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரம் ஆரம்பிக்கப்பட் டுள்ளது.

எனவே, இந்த நடைமுறை இலங்கை முழுவதும் நடைமுறைப்படுத்தும் பட்சத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தை இறுதியாக சேர்த்துக் கொள்ளுமாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஜனாதிபதிக்கு அனுப்புவதற்கான மனுவைக் காத்தான்குடி பிரதேச செயலரிடம் ஆர்ப்பாட்டக்காரர்கள் கையளித்திருந்தமையும் குறிப் பிடத்தக்கது. (தி)

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 441
சீட்டிழுப்பு திகதி 2015.12.28
வெற்றி இலக்கங்கள்
08 39 40 66 N
அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 41,888,780/=

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1223
சீட்டிழுப்பு திகதி 2015.12.28
வெற்றி இலக்கங்கள்
14 27 35 56 P
அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 10,000,000/=

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2718 திகதி: 28.12.2015
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து
12 13 25 29 S
போனஸ் இல. 17
புதன் கிழமை ஜக்பொட்
ரூ. 17,730,600/-
Web: www.dlb.lk



## மலிவு மலிவு மலிவு

### ஏசியன் தளபாடத்தின் மெகா சேல்

| | | |
|---|---|---|
| சோபா செற் | இலவசம் | Glass Teapo & Rice Cooker |
| 6x4 அலுமாரி | 10950/= | இலவசம் Kettle |
| 6x3 அலுமாரி | 8950/= | இலவசம் Shoe Rack |
| Hisense 32"TV | 26900/= | (37900/=) |
| Hisense 24"TV | 19900/= | (26900/=) |
| Panasonic LED 32"TV | 49990/= | இலவசம் DVD Player, Panasonic Phone) |
| Gass Cooker | 3950/= | இலவசம் Kettle |
| Table Mate | 1750/= | (2450/=) |

வீடு மற்றும் அலுவலகத்துக்கு தேவையான அனைத்து பொருள்களையும் மலிவாக பெற்றுக் கொள்ளலாம்.

230, நாவலர் றோட், இலுப்பையடி சந்திக்கும் ஆனைப்பந்தி சந்திக்கும் இடையில்
077 3583879, 077 8314 201







## குழு வகுப்புக்கள்

தொடர்பு 077 8340848 / 077 8475072

தரம் 6 முதல் தரம் 11 வரையான மாணவர்களுக்கு ஆங்கில மொழி மூலமும், தமிழ் மொழி மூலமும் கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கில(Group Class) குழு வகுப்புக்கள் யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாக வுள்ளன.


## பெயர் மாற்றம்

5ஆம் வட்டாரம், இரணைப்பாளை, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு என்ற முகவரியைக் கொண்ட நான் எனது முதற்பெயராகிய **ஜீவரத்தினம்** என்ற பெயரை **ஜீவரட்ணம் மொறாய்ஸ்** என்று இன்றிலிருந்து மாற்றுகின்றேன் என்பதை அறியத்தருகின்றேன்.

ஜீவரட்ணம்.



## KOKUVIL SCIENCE OCEAN

Science Ocean

**Chemistry (K.Subeesan)**

A/L 2016, 2017,Day — செவ்வாய் (05.01.2016) 5.45pm (Gasses) ஆரம்பம்.

A/L 2016 — வியாழன் (31.12.2015) 7.30pm (Inoganic) ஆரம்பம்.

Day — சனி (02.01.2016) 4.00pm (Inoganic) ஆரம்பம்.

**Biology (T.Kajenthiran)**

A/L 2017 — புதன் (30.12.2015) 4.00pm ஆரம்பம்.

A/L 2018 — புதன் (30.12.2015) 12.00pm ஆரம்பம்.

Day — சனி (02.01.2016) 10.30am ஆரம்பம்.

**English (S.Nisankan)** (Grammer with spoken from phillipines)

ஞாயிறு (03.01.2016) 2.30pm ஆரம்பம்.

பழைய தபாற்கந்தோர் வீதி, கொக்குவில் கிழக்கு, K.K.S Road. (Kokuvil Post Office எதிரே)

தொடர்புக்கு: 078 5053 467


## மரண அறிவித்தல்

**திருமதி வெள்ளிமலர் சிவராசலிங்கம்**



பண்ணாகத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வெள்ளிமலர் சிவராசலிங்கம் நேற்று (28.12. 2015) திங்கட்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம் தங்கம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற குமரையா சிவராசலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கந்தசாமி, மற்றும் குமாரசாமி, ராமசாமி, காலஞ்சென்றவர்களான சீவரத்தினம், மனோன்மணி, லட்சுமிதேவி மற்றும் சரஸ் வதி தேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், தனலட்சுமி (ஆசிரியை, யாழ்ற்ரன் கல்லூரி, காரைநகர்), சந்தானலட்சுமி (கனடா) ஆகியோரின் பாச மிகு தாயாரும், அகிலன் (மானிப்பாய் இலங்கை வங்கி), விக்னேஸ்வரா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், தரணிபன், கோபிகன், அஸ்னேகா, விஸ்னேக் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்[illegible]கிக்கிரியைகள் இன்று (29.12. 2015) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத் தில் நடைபெற்று பூதவுடல் [illegible] கிரியைக்காக திருவடிநிலை இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 300 ஆசிரியர்களுக்கு இன்று நியமனங்கள்

கொழும்பு, டிசெ.29
ஆசிரியர் சேவையில் புதிதாக இணைத்துக் கொள்வதற்காக 300 க்கும் அதிகமான புதிய ஆசிரியர்களுக்கு இன்று செவ்வாய்க்கிழமை நியமனங்கள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நியமனங்கள் வழங்கும் நிகழ்வு, இன்று கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தலைமை தாங்கி, புதிய ஆசிரியர்களுக்கான நியமனக் கடிதங்களை வழங்குவார்.

இன்று நியமனம் வழங்கும் நிகழ்வில், தகவல் தொழில் நுட்ப பாடத்திற்காக 200 ஆசிரியர்களுக்கும், விஞ்ஞான பாடத்திற்காக 161 ஆசிரியர்களுக்கும், மேற்கத்தேய சங்கீத பாடத்திற்காக 70 ஆசிரியர்களுக்கும் நியமனக் கடிதங்கள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (த)

## வலிகாமம் வடக்கு பிரதேச சபை
## காங்கேசன்துறை (மல்லாகம்)
## பொது அறிவித்தல் - 2016

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் எல்லைக்குள் வசிக்கும் மக்கள் / தொழில் நிறுவன உரிமையாளர்கள் எமது சபையினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்கின்றேன். இந்நடைமுறைகளை பின்பற்ற தவறுவோர்மீது 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அறியத்தருகிறேன்.

**1) வியாபார உரிம அனுமதிப்பத்திரம் - 2016**
சபை எல்லைக்குள் வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்பவர்கள் 2016 ஆம் ஆண்டுக்கான வியாபார அனுமதிப்பத்திரத்தை 2016.03.31 ஆம் திகதிக்கு முன்பாக பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**2) சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் - 2016**
1533/16 ஆம் இலக்க 2008.01.25 ஆம் திகதிய அரச வர்த்தமானியில் விதந்துரைக்கப்பட்ட தொழில்களை அல்லது வியாபாரத்தை மேற்கொள்பவர்கள் சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும் அல்லது ஏற்கனவே சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் பெற்றவர்கள் உரிமம் காலாவாதி திகதிக்கு மூன்று மாதத்திற்கு முன் விண்ணப்பித்து புதுப்பித்துக்கொள்ளுதல் வேண்டும்.

**3) ஆதன வரி செலுத்துதல்-2016**
எமது சபையின் உப அலுவலகங்கள் மல்லாகம், தெல்லிப்பழை, மயிலிட்டி (குட்டியப் புலம்) ஆகிய இடங்களில் சேவையை வழங்கி வருகின்றது. மல்லாகம், தெல்லிப்பழை, மயிலிட்டி பிரதேசங்களில் வசிப்பவர்கள் அந்தந்த உப அலுவலகங்களிற்கு சென்று 2016.03.31 ஆம் திகதிக்கு முன் ஆதன வரியை செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள். மேலும் 31.01.2016ஆம் திகதிக்கு முன்னர் ஆதனவரியை செலுத்துவோருக்கு அவ்வருட மொத்த வரியில் 10% கழிவு வழங்கப்படும். 31.03.2016 ஆம் திகதிக்கு முன் வரி செலுத்த தவறின் 15% தண்டமும் வரியும் அறவிடப்படும்.

**4) வீடமைப்பு நாடு நகர அபிவிருத்தி கட்டளைச்சட்டம் பிரிவு 268 இன் பிரகாரம் அறிவித்தல்**
I)வலி வடக்கு பிரதேச எல்லைக்குள் புதிய கட்டடங்கள் அமைத்தல், எல்லைச்சுவர் அமைத்தல், கொங்கிறீட் தூண் இட்டு முட்கம்பி வேலிஅமைத்தல், கிணறுகள் ,குழாய்க் கிணறுகள் அமைத்தல், கட்டிடங்கள் விரிவாக்கல், திருத்துதல்,புதுப்பித்தல் என்பன பிரதேச சபையின் அனுமதி பெற்று செயற்பட வேண்டும்.சபையின் அனுமதி பெறப்படாது அமைக்கப்பட்ட கட்டுமானங்கள் எதுவாகினும் அனுமதியற்ற கட்டிடங்களாக கருதி சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் அல்லது நட்டஈடு இன்றி அகற்றப்படும்.

II)கட்டட அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டு ஒரு வருடத்திற்குள் கட்டிமுடிக்கப்படாத கட்டடங்கள் தொடர்பாக காலநீடிப்பு அனுமதி பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

III)அனுமதி பெற்று அமைக்கப்பட்ட கட்டடம் தொடர்பாக சபைக்கு அறியத்தந்து உரிய கட்டிட அமைவுச்சான்றிழை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**5) துவிச்சக்கரவண்டி உரிமம், மிருக வரி உரிமம் பெற்றுக்கொள்ளல் -2016**
2016 ஆம் ஆண்டுக்கான துவிச்சக்கரவண்டி, மிருக வரி உரிமங்களை 2016.03.31 ஆம் திகதிக்கு முன்பாக பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

**6) விளம்பரங்களை காட்சிப்படுத்தல்**
சபையின் நிர்வாக எல்லைக்குள் வீதிகளின் இருமருங்காகவும் வீதிக்கு மேலாகவும் வர்த்தக மற்றும் சேவை நிலையங்களிலும் காட்சிப்படுத்தப்படவுள்ள விளம்பரங்களிற்கு பிரதேச சபையில் கட்டணம் செலுத்தி அனுமதியைப்பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அனுமதியை பெற்றுக்கொள்ளாத வர்த்தகநிலைய உரிமையாளர்கள்/நிறுவனங்கள்/முகவர் நிறுவனங்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு சகல விளம்பரங்களும் அகற்றப்படும்.

**7) கல், செம்மண் , மண் என்பவற்றினை அகழ்வது தொடர்பான அறிவித்தல்**
சபையின் எல்லைக்குள் கல் ,செம்மண் ,மண் அகழ்வினை மேற்கொள்ளும் போது உரிய ஆவணங்களை சமர்ப்பித்து சபையின் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

**8) முச்சக்கரவண்டி தரிப்பிடம்**
சபையின் எல்லைக்குள் முச்சக்கரவண்டி சேவையை வழங்குபவர்கள் அதற்கென ஒதுக்கப்பட்ட முச்சக்கரவண்டி தரிப்பிடத்தில் தரித்து நின்று சேவையை வழங்குவதுடன் பிரதேச சபையில் உரிய கட்டணத்தை செலுத்தி பதிவு செய்யப்படலும் வேண்டும்.

**9) மரக்கறி, மீன், இறைச்சி விற்பனை தடைசெய்தல்**
வலி வடக்கு பிரதேச சபை எல்லைக்குள் உள்ள சந்தைகளிலிருந்து 1km தூரத்திற்கு வர்த்தக நிலையங்கள் ,பாதையோரங்கள் என்பவற்றில் மரக்கறி, மீன், கோழிஇறைச்சி , ஆட்டிறைச்சி விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது.

**10) படவரைஞரைப்பதிவு செய்தல் / புதுப்பித்தல்-2016**
2016 ஆம் ஆண்டுக்கு படவரைஞராக பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் படவரைஞராக பதிவு செய்தவர்களும் 2016.01.31 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ள அல்லது புதுப்பித்துக்கொள்ள முடியும்

**11) பொது இடங்களிலும் வர்த்தக நிலையங்கள் முன்பாகவும்,வீதியோரங்களிலும் கழிவுகளை போடுதல் தடைசெய்யப்பட்டுள்ளது.**
சபையின் எல்லைக்குட்பட்ட பொது இடங்களிலும் வர்த்தக நிலையங்கள் முன்பாகவும் வீதியோரங்களிலும் கழிவுப்பொருட்களை போடுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள் வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் கொள்கலனில் கழிவுப்பொருட்களை சேகரித்து அதனை அகற்றுவதற்கு எமது சபையின் உப அலுவலகங்களில் உரிய கட்டணத்தை செலுத்தி சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**12) கழிவகற்றல் சேவை**
தங்கள் வீட்டில் அகற்ற முடியாதுள்ள கழிவுகளை பிரதேச சபையில் கட்டணம் செலுத்தினால் சபையால் அக்கழிவுகள் அகற்ற நடவடிக்கைகள் எடுக்க முடியும்

**13) நீர் வழங்கல் சேவை**
பொது மக்கள் தங்கள் வீட்டின் விசேட நிகழ்வுகளிற்கு குடிநீர் தேவைப்படின் பிரதேச சபையில் கட்டணம் செலுத்துவதன் மூலம் குடிநீரைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**14) கனரக வாகன சேவைகள்**
மோட்டக்கிரேற்றர்,பக்கோ,கலிபௌசர்,றோலர் போன்ற கனரக வாகன சேவைகளை பெறுவதற்கு தலைமைக்காரியாலயத்தில் குறித்த சேவைக்கான கட்டணங்களை செலுத்தி வாகன சேவைகளை பெற்றுக்கொள்ளலாம்.

**15) பொது சுகாதாரம் பேணல்**
சபை எல்லைக்குள் அபிவிருத்தி செய்யப்படாமலும் பற்றைகள் வளர்ந்தும் பொது சுகாதாரத்திற்கு இடையூறாக உள்ள காணி உரிமையாளர்கள்/ பராமரிப்பாளர்கள் பற்றைகளைத் துப்பரவு செய்து பொது சுகாதாரத்தை பேணுவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**இராசரத்தினம் அறிவரசன்,**
**செயலாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை**
**காங்கேசன்துறை (மல்லாகம்)**
**29.12.2015**

## வலிகாமம் வடக்குப் பிரதேச சபை
### காங்கேசன்துறை ( மல்லாகம்)
### சந்தைகள், இறைச்சிக்கடைகள் என்பன குத்தகைக்கு / வாடகைக்கு விடுவதற்கான
## பகிரங்க கேள்வி அறிவித்தல் - 2016

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட சந்தைகள், இறைச்சிக்கடைகள், என்பன

01.01.2016 தொடக்கம் 31.12.2016 வரை குத்தகைக்கு / வாடகைக்கு விடுவதற்கான பகிரங்க ஏலத்தில் விடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஏலத்தில் பங்குபற்ற விரும்புபவர்கள் மல்லாகம், தெல்லிப்பளை உப அலுவலகங்களில் கேள்வி வைப்புப் பணத்தினையும், கேள்விப் பிணைப் பணத்தினையும் செலுத்திப் பற்றுச் சீட்டை 29.12.2015 திகதி 3.00 பி.ப மணி வரை பெற்றுக்கொள்ளவும்

01. காலம் : 29.12.2015 பி.ப 3.30 மணி
02. இடம் : தலைமை அலுவலகம், வலி.வடக்கு பிரதேசசபை.மல்லாகம்

| இல | விபரம் | கேள்விப் பிணைப்பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் பத்திரப் பணம் (மீளளிக்க முடியாதது) | மாத வாடகை |
|---|---|---|---|---|
| | **மல்லாகம் உப- அலுவலகம்** | | | |
| 01. | அளவெட்டி மலைவேம்படிச் சந்தை | 1000.00 | 1,000.00 | - |
| 02. | இறால் மடம் சந்தை | 250.00 | 250.00 | - |
| 03. | மல்லாகம் மாட்டிறைச்சிக்கடை | 1000.00 | 1,000.00 | 1750.00 |
| 04. | மல்லாகம் ஆட்டிறைச்சிக்கடை | 1000.00 | 1,000.00 | 1750.00 |
| 05. | மல்லாகம் சந்தை கோழிக்கடை | 10,000.00 | 1,000.00 | 1750.00 |
| | **தெல்லிப்பளை உப அலுவலகம்** | | | |
| 01. | கூத்தன்சீமாச் சந்தை | 1,000.00 | 1,000.00 | - |
| 02. | கூத்தன்சீமாச் சந்தை – கோழிக்கடை | 1,000.00 | 1,000.00 | 1,050.00 |

ஏலம் சம்பந்தமான மேலதிக விபரங்களை தலைமை மற்றும் உப அலுவலகங்களில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வலிகாமம் வடக்கு பிரதேச சபை.
காங்கேசன்துறை (மல்லாகம்).
29.12.2015

திரு.இராசரத்தினம் அறிவரசன்.
செயலாளர்
வலிகாமம் வடக்கு பிரதேச சபை
காங்கேசன்துறை (மல்லாகம்)

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## WALK -IN – INTERVIEW
## Temporary Lecturer in Law

Walk in interview for the post of **Temporary Lecturer in Law** will be held at **4.15 p.m** on **08.01.2016** at the Board Room of this University.

Qualifications:

A Degree with specialization in the relevant subject with First or Second Class (Upper Division) Honours;
**OR**
A Degree with specialization in the relevant subject with Second Class (Lower Division) Honours;
**OR**
(a) A Degree with specialization in the relevant subject without Honours or any other degree with at least Second Class Honours, and (b) a recognized postgraduate degree in the relevant subject

Salary Scale: Rs. 26,020/= p.m (fixed)

Interested candidates with the required qualifications are expected to be present for the interview at time with relevant certificates, NIC and **self prepared application**.

**Registrar**
University of Jaffna
28.12.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பற்ற வகையில் மைதான மின்னிணைப்பு

### *பதிலளிக்க மாட்டேன் என்கிறார் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை செயலாளர்*

பளை, டிசெ.29

பளை பொது விளையாட்டு மைதானக் கட்டடத்தில் பாதுகாப்பற்ற நிலையில் உள்ள மின் இணைப்புத் தொடர்பாக ஊடகவியலாளர்களுக்குப் பதிலளிக்க முடியாது என்று தெரிவித்த பச்சிலைப்பள்ளி பிரதேச சபைச் செயலாளர், பதிலளிக்க முடியாது என்று நான் கூறினேன் என்று பத்திரிகையில் பிரசுரியுங்கள் என்றும் தெரிவித்தார்.

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கு உட்பட்ட பளை பொது விளையாட்டு மைதானக் கட்டடத்துக்கு நீண்டகாலமாக மின்சாரம் வழங்கப்படாதிருந்த நிலையில் கடந்த ஒரு வாரத்துக்கு முன்பு குறித்த பிரதேச சபையினால் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதன்போது மின்னிணைப்பு பாதுகாப்பானதாகப் பொருத்தப்படவில்லை எனவும், விளையாட்டு வீரர்களுக்கு எந்த நேரத்திலும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய வகையில் அது அமைந்துள்ளது என்றும் மைதானத்தை உபயோகிப்பவர்கள் தெரிவித்தனர். இது தொடர்பில் நடவடிக்கை எடுத்து பாதுகாப்பான மின் இணைப்பு வழங்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இது தொடர்பில் பச்சிலைப் பள்ளிப் பிரதேச சபையின் செயலாளர் மகாதேவனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது அவர் மேற்கண்ட விதத்தில் பதிலளித்தார்.

குறித்த விளையாட்டு மைதானத்துக்கான மின் இணைப்பு மைதானக் கட்டடத்தின் கீழ்ப் பகுதிக்கு மட்டுமே வழங்கப்பட்டது. கட்டடத்தின் மேல் தட்டில் இணைப்பு பாதுகாப்பாக இல்லை என்பதை நான் நேரில் சென்றுதான் பார்க்கவேண்டும். அதைப் பார்ப்பதற்கு நான் இன்னும் செல்லவில்லை, பாதுகாப்பற்ற மின்னிணைப்பு தொடர்பாக ஊடகவியலாளருக்கு எந்தப் பதிலும் கூற முடியாது. இதனைப் பத்திரிகையில் பிரசுரியுங்கள் என்றார் அவர். (ற-ஜ-ரி3,21)



## விற்பனைக் கண்காட்சி கிளிநொச்சியில் ஆரம்பம்

### இன்றும் நடைபெறும்

கிளிநொச்சி, டிசெ.29

கிளிநொச்சி மாவட்ட செயலகமும் வாழ்வின் எழுச்சித் திணைக்களமும் இணைந்து நடத்தும் முத்தான வியர்வை விற்பனைக் கண்காட்சி நேற்று கிளிநொச்சியில் டிப்போ சந்தியின் முன்பாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கண்காட்சியிலும், விற்பனையிலும் மாவட்டத்தைச் சேர்ந்த சிறு கைத்தொழிலாளர்கள், தானிய உற்பத்தியாளர்களுடைய பொருள்கள் பெருமளவு காட்சியப்படுத்தப்பட்டுள்ளதுடன், விற்பனையும் செய்யப்படுகின்றன.

இந்த நிகழ்வில் கரைச்சி பிரதேச செயலர் நாகேஸ்வரன், துறைசார் உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், உற்பத்தியாளர்கள், மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்தக் கண்ணாட்சி இன்றும் நடைபெறவுள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கண்காட்சியில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்ததாவது–

சிறிய உற்பத்திகள் மூலமும் மக்கள் தங்களுடைய வாழ்வாதரத்தை உயர்த்திக் கொள்ள முடியும். கடந்த கால வரலாற்றின் அடிப்படையிலும், அனுபவத்தின் அடிப்படையிலும் உள்ளூர் உற்பத்திகளுக்கான சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பது எமது கடப்பாடாகும்.

இவ்வாறான சிறுசிறு உள்ளூர் உற்பத்திகள் மூலம் மக்கள் தங்களுக்கான சிறந்த வாழ்க்கைத் தரத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். மக்களது வியர்வைகளைக் கொண்டு ஏற்பாடு செய்யப்படும் குறித்த செயற்பாடு மேலும் ஊக்குவிக்கப்பட வேண்டும். – என்றார்.

(ற-ஜ-ரி3)

## ஓட்டோ விபத்தில் ஒருவர் சாவு; இருவர் காயம்

பதுளை, டிசெ.29

அப்புத்தளையில் ஓட்டோ ஒன்று நேற்று முன்தினம் 20 அடி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளானது. அதில் பயணித்த ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் இருவர் காயமடைந்துள்ளனர்.

அப்புத்தளை வரலாற்றுப் புகழ்மிக்க ஆடிம் பங்களாவைப் பார்வையிடுவதற்குச் சென்றவர்களை ஏற்றிச்சென்ற ஓட்டோவே 20 அடி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளானது.

இந்தச் சம்பவத்தில் நிந்தவூரைச் சேர்ந்த 36 வயதான முஹம்மட் அனீஸ் என்பவரே உயிரிழந்துள்ளார்.

அத்துடன் சம்பவத்தில் காயமடைந்த மேலும் இருவர், வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். சம்பவத்தையடுத்து ஓட்டோவின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.(ற-ஜ-10)

## கொழும்பில் தமிழ்ப் பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்

### அமைச்சர் மனோ கணேசன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.29

கொழும்பு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ள பல தமிழ்ப் பாடசாலைகள் திட்டமிட்டு அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய இருக்கின்றது என்று தேசிய சகவாழ்வுக் கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

வத்தளை நகரசபை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற வருட இறுதிப் பெரு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

வத்தளையில் தமிழ்ப் பாடசாலை அமைக்கப்பட வேண்டும் என்பது இருபது ஆண்டு காலப் பிரச்சினை. இந்தக் காலகட்டத்துக்குள் எத்தனையோ தமிழ் மக்கள் பிரதிநிதிகள் ஆளும் அணிகளில் இருந்தார்கள். எத்தனையோ பேர் அமைச்சுப் பதவிகளிலும் இருந்துள்ளார்கள். அந்த வேளைகளில், அவர்களுக்கு சந்தர்ப்பங்கள் இருந்தன. அவர்களில் சிலரும் இயன்ற முயற்சிகளையும் செய்தார்கள்.

ஆனால், வத்தளையில் தமிழ் பாடசாலை இதுவரையில் அமைக்கப்படவில்லை என்பது தான் உண்மை.

இடப்பற்றாக்குறைகள் காரணமாக தமிழ் பிள்ளைகள் சிங்கள மொழிப்பாடசாலைகளில் கல்வி கற்கும் நிலைகள் உருவாகியுள்ளன. சிங்களப் பிள்ளைகளுக்கு தங்களது தாய் மொழியில் கல்வி கற்கும் உரிமை இருக்கும் போது, தமிழ்ப் பிள்ளை களுக்கு தங்களது தாய் மொழியில் கல்வி கற்க முடியாவிட்டால், இங்கே எப்படி சமத்துவம் மற்றும் சகவாழ்வு என்பவற்றை உருவாக்க முடியும்.

இது தொடர்பில் நான் ஏற்கனவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம், கல்வி இராஜாங்க அமைச்சர் வி. இராதாகிருஷ்ணன், மேல்மாகாணசபையின் ஆளுநர் கே. சி. லோகேஸ்வரன், முதல்வர் ஆகியோரிடம் கலந்துரையாடியுள்ளேன். எனவே இந்த முயற்சிக்காக அனைவரும் என்னுடன் இணைந்து செயற்படுங்கள்– என்றார்.

(ற-ஜ-ரி5)

## குளவிகள் கொட்டி பெண் காயம்

குளவிகளின் தாக்குதலுக்கு இலக்காகிய நிலையில், குடும்பப் பெண் ஒருவர் மந்திகை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

குறித்த பெண் தனது வளர்ப்பு ஆடு ஒன்றை மேய்ச்சலுக்குக் கட்டச் சென்ற சமயம், பற்றையொன்றில் இருந்த கூடுகளில் இருந்து வெளிவந்த குளவிகள் பல ஒன்று சேர்ந்து பெண்ணின் தலை, முகம் முழுவதும் சரமாரியாகக் கொட்டியுள்ளன.

குளவிகளின் தாக்குலுக்குள்ளான பெண் வரணி பிரதேச வைத்தியசாலைக்கு உடனடியாகக் கொண்டு செல்லப்பட்டு, அங்கு ஆரம்ப சிகிச்சை அளிக்கப்பட்ட நிலையில், மந்திகை ஆதார வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் வண்டி மூலம் மாற்றப்பட்டார்.

இந்தச் சம்பவத்தில் குறித்த நபரின் வளர்ப்பு ஆடும் குளவிகளின் கடும் தாக்கத்துக்கு இலக்காகி ஆபத்தான நிலையில் உள்ளது. அதற்கும் மிருக வைத்தியசாலை உதவியாளர் ஒருவர் உடனடியாக வரைவழைக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது. (ற-ஜ-122)

**Personal class** தொடர்பு: 072 171 9052
தரம் 03 - A\L வரையான மாணவர்களுக்கு English, Spoken with Grammar, சிங்களம் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும். ஏனைய பாட ஆசிரியர்களும் ஒழுங்கு செய்து தரப்படும். (67159)(11.15)

**உடனடி விற்பனைக்கு**
கடைக்குரிய தளபாடங்கள் மற்றும் வீட்டுத் தளபாடங்கள் உடனடி விற்பனைக்கு உண்டு.
021 222 0648, 077 531 6293 (சி/28185)

**வாடகைக்குத் தேவை** தொடர்பு: 077 844 3590 077 450 2218
யாழ்.நகரை அண்மித்த பகுதிகள் அல்லது யாழ்.நகரிலிருந்து மானிப்பாய், மல்லாகம், உரும்பிராய், இருபாலை சந்தி வரையான பிரதான வீதிகளை அண்மித்த பிரதேசங்களில் களஞ்சியப்படுத்தல் தேவைகளுக்கான வசதிகளுடன் கூடிய வீடு அல்லது கடைத்தொகுதி வாடகைக்கு தேவை (67157)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**




மதுபாலசிங்கம்- கௌசலாதேவி
தம்பதியரின் சிரேஷ்ட புதல்வன்
செல்வன்
**மதுபாலசிங்கம் மதுரஹீதன்**
29.12.2015 அன்று கொழும்பு BMICHஇல் BSc (Surveying Science, Specialized in GIS and Cartography) பட்டம் பெறுவதையிட்டும் மேலும் பல பட்டங்களைப் பெறுவதற்கும் வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
குடும்ப நண்பர்கள்
கனகாம்பிகை,
கிருஷ்ணகுமார், மாதுமை.
புலவனார் வீதி, கல்வியங்காடு.

**சேவை நலன் பாராட்டு**




**திரு. நாகலிங்கம் கணேசநாதன்**
(நிறைவேற்று உத்தியோகத்தர், இலங்கை வங்கி – சுன்னாகம்)

அகவை அறுபது காணும் அறிவின் சுடரே!
அகமதில் ஆழ்ந்த ஆற்றலின் இரவியே!
அரிய சேவைக்கு ஆணித்தரமான பெரியோனே!
இலங்கை வங்கியின் இனிய ஊழியனே!
இலகுவாக இன்னலான பணியையும்
இயல்பாய் ஆற்றுவோனே
எங்கள் மனம் கவர்ந்த வங்கியாளன் நீயே!
கடமையை கண்ணாகக் கொண்டவனே
நிறைவேற்று உத்தியோகமதில் நிகரில்லா நிர்வாகியே!
நித்திலமதில் நின் பணியை நினைந்து போற்றுவோமே!
மாங்கலமாய் மகிழ்வுடனே
மனையோரும் பெரியோரும் வாழ்த்த
வங்கி ஊழியர் நும் பணிக்கு வாகை சூட
மாசற்ற மாருதியாய் பல்லாண்டு
காலம். பல்கோடி வளம் பெற்று வாழியவே!

முகாமையாளரும்,
ஊழியர்களும்
இலங்கைவங்கி கேந்திரக்கிளை,
சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படகு

இருவரில் ஒரு மீனவர் அலையில் அடித்துச் செல்லப்பட்டுக் காணாமற் போயுள்ளார். மற்றையவர் நீந்திக் கரை சேர்ந்திருப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுக்காலை 4 மணியளவில் இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றது. உயிரிழந்தவர் கடற்கரை வீதி, பருத்தித்துறையைச் சேர்ந்த அந்தோனிமுத்து ஜெனீபட் (வயது -34)என அடையாளம்காணப்பட்டுள்ளார். அவருடன் கூடப் படகில் தொழிலுக்குச் சென்ற தும்பளைப் பகுதியைச் சேர்ந்த ஜோர்ச் (வயது-37) என்பவர் அலையில் அடித்துச் செல்லப்பட்டுக் காணாமற்போயுள்ளார். அவரைத் தேடும் பணிகள் கடற்படையினரின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருவதாகப் பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்

நேற்று நாங்கள் வழமை போல தொழிலுக்குச் சென்ற நிலையில் கடற்கொந்தளிப்பு அதிகமாகித் திடீரென அலை மோதிப் படகு தூக்கியெறியப்பட்டது. மூவரும் திக்கு திக்காக விழுந்த நிலையில் நான் நீந்திக் கரை சேர்ந்தேன். ஏனையவர்களைத் தேடிப் படகில் மீண்டும் கடலுக்குச் சென்றபோது ஜெனீபேட்டின் சடலம் கரையொதுங்குவதை அவதானித்தோம். அவரது சடலத்தை மீட்டதோடு பொலிஸாருக்குத் தகவல் வழங்கினோம். ஜோர்ச்சை தேடிய போதும் அவர் கிடைக்கவில்லை என நீந்திக் கரை சேர்ந்த முனையை சேர்ந்த மரியாம்பிள்ளை அன்ரனி ஜேசுதாஸ் தெரிவித்தார்

தகவல் கிடைத்ததும் சம்பவ இடத்துக்குச் சென்ற பருத்தித்துறை பொலிஸார் சடலத்தை மீட்டதோடு விசாரணைகளையும் மேற்கொண்டனர்.

இது தொடர்பான மரண விசாரணைகளை பதில் நீதிவான் பா சுப்பிரமணியம் மேற்கொண்டார். சடலம் உடற்கூற்று பரிசோதனையின் பொருட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பருத்தித்துறைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். காணாமற்போன மீனவரைத் தேடும் பணிகள் கடற்படையினரின் உதவியுடன் நேற்றுப் பகல் முதல் மேற்கொள்ளப்பட்டு வருவதாகப் பருத்தித்துறை பொலிஸார் மேலும் கூறினர்.(த-109)

## கத்திமுனையில்

பகுதியில் உள்ள வீடு ஒன்றுக்குள் நுழைந்து வீட்டில் நிறுத்தி வைத்திருந்த மேட்டார் சைக்கிளையும் இந்தக் கும்பல் கொள்ளையடித்துச் சென்றுள்ளது. நெல்லியடிப் பொலிஸாரின் தீவிர விசாரணையின் பின்னர் நேற்றுப் பிற்பகல் வல்லைப் பகுதியில் கொள்ளையடிக்கப்பட்ட மோட்டார் சைக்கிள் அநாதரவாக நின்ற நிலையில் மீட்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, வடமராட்சி வதிரியிலிருந்து மாலுச் சந்திக்குச் செல்லும் பிரதான சந்தியில் உள்ள வீட்டின் மதிலால் ஏறிக் குதித்த நான்கு பேர் அடங்கிய கொள்ளைக் கும்பல் வீட்டின் பின் பக்கத்திலிருந்த குளியல் அறையின் லெவல் சீட்டைப் பிரித்து உள் நுழைந்து ஆழ்ந்த உறக்கத்திலிருந்தவர்களைக் கத்தி முனையில் அச்சுறுத்தி 50 லட்சம் பெறுமதியான நகைகளையும் வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிள் ஒன்றையும் 15 ஆயிரம் பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

பின்னர் கரவெட்டியில் உள்ள வேறொரு வீட்டில் நுழைந்த நான்கு பேர் அடங்கிய கும்பல் சுமார் நான்கு பவுண் நகையையும் பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இந்தநிலையில் நேற்று அதிகாலை 12.30 மணியலவில் கரவெட்டி கிழவி தோட்டம் பகுதியில் நான்கு பேர் கொண்ட கும்பல் வீடு ஒன்றுக்குள் புகுந்து அங்குள்ளவர்களைக் கத்திமுனையில் அச்சுறுத்தி அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளையும் கொள்ளை அடித்துச் சென்றுள்ளனர்.

இதையடுத்து பாதிக்கப்பட்டவர்கள் மேற்கொண்ட முறைப்பாட்டையடுத்து உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜவ்பர் வழிநடத்தலில் நெல்லியடி பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழு பல்வேறு இடங்களில் மேற்கொண்ட தேடுதலின் பின்னர் வடமராட்சி-யாழ். பிரதான வீதியில் வல்லைப் பகுதியில் உள்ள பற்றைக் காணியிலிருந்து கொள்ளை அடிக்கப்பட்ட மோட்டார் சைக்கிளை நெல்லியடி பொலிஸார் மீட்டுள்ளனர். மேலதிக விசாரணையை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த-109)

## தமிழ் மக்கள்

தலைமைக் குழுக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மேலும் பலப்படுத்த அயராது பாடு படுவோம் என்றும், கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் ஜனநாயக வழியில் போராடி தமிழ் மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வை வென்றெடுப்போம் என்றும் அவர் கூறினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சி தவிர்ந்த ஈ.பி.ஆர். எல்.எவ்., ரெலோ, புளொட் ஆகிய மூன்று பங்காளிக் கட்சிகளும் தமிழ் மக்கள் பேரவையில் இணைந்து செயற்படவுள்ளன என்று நேற்று சில உள்ளூர் தமிழ் ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன. இது தொடர்பில் ரெலோ வின் தலைவர் செல்வம் அடைக்கலநாதனிடம் நேற்று உதயன் வினவியபோதே அவர் மேற்படி விடயங்களைத் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பிளவு படுத்தி தமிழ் மக்கள் பேரவையைப் பலப்படுத்தும் நோக்குடன் சில உள்ளூர் தமிழ் ஊடகங்கள் தங்கள் பணிகளை ஆரம்பித்துள்ளன என்றும், இவ்வாறான செயற்பாடுகள் தமிழினத்துக்குச் செய்யும் மாபெரும் துரோகங்கள் என்றும் அவர் இதன் போது சுட்டிக்காட்டினார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் மனதார விரும்பிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒருபோதும் சிதைக்கமுடியாது என்றும், வடக்கு-கிழக்கு தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்றைக்கும் தனது கொள்கை கோட்பாடுகளில் இருந்து விலகாமல் தமிழ் மக்களின் உரிமைக்காகத் தீர்வுக்காகத் தொடர்ந்து குரல் கொடுக்கும் என்றும் இதன் போது அவர் மேலும் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து வெளியேறி தேர்தல்களில் தொடர் தோல்விகளைச் சந்தித்தவர்களும், தேசியப் பட்டியல் மூலம் தமக்கு நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகள் கிடைக்காதவர்களும் சேர்ந்தே தமிழ் மக்கள் பேரவையை உருவாக்கியுள்ளார்கள் என்றும், இந்த அமைப்பை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்றும் ரெலோவின் உப தலைவரும் கிழக்கு மாகாணசபை உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரம் (ஜனா) நேற்று உதயனிடம் தெரிவித்தார்.

எதிரிகள் துரோகிகள் இணைந்து உருவாக்கியுள்ள இந்தத் தமிழ் மக்கள் பேரவையில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் சேர்ந்து இணைத் தலைமைப் பதவியைப் பெற்றுள்ளமை கவலையளிக்கும் விடயம் என்றும், இது முதலமைச்சர் விக்னேஸ்வரனின் வயதிற்கும் அவரின் பக்குவத்திற்கும் அழகல்ல என்றும் அவர் குறிப்பிட்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனின் இராஜதந்திர நகர்வுகள் மூலம் அரசியல் தீர்வை வென்றெடுக்கும் போராட்டத்தில் தமிழ் ஈழ விடுலை இயக்கம் (ரெலோ) அயராது செயலாற்றிவருகின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (த-சி)

## ஒயில் கலந்த

அந்த நிதியை உள்ளூராட்சி அமைச்சுக்கூடாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எவ்வளவு காலத்துக்கு நிதி வழங்கப்படும் என்பது தொடர்பில் எதுவித தகவல்களும் தெரிவிக்கப்படவில்லை.

உடுவில் மற்றும் தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில், நிலத்தடி நீரூடன் கழிவு ஒயில் கலந்துள்ளமையினால் அவற்றைப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் குடிதண்ணீர் விநியோகம், பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு வழங்கப்பட்டது. குடிதண்ணீர் விநியோகத்திற்கான நிதி ஒதுக்கீடுகள் மற்றும் குடிதாங்கிகள் என்பன இடர்முகாமைத்துவ அமைச்சினால் வழங்கப்பட்டது.

இதே காலத்தில், குடிதண்ணீரில் கழிவு ஒயில் கலப்புத் தொடர்பாக ஆய்வுகள் இடம்பெற்றது. இந்த ஆய்வுகளின் அறிக்கைகள் வெளியாகியுள்ளது. அதில், குடிதண்ணீரில் கழிவு ஒயில் கலக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து இடர் முகாமைத்துவ அமைச்சு, குடிதண்ணீர் விநியோகத்திற்கு வழங்கி வந்த நிதியை நிறுத்தியுள்ளது. இதனால் தொடர்ந்து குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்வதில் இடர்பாடுகளை ஏற்பட்டிருந்தது.

இவ்வாறானதொரு நிலையில்வடக்குமாகாண பிரதம செயலாளரினால் வலி.வடக்கு மற்றும் வலி.தெற்குப் பிரதேசசபைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில், குடிதண்ணீர் விநியோகத்தை தொடர்ந்து முன்னெடுக்குமாறும், அதற்குரிய நிதியை உள்ளூராட்சி அமைச்சுக்கு ஊடாக வழங்குவதாகவும் தெரிவித்துள்ளார். (த-5)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்
19 . 07 . 1941

மறைவு
30 . 11 . 2015

அமரர் வல்லிபுரம் வயித்திலிங்கம்

(யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியை பிறப்பிடமாகவும் புதுமடம் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்டவர்)

கடந்த 30.11.2015 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் வல்லிபுரம் வயித்திலிங்கம் அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (30.12.2015) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

[இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்]

உடுவில் தெற்கு,
புதுமடம் மானிப்பாய்.


குடும்பத்தினர்.

---

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
20 . 03 . 1938

மறைவு
29 . 12 . 2013



அமரர் பொன் தெய்வேந்திரம்


இரு வருடங்கள் கடந்தேகிவிட்டன இருநூறு யுகத்தின்
வலி தந்தது உன் இழப்பு
தாயகத்தில் ஆறவில்லை எங்கள் மனம்
தூயவனே நீள் துயில் நீங்காயோ
மாண்டு முடிவது தான் வாழ்க்கை எனில்
ஆண்டுகள் பல கழிந்தாலும்
ஆறாது உன் நினைவு

என்றும் நினைவில்...
காமாட்சி அம்பாள் ஆலயமும்
காமாட்சி அம்பாள் திருமண மண்டபமும்.

நிர்வாகத்தினர்
பலாலிவீதி, உரும்பிராய்.

---

# 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
25.02.1947

மறைவு
16.12.2008

அமரர்

நல்லையா தவகுலசிங்கம்

திதி : 29.12.2015

கடமையே கண் எனக்கருதி
செய்யும் தொழிலே தெய்வம் எனப்
போற்றி வாழ்ந்து வந்த எம்
தந்தையே ஆண்டுகள் பல
சென்றாலும் பசுமையான உங்கள்
நினைவுகள்என்றும் மாறாது
நிலைத்திருக்கும்.

குடும்பத்தினர்.

43, கோட் ரோட், மல்லாகம்.
ஏழாலை வடக்கு ,ஏழாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்முனை நகர அபிவிருத்தித் திட்டத்துக்கு அங்குள்ள தமிழ் மக்கள் கடும் எதிர்ப்பு

## ஆயிரக்கணக்கானோர் திரண்டு நேற்றுப் பேரணி



கல்முனை,டிசெ.29

கல்முனையை மையப்படுத்தி நடைபெறவுள்ள நகர அபிவிருத்தித் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று சிவில் அமைப்புக்கள், மகளிர் அமைப்புக்கள், த.தே.கூட்டமைப்பு என்பன இணைந்து பேரணி ஒன்றை நடத்தியுள்ளன.

கல்முனை மாநகரசபைப் பிரிவில் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய நகர அபிவிருத்தித் திட்டத்துக்கு கல்முனை மாநகரத் தமிழ் மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர். அதன் தொடர்ச்சியாகவே இந்தப் பேரணி நடத்தப்பட்டுள்ளது.

அதில் தமிழ் மக்கள் சார்ந்த மக்களின் பிரதிநிதிகள், பிரமுகர்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள், மகளிர் அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் என ஆயிரத்துக்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

கல்முனை சர்வார்த்த சித்தி விநாயகர் ஆலயத்தில் ஒன்று திரண்ட மக்கள், பேரணியாக கல்முனை தரவை சித்தி விநாயகர் ஆலய முன்றிலின் வழியாக, கல்முனை நகரூடாகச் சென்று கல்முனைத் தமிழ்ப்பிரிவு பிரதேச செயலகத்தை அடைந்தனர்.



"தேர் ஓடும் ஆலயக் காணிகளில் கார் ஓடும் அபிவிருத்தி தேவையில்லை", "சென்னை மக்கள் வெள்ளத்தில் பட்ட அவலம், கல்முனை தமிழ் மக்களும் பட வேண்டுமா?," "நன்னீர் மீனவர் களின் வாழ்வில் அடிக்காதே", "தமிழ் மக்களின் காணிகளைச் சூறையாடவா நகர அபிவிருத்தித் திட்டம்?'', ''மக்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் திட்டம் வேண்டாம்", "பாரம்பரிய தமிழ்க் கிராமமான துரவந்தியமேடு கிராமம் இந்தத்திட்டத்தின் மூலம் இல்லாது போய் விடும்'', ''தூர நோக்கற்ற செயற்பாட்டை நிறுத்து" போன்ற வாசகங்களைக் கொண்ட பதாகைகளைப் பேரணியில் சென்றோர் ஏந்தியிருந்தனர்.

இந்த நகர அபிவிருத்தித் திட்டத்துக்கு தமிழ் மக்கள் சார்பில் எதிர்ப்புத் தெரிவித்தும், கைவிடுமாறு கோரியும் அம்பாறை மாவட்ட தமிழர் மகா சங்கம் சார்பிலான மனுக்கள் கல்முனை மாநகர சபை தமிழ், முஸ்லிம் பிரதேச செயலகங்களில் கையளிக்கப்பட்டன.

ஜனாதிபதி, பிரதமர், சம்பந்தப்பட்ட அமைச்சர் முதலானோருக்கு இந்த மனுக்களை அனுப்புமாறும் கோரப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட அரசியல்வாதிகள் தமது கருத்துக்களைத் தெரிவித்தனர்.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்ததாவது:-

ஒரு நகரத்தை அபிவிருத்தி செய்யும் போது, அங்கு வாழும் அனைத்துத் தரப்புக்களுடனும் சேர்ந்து ஒரு சுமுகமான தீர்வுக்கு வந்த பின்னரே அந்த நகரத்தை அபிவிருத்தி செய்ய எந்தத் தரப்பாக இருந்தாலும் முயல வேண்டும். அதுதான் நியதி. அதனை விடுத்து ஒரு சாராருக்கு மாத்திரம் பயன்தரும் செயற்பாட்டை செய்ய முயல்வது அந்தப் பிரதேசத்தில் வாழும் மக்களைச் சீண்டிப்பார்க்கும் செயற்பாடாகும்.

கல்முனையில் வாழும் தமிழ் மக்களின் அபிலாசைகள், ஆலோசனைகள், விருப்பு வெறுப்புக்கள் என்பவற்றை நகர அபிவிருத்தியுடன் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் கவனத்தில் எடுத்து அதனை அரச உயர் மட்டத்துடன் கலந்துரையாடிய பின்னரே இந்த அபிவிருத்தித் திட்டம் தொடர்பான செயற்பாட்டைமேற்கொள்ள வேண்டும். - என்றார்.



நாடாளுமன்றஉறுப்பினர்கோடீஸ்வரன் தெரிவித்ததாவது:-

கல்முனையில் 85 வீதம் பெரும்பான்மையாக வாழும் தமிழர் பிரதேசத்தின் ஒட்டுமொத்தமான நிலம், பொருளாதாரம் என்பனவற்றை குழிதோண்டிப் புதைக்கும் செயற்பாட்டின் ஒரு கட்டமே இன்று ஒரு சாரார் எடுத்திருக்கும் இந்த நகர அபிவிருத்தித் திட்டமாகும்.

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த எத்தனிக்கும் அமைச்சர்கள் எமது தமிழ் மக்களுடனும் அவர்களது பிரதிநிதிகளுடனும் பேசிக் கலந்தாலோசித்த பின்னரே இவ்வாறான திட்டங்களை மேற்கொள்ள முன்வரவேண்டும் - என்றார்.

கிழக்கு மாகாணசபைஉறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்ததாவது:-

கல்முனைப் பிரதேசமானது அன்றிலிருந்து இன்றுவரைக்கும் தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் ஒன்றாக வாழ்ந்து வருகின்ற பிரதேசம் என்பதால் எந்தத் திட்டமாக இருந்தாலும், தமிழ் மக்களையும் திருப்திப்படுத்தும் திட்டமாகவே அது அமைய வேண்டும் என்பதை அனைவரும் கருத்தில் எடுத்துச் செயற்படவேண்டும்.

இந்தப் பிரதேசத்தை பொறுத்தவரையில், பல அபிவிருத்தித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. அவை அனைத்தும் தமிழ் மக்களைப் புறக்கணித்த அபிவிருத்திகளாகவே அமைந்தமை அனைவரும் அறிந்த உண்மை. அவ்வாறான திட்டங்களை இனிமேலும் அனுமதிக்க முடியாது - என்றார்.

(ற-ஐ-30)

# "ரிக்கெட்" எடுக்காத பயணிகளிடமும் தண்டப்பணம் அறவிடப்பட வேண்டும்

## இ.போ.ச. வடபிராந்தியக் காப்பாளர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.29

பயணப் பற்றுச்சிட்டை எடுக்காது பயணம் செய்த குற்றச்சாட்டில், பற்றுச்சிட்டை வழங்காத நடத்துநருக்கு தண்டப்பணம் அறவிட்டு தற்காலிகப் பணி நீக்கம் செய்வது போல், பயணிகளுக்கும் தண்டப் பணம் அறவிடப்பட வேண்டும். - இவ்வாறு இலங்கைப் போக்குவரத்து சபையின் வடபிராந்தியக் காப்பாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவித்துள்ளதாவது:-

பஸ்ஸில் பயணம் செய்யும் பயணிகள் பயணப் பற்றுச்சிட்டை எடுக்க வேண்டியது கட்டாயமானது. காப்பாளர்களாகிய நாங்களும் அவர்களிடம் பயணப்பற்றுச்சிட்டை கொடுத்து பணத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். பஸ்ஸில் பயணிகள் அதிகமாக இருந்தால் சில சமயங்களில் ஓரிருவருக்கு பயணப்பற்றுச்சிட்டை கொடுக்கத் தவறி விடுவோம்.

ஆனாலும் சத்தமாக சகல பயணிகளுக்கும் கேட்கும்படி பயணப்பற்றுச்சிட்டை பெற்றுக் கொள்ளும்படி அறிவுறுத்துவோம். அப்போதும் கூட சிலர் பயணப் பற்றுச்சிட்டை எடுத்துக் கொள்ளத் தவறுகின்றனர். இதனால் காப்பாளர்கள் தான் தண்டனைக்கு உள்ளாகுகின்றோம்.

இதேவேளை - பரிசோதிக்க வரும் அதிகாரிகள் பயணப் பற்றுச்சிட்டை பெற்றுக் கொள்ளாத குற்றத்துக்காக பயணிகளைத் தண்டிப்பதுமில்லை. தண்டப்பணம் அறவிடுவதும் இல்லை. இது நியாயமற்ற செயலாகும்.

இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனமெடுக்க வேண்டும். பயணப்பற்றுச்சிட்டை கொடுக்காத காப்பாளர்களுக்குத் தற்காலிக [illegible] தண்டனையாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இதனால் நாங்கள் பொருளாதார நெருக்கடிகளுக்கும் உள்ளாக வேண்டியுள்ளது.

பயணப்பற்றுச்சிட்டை கொடுக்காத குற்றத்துக்காகக் காப்பாளர்களுக்கு விசாரணைகள் நடத்தப்படும். ஆனால் அதிலும் பக்கச்சார்புகள் உள்ளன. இதனால் ஒட்டுமொத்தப் பாதிப்பும் காப்பாளர்களுக்குத்தான்.

தண்டனைகளைக் காப்பாளர்களுக்கு மட்டும் நடைமுறைப்படுத்தாமல் பயணப்பற்றுச்சிட்டை எடுக்காத குற்றத்துக்காக பயணிகளுக்கும் தண்டனைகள் வழங்கப்படவேண்டும் - என்றனர்.

(ற-ஐ-10)

## ஆன்மிக அருளுரை

யாழ்ப்பாணம், டிசெ.29

சின்மயா மிஷனால் நடத்தப்படும் ஆன்மிக அருளுரைக்கான நேரம் மாற்றப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வடக்கு வீதியிலுள்ள மகேஸ்வரன் மணிமண்டபத்தில் நடத்தப்பட்டு வந்த ஆன்மிக அருளுரைகள், இனி வரும் நாள்களில் பிரதி செவ்வாய்க்கிழமைகளில் மாலை 6.30 மணிக்கு நடைபெறும்.

இந்த அருளுரைகளை யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்ய சுவாமிகள் நிகழ்த்துவார். (ற-ஐ-ரி5)

## வடமாகாண சபையின் விசேட அமர்வு நாளை

யாழ்ப்பாணம், டிசெ.29

வடக்கு மாகாண சபையின் விசேட அமர்வு நாளை புதன்கிழமை காலை 9.30 மணிக்கு இடம் பெறவுள்ளது என்று அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் கல்வி நியதிச் சட்டம் தொடர்பாக ஆராய்வதற்காகவே இந்தக் கூட்டம் கூட்டப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ற-ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏ-35 வீதியிலுள்ள 4 பாலங்கள் அடுத்த ஆண்டு திருத்தப்படும்

## வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள் தகவல்

கிளிநொச்சி, டிசெ.29

பரந்தன் - முல்லைத்தீவு பிரதான வீதியில் அமைந்துள்ள 4 பெரும் பாலங்கள் 2016 ஆம் ஆண்டு "பலவீனமான பாலங்கள்" என்னும் செயற்றிட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட உள்ளன என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் முல்லைத்தீவு மாவட்ட நிறைவேற்றுப் பொறியியலாளர் குகானந்தன் தெரிவித்துள்ளார்.

பரந்தன் - முல்லைத்தீவு பிரதான வீதியான ஏ- 35 வீதியில் உள்ள சில பாலங்கள் திருத்தப்பட்டுள்ள அதே வேளை, குறித்த வீதியில் இன்னமும் திருத்தப்படாது காணப்படும் பழைய பாலங்கள் மோசமான நிலையில் காணப்படுகின்றன என்று பொது மக்கள் குற்றஞ்சாட்டியிருந்தனர். அது தொடர்பில் வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பரந்தனுக்கும் முல்லைத்தீவுக்கும் இடைப்பட்ட வீதியிலுள்ள பெரும்பாலான பழைய பாலங்கள் அகற்றப்பட்டு, அந்த இடங்களில் பொருத்தமான முறையில் வீதியை விட அகலமான அளவில் பாதுகாப்பான வகையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

எனினும் நான்கு பாலங்கள் புனரமைக்கப்படாது, பாலத்தின் கீழ் பகுதிகள் உடைந்து சிதைவடைந்த நிலையில் கம்பிகள் வெளியே துருப்பிடித்த வண்ணமும், அகலிக்கப்படாமலும் உள்ளன. இவற்றில் ஒரு பாலத்தில், வீதியின் ஒரு வளைவில் பக்க அணைக்கட்டுகள் எவையும் இன்றி எச்சரிக்கையைக் குறிக்கும் கம்பிகள் மட்டுமே நடப்பட்டுள்ளன.

> "நான்கு பாலங்கள் புனரமைக்கப்படாது, பாலத்தின் கீழ்ப் பகுதிகள் உடைந்து சிதைவடைந்த நிலையில் கம்பிகள் வெளியே துருப்பிடித்த வண்ணமும் அகலிக்கப்படாமலும் உள்ளன."

இதனால் இந்தப் பாதையூடாக வாகனங்களில் பயணிப்போர் எந்த நேரமும் ஆபத்தை எதிர்நோக்கிய வண்ணமே பயணிக்க வேண்டிய அவல நிலை உள்ளது என்று பொது மக்கள் குற்றம் சாட்டியிருந்தனர்.

அத்தோடு குறித்த வீதியானது வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பராமரிப்பிலுள்ள வீதியாகையால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் குறித்த பாலங்களையும் புனரமைத்து உதவ வேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இது தொடர்பில் கிளிநொச்சி வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிறைவேற்றுப் பொறியியலாளர் அரங்கனுடன் தொடர்புகொண்டு கேட்டபோது:

இந்தப் பாலங்களில் ஒரு பாலம் மட்டுமே தமது அதிகார எல்லைக்கு உட்பட்டது என்றும், 2016 ஆம் ஆண்டு குறித்த பாலத்தை ஜெய்க்கா திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்தார்.

ஏனைய மூன்று பாலங்களும் முல்லைத்தீவு வீதி அபிவிருத்தி அதிகார சபை எல்லைக்கு உட்பட்டவை என்றும் குறிப்பிட்டார்.

தொடர்ந்து வீதி அபிவிருத்தி அதிகார சபையின் முல்லைத்தீவு மாவட்ட நிறைவேற்றுப் பொறியியலாளர் குகானந்தனிடம் இது குறித்துக் கேட்ட போது; தமது அதிகார எல்லைக்கு உட்பட்ட ஏ 35 வீதியில் புனரமைப்புச் செய்யப்படாத மூன்று பாலங்களும் 2016 ஆம் ஆண்டு "வீக் பிறிட்ஜெஸ்" (பலவீன மான பாலங்கள்) என்னும் திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன என்று பதிலளித்தார். அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (ற-ஜ-102,21)



## திருக்கோவிலில் மினி சூறாவளி

எருவில், டிசெ.29

திருக்கோவில் பிரதேசத்தில் நேற்று மாலை பலத்த கடும் காற்றுடன் கூடிய மினி சூறாவளி வீசியதால் திருக்கோவில் விநாயகபுரத்தில் உள்ள பல வீடுகள், கடைகள் என்பன பலத்த சேதத்துக்குள்ளாகியுள்ளன. காயமடைந்த ஒருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்று மாலை வேளையில் மழையுடன் கூடிய கடும் காற்று அம்பாறை மாவட்டத்தின் பல பகுதிகளிலும் வீசியது. திருக்கோவில் விநாயகபுரத்தில் உள்ள வீடுகளின் கூரைகள், கடைகள், சுற்றிவரவுள்ள மதில்கள் என்பன சேதத்துக்குள்ளாகின.

வீட்டுக்குள் இருந்த விநாயகபுரத்தைச் சேர்ந்த ஒருவர், கடும் காற்றால் தூக்கியெறியப்பட்ட தகரத்தால் தாக்கப்பட்டுக் காயமடைந்துள்ளார். அவர் தற்போது திருக்கோவில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## தொற்றா நோய்கள் குறித்து வவுனியாவில் விழிப்புணர்வு

வவுனியா, டிசெ.29

"தொற்றா நோய்களுக்கு எதிராக அணிதிரள்வோம்" எனும் தொனிப்பொருளிலான தொற்றா நோய்கள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுநாளைபுதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு வவுனியாவில் இடம்பெறவுள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

சமூக விழிப்புணர்வுக்கான மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில், இயற்கை வேளாண் விஞ்ஞானி கலாநிதி கே.நம்மாழ்வாரின் இரண்டாம் வருட நினைவு தினத்தை முன்னிட்டு இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சமூகவிழிப்புணர்வுக்கான மக்கள் அமைப்பின் தலைவர் எம்.ஜி.ரட்ணகாந்தன் தலைமையில் வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் விரிவுரையாளர்கள், பொது அமைப்பைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டு உரையாற்றுவார்கள் என ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (ற-ஜ-21)

## ஆள்கடத்தல் குற்றச்சாட்டில் தேடப்பட்டோர் சரணடைவு

மட்டக்களப்பு,டிசெ.29

சித்தாண்டிப் பிரதேசத்தில் ஆள் கடத்தல் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் தேடப்பட்டு வந்த இருவர் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளனர்.

சரணடைந்த இருவரையும் எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றபதில் நீதவான் பேரின்பம் பிறேம்நாத் உத்தரவிட்டுள்ளார்.

சித்தாண்டிப் பகுதியைச் சேர்ந்த ரெ. புண்ணியமூர்த்தி என்பவர் 2007 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 17 ஆம் திகதி தனது வீட்டில் இருந்த வேளை சிலரால் அழைத்துச் செல்லப்பட்டு காணாமற் போயிருந்தார்.

குறித்த நபர் காணாமற் போன சம்பவத்துடன் ஐந்து பேர் தொடர்புபட்டுள்ளனர் என்று உறவினர்கள் ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணையின்போது சாட்சியமளிக்கையில் குறிப்பிட்டிருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஏற்கெனவே இருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். தற்போது மேலும் இருவர் சரணடைந்துள்ளனர்.

இது தொடர்பாக மற்றுமொரு சந்தேக நபரைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று ஏறாவூர்ப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற-10)

## பரண் நட்ட கல்லில் முன்பள்ளி திறப்பு



வவுனியா,டிசெ.29

வவுனியா பரண்நட்டகல்லு கிராமத்தில், பிரான்ஸ் தமிழ் ஒலி வானொலியின் (ரி.ஆர்.ரி) சமூகப்பணிப் பிரிவின் ஊடாக நான்கு லட்சம் ரூபா நிதியில் நிர்மாணிக்கப்பட்ட "பெரிய ஐயா" முன்பள்ளி நேற்றுமுன்தினம் வைபவரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

பரண்நட்டகல்லு கிராம சேவையாளர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள் ம.தியாகராசா, இ.இந்திரராசா, வவுனியா வடக்கு முன்பள்ளி உதவிக் கல்வி பணிப்பாளர் ராஜேஸ்வரன், முன்னாள் கல்வியியல் கல்லூரியின் பீடாதிபதி பேனாட், குருமன்காடு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க முகாமையாளர் சிவராசா, மற்றும் பரண் நட்டகல்லு மாதர் அபிவிருத்திச் சங்கத் தலைவி பவானி, முன்பள்ளி மழலைகள், அவர்களின் பெற்றோர்கள், ஆசிரியர்கள், கிராமப் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், கிராம மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ)

## மூன்று கடைகளில் ஒரே இரவில் திருட்டு

### வவுனியாவில் சம்பவம்

வவுனியா, டிசெ.29

வவுனியா குருமன்காடு பகுதியில் உள்ள மூன்று வர்த்தக நிலையங்களில் நேற்று முன்தினம் இரவு பணம் மற்றும் சில பெறுமதியான பொருள்கள் திருட்டுப் போயுள்ளன என்று வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமது வர்த்தக நிலையங்களை வழமைபோன்று மூடிவிட்டுச் சென்ற உரிமையாளர்கள், நேற்றுக் காலையில் தமது வர்த்தக நிலையங்களுக்கு வந்தபோது வர்த்தக நிலையங்கள் உடைக்கப்பட்டு பணம் மற்றும் பொருள்கள் களவாடப்பட்டுள்ளமையை தெரிந்து கொண்டனர்.

ஒரே கடைத் தொகுதியில் அமைந்திருக்கும் பல்பொருள் விற்பனை நிலையம், அலைபேசிவிற்பனை நிலையம், அழகு சாதன விற்பனை நிலையம் என்பனவற்றிலேயே திருடர்கள்தமதுகைவரிசையைக் காட்டியுள்ளனர்.

பல்பொருள் விற்பனை நிலையத்தில் பணமும், அலைபேசி விற்பனை நிலையத்தில் பெறுமதியான அலைபேசிகளும், அழகு சாதன விற்பனை நிலையத்தில் பெறுமதியான பொருள்களும், பணமும் திருடப்பட்டுள்ளன என்று உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர். (ற-ஜ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ். சித்தன்கேணி பிளவத்தை அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் ஆரம்பப்பிரிவு மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் நேற்று கல்விச்சுற்றுலா ஒன்றை மேற்கொண்டு உதயன் பணிமனைக்கும் வருகை தந்தனர். (ற-ஜ)

# அனைத்துத் தரப்பினரின் ஒத்துழைப்பும் தமிழ் மக்கள் பேரவைக்குத் தேவை

## வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.29

அனைவரினதும் ஒத்துழைப்புக்களையும் தமிழ் மக்கள் பேரவை வேண்டி நிற்கின்றது. - இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் பேரவையில் நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் கருணா ஆகியோர் இணைத்துக் கொள்ளப்படுவார்களா? எனச் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தமிழ் மக்கள் பேரவை கொள்கையில் நெகிழ்வு தன்மையைக்காட்டப்போவதில்லை. எனினும் எங்களுடைய கருத்துக்களை விடவும் வித்தியாசமான கருத்துக்களை கொண்டிருப்பவர்களை எதிரிகள் என வகைப்படுத்த முடியாது. பல கருத்துக்கள் சேர்வது தான் ஜனநாயகம். குறிப்பாக வடமாகாண சபையை எடுத்துக் கொண்டால் எதிர்க்கட்சி தலைவருக்கும் எமக்குமிடையில், பல கருத்து மோதல்கள் இடம்பெற்றாலும் எமக்கிடையில் ஒரு புரிந்துணர்வு, நல்லெண்ணம் நிலைத்திருக்கின்றது.

எனவே, எதிர்க்கருத்துள்ளவர்கள் எதிரிகள் அல்ல. நாங்கள் எங்களது கடமைகளைச் செய்வோம். இந்த நிலையில் அனைவரிடமும் நாங்கள் ஒத்துழைப்புக்களைக் கேட்டு நிற்கிறோம். அது அவசியமானது. இருந்தும் கொள்கையில் நாங்கள் தெளிவாகவும், நெகிழ்வுத் தன்மையற்றும் இருப்போம் -என்றார். (ற-ஜ-4,10)

# குடும்பத் திட்டமிடல் ஒரு போதும் பிறப்பு வீதத்தைக் குறைக்காது

## வடக்கு சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.29

தமிழீழ விடுதலைப் புலிகள் இருந்த காலத்தில் 5 குழந்தைகள் பெற்றவர்களுக்கே குடும்பக் கட்டுப்பாடு மேற்கொள்ளப்பட்டு வந்தது. தற்போது அது 3 குழந்தைகள் பெற்ற பின்னர் மேற்கொள்ளும் நடவடிக்கையாக மாறியிருக்கின்றது. குடும்பத் திட்டமிடல் ஒரு போதும், பிறப்பு வீதத்தைக் குறைக்கும் நடவடிக்கை அல்ல - இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் கடந்த ஆண்டு 10 ஆயிரத்து 147 பேர் குடும்பத் திட்டமிடல் மேற்கொண்டுள்ளனர். இவர்களில் 30 சதவீதமானவர்கள் இதனை மேற்கொள்ளாமல் இருந்திருந்தால், எமது சனத்தொகை அதிகரித்திருக்கும் என்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் குறிப்பிட்டார்.

இதேவேளை- மாகாண சபையின் ஆளும் மற்றும் எதிர்த்தரப்பு உறுப்பினர்களும் இந்த விடயத்தில் கருத்துக்களைத் தெரிவித்தனர். கடந்த

> “குடும்பக் கட்டுப்பாடு என்பது வேறு, குடும்பத் திட்டமிடல் என்பது வேறு. ஆனால் இரண்டையும் ஒன்றாக்கிப் பலரும் குழம்புகின்றனர்.”

காலங்களில் போர் காரணமாக எமது சனத்தொகை பெருமளவு குறைவடைந்துள்ளது. சனத்தொகை அதிகரிக்கப்பட வேண்டும். இதனைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் சுகாதார அமைச்சு ஈடுபடக்கூடாது. இராணுவ வீரர் ஒருவர் மூன்றாவது பிள்ளையைப் பெற்றுக் கொண்டால் அவருக்கு சலுகைகள் வழங்கப்படுவது போல, எமது மக்களுக்கும் சலுகைகள் வழங்கப்பட வேண்டும் எனச் சுட்டிக்காட்டினர்.

இதன் பின்னர் பதிலளித்து உரையாற்றிய சுகாதார அமைச்சர் மேலும் தெரிவிக்கும் போது:

தமிழீழ விடுதலைப் புலிகள் இருந்த காலத்தில் 5 குழந்தைகள் பெற்றுக் கொண்ட ஒருவரே குடும்பக் கட்டுப்பாடு செய்வதற்கு அனுமதிக்கப்பட்டார். அது எழுதப் படாத விதியாகவே இருந்தது. தற்போது 3 குழந்தைகளுக்கு மேல் பெற்றுக் கொண்டவர் களுக்கு, குடும்பக் கட்டுப்பாடு மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்படுகின்றது.

குடும்பக் கட்டுப்பாடு என்பது வேறு, குடும்பத் திட்டமிடல் என்பது வேறு. ஆனால் இரண்டையும் ஒன்றாக்கிப் பலரும் குழம்புகின்றனர். குடும்பத்திட்டமிடல் (ஃபமிலி பிளானிங்) என்பது ஒருபோதும் பிறப்பு வீதத்தைக் குறைக்கும் நடவடிக்கை அல்ல - என்றார். (ற-ஜ-5)



சாவகச்சேரிப் பொது சந்தை வளாகத்தில் பெருமளவு வணிகர்கள் வியாபாரிகளின் வேண்டுகோளின் பிரகாரம், சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் ஏற்பாட்டில் வர்த்தகர்களின் பங்களிப்புடன் அமைக்கப்பட்ட குபேர விநாயகர் ஆலயம் நேற்றுமுன்தினம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. அத்துடன் சந்தை வளாகத்தில் 6 கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட விற்பனைப் பிரிவுகள் கொண்ட கட்டடத் தொகுதிகளுக்கான யாகமும் நேற்று நடைபெற்றது. (ற-ஜ-9)

# தற்போது அமைந்துள்ள ஆட்சியில் தீர்வைப் பெறும் சூழ்நிலை

## மாவை. சேனாதிராசா எம்.பி. தெரிவிப்பு

அச்சுவேலி, டிசெ.29

“தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு கடந்த பொதுத் தேர்தலின் போது வழங்கியுள்ள ஆணையை சீர்குலைக்கும் வகையில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை அனுமதிக்க முடியாது. இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றமும், சர்வதேச ரீதியில் இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பான கருத்து நிலை மாற்றமும், அழுத்தங்களும் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணக் கூடிய சூழ்நிலையைத் தோற்றுவித்துள்ளன. - இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை.சோ.சேனாதிராசா தெரிவித்தார்.

வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச அபிவிருத்தியும், சமகால அரசியல் நிலைப்பாடும் தொடர்பான கூட்டம் வலி.கிழக்குப் பிரதேச சபையின் புத்தூர் தலைமைக் காரியாலய மாநாட்டு மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் அ.பரஞ்சோதி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்துள்ளதாவது:-

இலங்கையில் அராஜகத்தையும், அடக்கு முறையையும் மேற்கொண்ட மகிந்தவுக்கு எதிராக தமிழ் முஸ்லிம்மக்களும் மலையக மக்களும் ஒன்று சேர்ந்து வாக்களித்தமையால் கடந்த ஜனவரி மாதம் 8 ஆம் திகதி ஒரு அரசியல் புரட்சி ஏற்பட்டது.

அதை அடுத்து ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற பொதுத்தேர்தலின் மூலம் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. அதே நேரம் சர்வதேச ரீதியில் ஏற்பட்ட கருத்து நிலை மாற்றம் தமிழர் பிரச்சினையை சர்வதேசமயப்படுத்தியது. கடந்த மார்ச் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் மாநாட்டில் 47 நாடுகள் இலங்கை உட்பட எமது பிரச்சினை தொடர்பான தீர்வை ஒருமனதாக வலியுறுத்தின.

உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் ஏற்படும் மாற்றம் எமது பிரச்சினைகள் தொடர்பாக சாதகமான நிலையை ஏற்படுத்தி உள்ளன. இதன் மூலம் இலங்கைக்கு அழுத்தங்கள் ஏற்பட்டு வருவதோடு வெளிநாடுகளில் இருந்து வரும் பிரதிநிதிகள் நிலைமையை உன்னிப்பாக அவதானித்து வருகின்றனர். எம்முடனும் பேசி வருகின்றனர்.

இந்த நிலைமையில் எமது நிலைப்பாட்டைப் பாராட்டி வரவேற்று வருவதோடு பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என வலியுறுத்தியும் வருகின்றனர்.

கடந்த காலப் போரால் 90 ஆயிரம் குடும்பங்கள் பெண்கள் பல்வேறு பாதிப்புக்கும் இழப்புக்கும் உள்ளாகி நிர்க்கதியான நிலைக்கு உள்ளாகி உள்ளனர். அவர்களின் வாழ்க்கை நிலையில் மாற்றம் ஏற்பட வேண்டும். மக்கள் தமது சொந்தக் காணிகளில் குடியேற வேண்டும். எமது பிரதேசத்தின் அபிவிருத்தியைக் கருத்தில் கொண்டு சில செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். அபிவிருத்தி தொடர்பான திட்ட வரைவுகள் முன்மொழிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மாற்றுக் கருத்து உள்ளவர்களையும் நாங்கள் அரசியலில் ஏற்றுக் கொண்டுள்ளோம். தேவை ஏற்படின் அவர்களுடனும் பேச்சு நடத்தலாம். ஆனால், கடந்த பொதுத் தேர்தல் மூலம் தமிழ் மக்கள் எமக்கு வழங்கிய ஆணையை புறந்தள்ளி குழப்பநிலை ஏற்படுத்துவதை அனுமதிக்க முடியாது.

காலத்துக்குக் காலம் கட்சிகள், அமைப்புக்கள், கூட்டணிகள் ஏற்பட்டதுண்டு. அவற்றின் நிலைப்பாட்டை மக்கள் எந்த வகையில் ஏற்றுக் கொண்டனர் என்பதை கடந்த காலங்களில் கண்டுள்ளோம் - என்றார். (ற-ஜ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசாரச் சீர்கேடான நிகழ்வுகளுக்குத் தடை

## ஜனாதிபதி மைத்திரி பணிப்பு

கொழும்பு, டிசெ. 29
நாட்டின் கலாசாரம், நாகரிக வளர்ச்சியைச் சீரழிக்கும் வகையில், வெளிநாட்டுப் பாடகர்களை வரவழைத்து அநாகரிகமான இசை நிகழ்ச்சிகளை நடத்தும் ஏற்பாட்டாளர்களுக்குக் கடுமையான தண்டனைகள் வழங்கப்படவேண்டும். உள்ளாடைகளைக் களைந்தெறியும் நிகழ்ச்சிகளுக்கு, இனி ஒருபோதும் இடமளிக்கப்படமாட்டாதுஎனஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறினார்.

நாடளாவிய ரீதியிலுள்ள அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடத்தப்பட்ட பொது அறிவுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கும் நிகழ்வு, அம்பாறை டி.எஸ்.சேனநாயக்க கல்லூரியில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில், பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்குதொடர்ந்துஉரையாற்றிய ஜனாதிபதி,

சுமார் ஒரு மணித்தியாலத்துக்கு மாத்திரமே வரையறுக்கப்பட் டுள்ள இந்த இசை நிகழ்ச்சிகளுக்கு 50 ஆயிரம், 30 ஆயிரம் என நுழைவுச் சீட்டுக்கள் விற்பனை செய் யப்படுகின்றன. இதில் கலந்து கொள்ளும் யுவதிகள், மதுபானத்தை அருந்திவிட்டுக் கடும் போதையில் தங்களது உள்ளாடைகளைக் களைந் தெறிவது மாத்திரமன்றி, மேடைக்கு ஏறி பாடகருக்கு முத்தமும் கொடுக்கின்றனர். இவ்வாறான அநாகரிகமான இசை நிகழ்ச்சிகளுக்கு, இனி மேல் ஒருபோதும் இடமளிக்கப்பட மாட்டாது–என்றார்.



"உலகமே வியந்து பார்க்கும் அளவுக்கு, சிறந்ததொரு நாடாக இலங்கையை மாற்றுவதற்கு, அனைவரும் முன்வரவேண்டும். இந்த நாட்டிலுள்ள அனைத்துச் சமூகங்களினதும் கலாசாரம் பாதுகாக்கப்படும். மேலும், பௌத்த தர்மத்தைப் பாதுகாக்க, சிறுவர்கள் உட்பட அனைவரும் முன்வர வேண்டும் என்றும் அவர் மேலும் கூறினார். (த-ஜ-10)

# புதிய முன்னணியை அமைப்பதற்கு முயற்சி

கொழும்பு, டிசெ. 29
எதிர்வரும் உள்ளூராட்சி மன் றத் தேர்தலில் போட்டியிடவென ஒரு புதிய அரசியல் முன்னணியைத் தோற்றுவிக்க, மகிந்த ராஜபக்சவை ஆதரிக்கும் கூட்டு எதிரணி திட்டமிட்டுள்ளதாக, அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

புதிய முன்னணியின் பெயர் "எமது சிறிலங்கா முன்னணி" என அமையும்.

தேசிய சுதந்திர முன்னணி, மக்கள் ஐக்கிய முன்னணி, பிவிதுரு ஹெல உறுமய மற்றும் இடது சாரி ஜனநாயக முன்னணி ஆகிய கட்சிகளே, இம்முன்னணியைத் தோற்றுவிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஆறு மாதங்களுக்குப் பிற்போடுவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீர்மானித்துள்ளார்.

சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் உட்கட்சி அதிகாரப் போட்டிக்கு இன்னமும் தீர்வு காணப்படாது இருப்பதனால், அவர் இவ்வாறு தீர்மானித்துள்ளார்.

அரசாங்கத்திலுள்ள சிறி லங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர்கள் சிலரின் கருத்துப்படி, இணைந்த எதிர்க்கட்சி பிளவடையும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

அண்மையில் வெளியான தகவலின்படி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் 15 பேர் அரசுடன் இணையவுள்ளதாக அமைச்சர் எஸ்.பி திஸாநாயக்க தெரிவித்தார். (தி)

# இலங்கையில் 2016 இல் பெரும் கல்வி மாற்றம்

## கல்வி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, டிசெ. 29
இலங்கையில் பெரும் கல்வி மாற்றம் இடம்பெறவுள்ளது. கல்வி மாற்றத்தை மேற்கொள்வதற்கு அதிகளவிலான நிதி எனது அமைச்சுக்கு ஒதுக் கப்படவுள் ளது. இதனைக் கொண்டு 2016ஆம் ஆண்டு முதல் இலங்கையில் பெரும் கல்வி மாற்றத்தை முன்னெடுப்போம் எனக் கல்வி இராஜாங்கஅமைச்சர்வே.இராதாகிருஷ்ணன் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஹற்றனில் நடைபெற்றசெய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போது தெரிவித்தார்.

தொடர்ந்தும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

நாடு பூராகவும் தற்பொழுது கடமையில் இருக்கின்ற 5 வருடங்களைப் பூர்த்தி செய்த அதிபர்களுக்கும், 8 வருடங்களைப் பூர்த்தி செய்த ஆசிரியர்களுக்கும் 2016ஆம் ஆண்டு முதல் இடமாற்றம் வழங்கப்படவுள்ளது.

தற்பொழுது பாடசாலைகளில் நிலவிவரும் ஆசிரியர் பற்றாக் குறையை நிவர்த்தி செய்யும் முகமாகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

ஒரு சில பாடசாலைகளில் அதிகமான ஆசிரியர்களும், ஒரு சில பாடசாலைகளில் குறைவான ஆசிரியர்களும் கடமையாற்றுவதால், இதன்மூலம் ஒரு சில பாடசாலைகள் பாதிப்புக் குள்ளாகின்றன.

அனைத்து மாணவர்களுக்கும் சமமான கல்வியைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற நோக்கில், சம வளப் பகிர்வையும், சம ஆசிரியர் பகிர்வையும் முன்நிறுத்தி இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

கடந்த காலங்களில் நடைபெற்ற ஆசிரியர் இடமாற்றம் போல் அன்றி, எந்தவிதமான அரசியல் தலையீடுகளும் இன்றி இந்த இடமாற்றங்கள் செய்யப்படவுள்ளன.

மலையகத்துக்குப் பல்கலைக் கழகம் வேண்டும் என்பது அனைவரினதும் வேண்டுகோளாக இருக்கும் பட்சத்தில், 2016ஆம் ஆண்டு முதல் பல்கலைக்கழக கல்லூரி அமைப்பதற்கான வேலைத்திட்டங்களை, புதிய அரசின் ஊடாக மேற்கொள்ளப்படும்.

சீருடைத்துணிகள் பெறுவதற்கு, வவுச்சர் முறை அறிமுகப்படுத் தப்பட்டுள்ளது.

இதில் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் பெரும் சிரமத்தை எதிர்கொள்வதாக நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்ஆறுமுகன் தொண்டமான் நாடாளுமன்றத்தில் கருத்துத் தெரிவித்திருந்தார்.

எனினும், இலங்கை முழுவதுக் குமான அறிமுகமே இந்த வவுச்சர் முறை.

தனியாக மலையகத்துக்கு மட்டும்மாற்றுத்திட்டங்கள் கொண்டு வரமுடியாது. ஆகையால் முதற்கட்டமாக வவுச்சர் பெற்றுக் கொண்டு, மேலதிகமாக பணத்தை அறவிடும் வியாபாரிகளுக்கு, அடுத்த முறை வவுச்சர்கள் அனுமதிகள் வழங்கப்படமாட் டாது.

குறிப்பாக, ஒரு சில பெற்றோர்கள் குறித்த வவுச்சர்களை வியாபார ஸ்தாபனங்களில் கொடுத்து அதற்கான பணத்தை மாத்திரம் பெற்றுகொள்ள முயற்சிக்கின்றனர்.

அதற்குத் தற்போது இடமளிக்கவில்லை என்ற காரணத்தினாலேயே, ஒரு சில பெற்றோர்கள், இந்த வவுச்சர் முறையை எதிர்க் கின்றனர்.

எனவே, இந்த இலவசச்சீருடைகள் முழுமையாக மாணவர் களுக்குச் சென்றடைய வேண்டும் என்பதனாலேயே, இந்த புதிய வவுச்சர்முறைத்திட்டம்அறிமுகப் படுத்தப்பட்டது.

அத்தோடு, இலங்கையில் பெரும் கல்வி மாற்றம் இடம் பெறவுள்ளது. கல்வி மாற்றத்தை மேற்கொள்வதற்கு அதிகளவிலான நிதி எனது அமைச்சுக்கு ஒதுக்கப்படவுள்ளது.

இதனைக்கொண்டு 2016ஆம் ஆண்டு முதல் இலங்கையில் பெரும் கல்வி மாற்றத்தை முன்னெடுப்போம்–என்றார். (தி)

# நாட்டின் பணவீக்கம் உயர்வு



கொழும்பு.டிசெ.29
இந்த ஆண்டின் ஒக்ரோபர் மாதத்தில் நூற்றுக்கு 3 வீதமாக இருந்த நாட்டின் பணவீக்கம், நவம்பர் மாதத்தில் 4.8 வீதம் வரை உயர்வடைந்திருப்பதாக இலங்கை மத்திய வங்கியின் புள்ளி விவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த செப்ரெம்பர் மாதத்தில் இருந்து ஒக்ரோபர் மாதம் வரை தேசிய பாவனையாளர் விலைச் சுட்டி2.6வீதத்தால் உயர்வடைந் திருந்தது. இதன் காரணமாக நாட்டின் பண வீக்கம் உயர் வடைந்துள்ளது.

இதேவேளை, உடுபுடைவைகள் மற்றும் பாதணிகள் வீட்டுத் தளபாடங்கள் மற்றும் வீட்டுப் பராமரிப்பு, போக்குவரத்துக்கள், சுகாதாரம் மற்றும் பல தரப்பட்ட பொருள்கள் மற்றும் சேவைகள் ஆகிய உப தொகுதிகளின் விலை மட்டங்களும் அந்த மாதத்தில் உயர்வடைந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இதனடிப்படையில் நாட்டின் பணவீக்கத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (த-22)

# எல்லை மீறிய இசை நிகழ்வில் மைத்திரிபாலவின் மருமகனும்




ஜனாதிபதியின் கடும் கண்டனத்துக்குஉள்ளாகியுள்ள என்ரிக்கின் இசை நிகழ்ச்சியில், ஜனாதிபதியின்மருமகனும், கலந்துகொண்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இந்த இசை நிகழ்ச்சியில், பார்வையாளர்கள் போதையில் எல்லை மீறி நடந்துகொண்ட விதம் குறித்து ஜனாதிபதி நேற்று முன் தினம் அம்பாறையில் நடைபெற்ற நிகழ்வொன்றின்போது கடும் கண்டனத்தை வெளியிட்டிருந்தார்.

இந்த நிலையில், ஜனாதிபதியின் மகள் சத்துரிக்காவின் கணவரான சுரஞ்ஜித் மற்றும் அவரது இரு நண்பர்கள் விசேட அதிரடிப்படையினரின் பாதுகாப்புடன் தலா ஆறு பாதுகாப்பு வாகனங்கள் சகிதம் குறித்த இசை நிழ்ச்சிக்குச்சென்றுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது. இவர்கள் குறித்த நிகழ்வின்போது எடுத்துக்கொண்ட புகைப்படமும் வெளியாகியுள்ளது.

ஏற்கனவே ஜனாதிபதி மைத்திரியின் மகள் சத்துரிக்கா, அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக கடும் விமர்சனங்கள் வெளியிடப் பட்டிருந்த நிலையில், தற்போது இந்தத் தகவலும் வெளியாகி யுள்ளது. (தி)

# போதையில் வாகனம் செலுத்திய 420 சாரதிகளுக்கு எதிராக வழக்கு

கொழும்பு, டிசெ. 29
நாடு முழுவதிலும் குடிபோதையில் வாகனங்களைச் செலுத்திய 420 சாரதிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 23ஆம் திகதியில் இருந்து நேற்றுக் காலை 6 மணிவரையான காலப்பகுதியில், குறித்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

மேலும், குடிபோதையில் வாகனங்கள் செலுத்துவதைத் தவிர்க்கும் முகமாக, அவர்களைக் கைது செய்யும் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கை கடந்த 23ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

அத்துடன், நேற்று முன்தினம் காலை 6 மணி முதல் நேற்றுக் காலை 6 மணி வரையான காலப் பகுதியில் நாடு முழுவதிலும் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களில், 114 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் மேலும் தெரிவித்துள்ளது. (தி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத அடையாளங்களை அமைப்பது அவசியம்

## ஜனாதிபதி மைத்திரி வலியுறுத்தல்

கொழும்பு, டிசெ. 29
மனிதனை நல்வழிப்படுத்துவதற்காகவே மதங்கள் காணப்படுவதாகவும் மதங்களின் அடையாளங்கள் மக்கள் மத்தியில் காணப்பட வேண்டுமெனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இத்தாலியிலுள்ள ஆயர்கள் அமைப்பின் நிதியுதவியில் நீர்கொழும்பில் அமைக்கப்பட்ட 16ஆவது பெனடிக்ற் கல்வி நிலையத்தை, நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை திறந்து வைத்து உரையாற்றிய ஜனாதிபதி இதனைத் கூறியுள்ளார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி, சமூகத்தில் எந்தவொரு மதமும் இன்னுமொரு மதத்தைக் கட்டுப்படுத்தவோ கோட்பாடுகளை மூழ்கடிக்கவோ அல்லது பலவந்தமாக புகுத்தவோ இடமளிக்க முடியாது.



இலங்கையில் மாத்திரமல்லாது சர்வதேச ரீதியிலும் இனங்கள், மதங்கள், மொழிகள் போன்று அனைவருக்கும் மதத்துக்குரிய அடையாளங்கள் மிகவும் முக்கியமானது.

ஒவ்வொரு மதத்தினரதும் மத மற்றும் கலாசார அடையாளங்களும் மொழிக்குரிய அடையாளங்களும் அவர்களின் வாழ்க்கையை முன்னெடுப்பதற்குத் தேவையான காரணிகளாக அமைந்துள்ளன.

தொழில்நுட்ப வளர்ச்சி இன்று முழு உலகையும் ஒரே கிராமமாக மாற்றியுள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் மனித சமூகத்தின் இருப்பை உரிய முறையில் பேணுவதற்கு மட்டுமன்றி தனிமனித வாழ்க்கைக்கும் அறிவும் அனுபவமும் மிகவும் உதவும்.

இன்று அறிவைப் பெற்றுள்ள ஒரு சாரார் சமூகத்தை வழி நடத்துவதற்கு அதைப் பயன்படுத்தும் அதே வேளை, இன்னுமொரு சாரார் உலக அழிவின் தேவைக்காக அந்த அறிவைப் பயன்படுத்துகின்றமை வருத்தமளிக்கின்றது – என்றார்.

> "சமூகத்தில் எந்தவொரு மதமும் இன்னுமொரு மதத்தை கட்டுப்படுத்தவோ கோட்பாடுகளை மூழ்கடிக்கவோ அல்லது பலவந்தமாக புகுத்தவோ இடமளிக்க முடியாது."

இந்நிகழ்வில் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, முன்னாள் பேராயர் ஓஸ்வால்ட் கோமிஸ் ஆண்டகை, இத்தாலிய ஆயர்கள் சபையின்தலைவர், சபாநாயகர் கரு ஜயசூரிய, அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல, பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச மற்றும் பல ஆயர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இதன்போது ஜனாதிபதியால் பெனடிக்ற் கல்வி நிலையத்திற்கு முன்பாக நினைவு மரக்கன்றும் நாட்டிவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (து)

## அறநெறி ஆசிரியர்களுக்கு சமாதான நீதிவான் பதவி

கொழும்பு, டிசெ. 29
பத்து வருடங்களுக்கு மேற்பட்ட காலம் அறநெறிப் பாடசாலைகளில் பணியாற்றிய ஆசிரியர்களுக்கு, சமா தான நீதிவான் பதவி வழங்கும் திட்டத்தை அடுத்த வருடம் முதல் ஆரம்பிக்கவுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அம்பாறை டி.எஸ்.சேனாநாயக்க தேசிய பாடசாலையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற அகில இலங்கை அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டபோதே, ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இதன்போது, புதிய தொழில்நுட்பத்தினால் சமூகத்துக்கு நன்மை கிடைக் கும் விடயங்களைப் போன்று சமூகத்தைப் பாதிக்கும் விடயங்கள் தொடர்பிலும் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டார்.

இதற்காக அதிகம் போராடவேண்டியுள்ளதெனவும், அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டியது அவசியம் எனவும் ஜனாதிபதி மைத்திரி மேலும் தெரிவித்தார். (து)

## துமிந்தவுக்கு எதிராக இரண்டு வழக்குகள்

### இலஞ்ச ஊழல் ஆணைக்குழு தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 29
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு எதிராக, இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழு இன்று இரண்டு வழக்குகளைத் தாக்கல் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

துமிந்தவுக்கு எதிரான இந்த இரண்டு வழக்குகளையும், கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததாக ஆணைக்குழுவின் விசாரணைப் பிரிவுப் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரியந்த சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

மேலும், 2013ஆம் மற்றும் 2014ஆம் ஆண்டுகளில், தனது அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள் தொடர்பான விவரங்களை வழங்காதமைக்கு எதிராகவே, குறித்த வழக்கை இலஞ்ச ஊழல் ஆணைக்குழு தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (து)

## சிறுமியைத் தாக்கிய பெண் கைதாகினார்

திருமலை, டிசெ. 29
திருகோணமலை, மிரிஸ்வெவ பகுதியில் 13 வயதுச் சிறுமியொருவரை தாக்கிய குற்றச்சாட்டின்பேரில் 35 வயதுடைய பெண்ணொருவரை நேற்றுத் திங்கட்கிழமை கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதலுக்குள்ளான சிறுமி மகாதிவுள்வெவ கிராமிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுப் பின்னர் மேலதிக சிகிச்சைக்காகத் திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேற்படி சிறுமியின் வீட்டுக்கு அருகிலுள்ள இந்தப்பெண், ஞாயிற்றுக்கிழமை மாலை சிறுமியைத் தாக்கியமை தொடர்பில் மொரவெவ பொலிஸ் நிலையத்தில் சிறுமியின் தாய் முறைப்பாடு செய்துள்ளார். இதனைத்தொடர்ந்து இப்பெண்ணைக் கைது செய்துள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

கைது செய்யப்பட்ட இந்தப் பெண்ணிடம் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகப் பொலிஸார் கூறினர். (து)

## பொலிஸ் அதிகாரிகள் 4 பேருக்கு இடமாற்றம்

கொழும்பு, டிசெ. 29
சேவை அவசியம் கருதிப் பொலிஸ் அதிகாரிகள் நான்கு பேர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இவர்களுக்கான இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் தலைமையகம் நேற்றுத் திங்கட்கிழமை அறிவித்துள்ளது.

சாவகச்சேரியில் கடமையாற்றிய பிரதான பொலிஸ் பரிசோதகர் டபிள்யூ.கே.தர்மசேன, பொலிஸ் தலைமையகத்துக்கு மாற்றப்பட்டுள்ளார்.

பிரதான பொலிஸ் பரிசோதகர் பீ.எஸ்.மெனிக்கே கேகாலையிலிருந்து சாவகச்சேரிக்கு மாற்றப்பட்டுள்ளார்.

பொலிஸ் பரிசோதகரான ஆர்.டி.சி.பிந்து மொரட்டுமுல்லையிலிருந்து புத்தளத்துக்கு மாற்றப்பட்டுள்ளார்.


பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஐ.ஆர்.செனவிரத்ன கல்கிஸையிலிருந்து மொரட்டுமுல்லைக்கு மாற்றப்பட்டுள்ளார். (து)

## ராணுவத்தை வணங்கவேண்டும் வடமாகாண முதலமைச்சர் விக்கி

### ஓமல்பே சோபித தேரர் சொல்கிறார்

கொழும்பு, டிசெ. 29
வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் குறைந்த பட்சம் ஒரு நாளைக்கு மூன்று வேளைகளாவது எமது இராணுவத்துக்குத் தலைவணங்கிச் சாஸ்டாங்கம் செய்யவேண்டும் என ஹெல உறுமயவின் தலைவர் கலாநிதி ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

விக்னேஸ்வரனின் உயிர்பாதுகாக்கப்பட்டதும் அவருக்கு முதலமைச்சர் பதவி கிடைக்கப் பெற்றதும் எமது இராணுவத்தினர் புலிப் பயங்கரவாதத்தை இல்லாதொழித்ததனால் ஆகும் எனவும் தேரர் மேலும் கூறியுள்ளார்.



இது இவ்வாறிருக்கையில், முதலமைச்சர் விக்னேஸ்வரன் வடக்கிலுள்ள இராணுவத்துக்கு வடிகால் துப்புரவு செய்யும் பொறுப் [illegible] வணங்கவேண்டும் எனக் கூறியிருப்பது அவரின் இனவாதச் சுயரூபத்தை வெளிக்காட்டுவதாகவும் தேரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

விக்னேஸ்வரன் இவ்வாறு இராணுவத்துக்குக் கூறியிருப்பது, இராணுவத்தை அகௌரவப்படுத்துவதற்கேயாகும். குலவாத, கோத்திர வாதம் உயர்ந்த மட்டத்திலுள்ள தமிழ்ச் சமூகத்துக்குள் வடிகால் துப்புரவு செய்வது மிககீழ்மட்டச்செயலாகவே கருதப்படுகின்றது. இந்த வேலைக்கு அமர்த்துவதாக இராணுவத்தைச் சுட்டிக்காட்டுவது மிகக் கேவலமான ஒன்றாகும் எனவும் தேரர் கூறியுள்ளார்.

எமது இராணுவம் இந்த வேலையைச் செய்ய முன்னர் யாரோ ஒருவர் அந்த வேலையைச் செய்தே உள்ளனர். முதலமைச்சரின் இந்தக் கருத்தின் உண்மையான நோக்கம் மக்களின் அடிப்படைத்தேவையை நிறைவுசெய்து கொடுப்பதல்ல. அவரின் நோக்கம் எமது இராணுவத்தைக் கேவலப்படுத்துவதாகும் எனவும் ஓமல்பே சோபித தேரர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பயங்கரவாதத் தடைச் சட்டத்தை தொடரும் வழி நடக்கும் போக்கா...?

*பயங்கரவாதத்தடைச்சட்டத்தை நீக்குவதில் நல்லாட்சி அரசு பிகுபண்ணும் காட்சி ஒன்று வெளிப்பட்டுள்ளது.*

*ஐக்கிய நாடுகள் சபையின், மனித உரிமைகள் சபையில், அந்த ஒவ்வாத, கொடிய சட்டத்தை நீக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போதிலும், மாதங்கள் மூன்று கடந்தும் அதற்கான அத்திபாரம் போடப்படவில்லை.*

*ஜனாதிபதி செயலகம், பிரதமர் அலுவலகம், வெளிவிவகார அமைச்சு, நீதி அமைச்சு ஆகியவற்றின் பிரதிநிதிகள் அடங்கிய குழு இது குறித்து ஆராய்ந்து வருவதாக நீதி அமைச்சர் தகவல் வெளியிட்டுள்ளார்.*

*அதேவேளை, பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்குப் பதிலாகப் புதிய சட்டம் ஒன்றை நடைமுறைக்குக் கொண்டுவருவது குறித்து சட்ட ஆணைக்குழு கருத்து வெளியிட்டிருப்பதாகவும், எதிர்பார்ப்பது போன்று அந்தப் (பொல்லாத) சட்டத்தை நீக்குவதற்கான சாத்தியம் மிகக் குறைவாகவே உள்ளதாகவும் அமைச்சர் தொட்டுக் காட்டி இருக்கிறார்.*

*இந்தத் தகவல், பயங்கரவாதத் தடைச்சட்டம் வேறு வடிவத்தில் மேலெழுப்பப்படுமோ என்ற சந்தேகத்தைத் தோற்றுவிப்பது தவிர்க்க முடியாததாகும்.*

*மேற்போந்த சட்டம், நாட்டில் கடந்த சுமார் நான்கு தசாப்தங்களாக நடைமுறையில் உள்ள ஒன்றாகும்.*

*அடுத்துத்தொடுத்து, மாறிமாறி, ஆட்சிச் சிம்மாசனத்தில் அமர்ந்த கொழும்பு அரசுகளால், முப்பத்தேழு ஆண்டுகளாக அந்தச் சட்டம் கட்டித் தழுவப்பட்டு வருகிறது.*

*தமிழ் மக்களைப் பொறுத்தவரையில், இருண்ட (அரசியல்) சகாப்தம் ஒன்று மேலுயர்த்தப்பட்டு, அவர்களின் வாழ்வியலுக்குக் குழிதோண்டியதோடு, ஜனநாயகமும் பலவீனப்படுத்தப்பட்டமை சரித்திரமாகி விட்டது.*

*இப்போதைய களநிலையை நோக்கினால், புதிய அரசும் -- நல்லாட்சி அரசும் -- பயங்கரவாதச் சட்டத்தை தொடர்ந்து ஏதோ ஒரு வகையில், வழியில் செயற்படுத்த முனைகிறதோ என்ற ஐயம் தமிழ் மக்களின் மனங்களைக் குடைகிறது.*

*1979 ஆம் ஆண்டில், ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட பயங்கரவாதத் தடைச்சட்டம், 1982 இல் நிரந்தரமாக்கப்பட்டு முப்பத்தேழு ஆண்டுகள் பெருத்த இடைவெளியில், கொழும்பு அரசுகளால் காலத்துக் காலம் பட்டை தீட்டப்பட்டு, இரும்புக்கரமாக மாற்றப்பட்டிருக்கிறது. இந்த நாட்டின் "அரசியல் சாபக்கேடு" என்று அது வகுக்கத் தக்கது!*

*இலங்கை அரசுகளின் முந்தைய செயற்பாடுகளை நோக்கின், ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கடந்த செப்ரெம்பர் மாதத்தின் ஐ.நா. தீர்மானம், சுரண்டி வழிக்கப்படாத வடிவத்தில் உயர்த்தப்படுமா என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்......!*

*கடந்த ஒன்பது மாதங்களாகக் கிடப்பில் போடப்பட்டிருந்த இந்தப் பென்னம் பெரு "விவகாரம்", இப்போது தூசிதட்டி மினுக்கப்படும் நிலைமை, போக்கு, உத்தேச புதிய சட்டம், முன்னரை விடவும் வலுச்சேர்க்கும் வகையிலான சரத்துக்களுடன் மேலுயர்த்துவதற்கான கால அவகாசம் வாங்கும் சூட்சுமமாகவும் அமையலாம் என்ற அச்சத்தை உயர்த்துகிறது அல்லவா?*

# தை பிறந்தால் வழி பிறக்குமா?

**ஜனதா**

புத்தம் புதியதாய் ஆண்டொன்று சில தினங்களில் மலரப் போகின்றது. இந்தப் புதிய ஆண்டில் நாம் அனைவரும் பழைய (பிற்போக்கு) சிந்தனைகளைக் களைந்து புதிய (முற்போக்கு) சிந்தனைகளைப் புனைந்து கொள்வோம்.

மார்கழி பிறந்தாலே எல்லோர் இல்லங்களும் புதுப்பொலிவு பெற்றுவிடும். ஒரே குதூகலமும் கொண்டாட்டமும்தான். கிறிஸ்து பிறப்பு, புத்தாண்டு பிறப்பு, தைப் பொங்கல் எனத் தொடர்ந்து வரும் பெருவிழாக்களை இன, மத வேறுபாடின்றி உலக மக்கள் அனைவரும் கொண்டாடி மகிழ் வர். புத்தாடை அணிந்து புதுப்பொலிவு பூண்டு ஆலய தரிசனம் செய்வதும், பரிசுகள் பட்சணங்களைக் குடும்பத்தவர், உறவினர், நண்பர்கள் என அனைவருக்கும் வழங்கி, வாழ்த்துக்கள் கூறி மகிழ்வதும் இவற்றுக்கும் அப்பால் விருந்துகள் வழங்கி, களியாட்டங்களெனக் கூடி மகிழ்வதுமாக ஒவ்வொரு குடும்பமும் தத்தமது பொருளா தார நிலைகளுக்கு அமைவாக இந்த விழாக்களைக் கொண்டாடி மகிழ்கின்றனர்.

ஆனால் இவை பற்றி சிறிது சிந்திப்போமெனில் இவையெல்லாம் விழாக் காலங்களில் மட்டும் நாம் புனையும் ஒப்பனைகளா? அன்றேல் விழாக்காலங்களில் நாம் எடுக்கும் பல அவதாரங்களா? ஆண்டில் ஒருமுறை மட்டும் வந்துபோகும் இந்த விழாக்களை ஒரு மாறுதல் வேண்டி நாம் குடும்பங்களுடன் சேர்ந்து கொண்டாடி மகிழத்தான் வேண்டும். ஆனால் மாறுதல் என்பதும், மகிழ்ச்சி என்பதும் ஒரு சில பொழுதுகளோடோ, நாள்களோடோ மட்டும் மறந்து விடக்கூடியவை தானா? சமாதானம் சகவாழ்வு உறவுகளுடனான உறவாடல்கள் இவையனைத்தும் குறித்த கால வரையறைக்குள் மட்டுப்படுத்தப்பட்டவையா? ஏனெனில் விழாக்கள் முடிவடைந்ததும் நாடகம் முடிந்து ஒப்பனைகளைக் கலைத்து விடுவதுபோல, பலரும் முன்பிருந்த பழைமைக்குள் அன்னியப்பட்டுப் போகிறார்களே? இந்த நிலை ஏன்? புத்தாண்டு பிறப்புடன் புத்தரிசிப் பொங்கலையும் கூடி உண்டு மகிழவிருக்கும் நன்னாள்களில் அனைவரும் இது பற்றிச் சிந்திப்போம்.

மனிதனை அவன் செல்லும் பாவ வழியில் இருந்து மீட்டு இரட்சிக்க இற்றைக்கு 2015 ஆண்டுகள் முன்னதாகப் பிறந்த கிறிஸ்துவின் பிறப்பை கோலாகலமாகக் கொண்டாடி மகிழும் உலகம், அவரின் எளிமையான பிறப்பு, அவரின் வாழ்வு, நற்போதனைகள் பற்றி சிந்திக்கிறதா? குழந்தைகள் சிறுவர்களுக்காக மாட்டுத் தொழுவங்களை நாம் அலங்கரிக்கலாம்; தப்பில்லை. பெரியவர்கள் அவரின் நற்போத னைகளை என்றாவது சிந்திக்கின்றனரா? நல்லனவற்றை செய்யாது விடினும் தீயனவற்றையாவது செய்யாது இருக்கலாமல்லவா? நல்லவற்றைக் கூறி, கூறியபடி வாழ்ந்து இயேசுவை அவர்கூட இருந்து


> மனிதனை அவன் செல்லும் பாவ வழியில் இருந்து மீட்டு இரட்சிக்க இற்றைக்கு 2015 ஆண்டுகள் முன்னதாகப் பிறந்த கிறிஸ்துவின் பிறப்பை கோலாகலமாகக் கொண்டாடி மகிழும் உலகம், அவரின் எளிமையான பிறப்பு, அவரின் வாழ்வு, நற்போதனைகள் பற்றி சிந்திக்கிறதா?

உண்டு மகிழ்ந்தவர்களே நன்றி கெட்ட விதத்தில், பணத்துக்காக கொலைத்தீர்ப்புக்கு காட்டிக் கொடுத்தார்கள். உப்பிட்டவரை உள்ளளவும் நினை என்பது முதுமொழி. ஆனால் எம்மிடையே எத்தனை யூதாஸ்கரியேத்துக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இயேசுவின் வழியில் புத்தர், முகம்மதுநபி போன்ற மதத் தலைவர்களும் காந்தி, சோக்கிரட்டீஸ், அரிஸ்ரோட்டில் உட்பட பல புதிய சிந்தனையாளர்களும் மூடநம்பிக்கைகளில் மூழ்கிக் கிடந்த மக்களை மீட்பதற்காக எண்ணற்ற நற்கருத்துக்களைக் கூறியும், செயலில் காட்டியும் சென்றனர். இவர்களுக்கு மாற்றீடாகக் கிடைத்தவை அவமதிப்பு, புறக்கணிப்பு, சித்திரவதைகள், சாவுத்தண்டனைகள். ஆனால் அந்த நல்லவர்களெல்லாம் இந்த உலகை நீத்த பின்னரே உலகத்தோரால் அவர்களது கருத்துக்கள் நினைவு கூரப்படுகின்றன. அவையும் வெறும் பேச்சளவிலேயே சரி. மனிதன் மாறவேயில்லை.

உன்னைப்போல் உன் அயலாரையும்நேசிஎன்று அன்பையும் ஒரு கன்னத்தில் அடித்தால் மறுகன்னத்தையும் காட்டு என்று பொறுமை, மன்னிப்பையும், பசித்தவனுக்கு அன்னத்தையும் தாகமாயிருப்பவனுக்கு தண்ணீரையும் வழங்கு என்று மனித நேயத்தையும் கற்பித்தார் இயேசு. ஆனால் சிலுவையில் இறுதி மூச்சு அடங்குகையில் அவருக்கு ஏற்பட்ட இறுதித் தாகத்துக்குக்கூட மனிதனால் தண்ணீர் மறுக்கப்பட்டு கசப்பான காடியே அவர் நாக்கில் பூசப் பட்டது என்பது வரலாறு. மீட்பருக்கே இந்தக் கதியெனில் சமானிய மனிதன் நிலை எம்மாத்திரம். வானத்திலிருந்து பெய்த மழை நீர் குடைக் கம்பிகளூடாக வடிகையில் குடிதண்ணீர் அற்றுத் தாகத்தால் தவித்தவர்கள் அதனைக் கையிலேந்திப் பருகிய நிலை ஒன்றும் தமிழர் வரலாற்றில் உண்டு என்பதை மனிதன் மறந்தானா? தவிச்ச வாய்க்குத் தண்ணீர் மறுப்பவனுக்குதண்டனைதான் என்ன?

ஆலயத்துக்குச் செல்கையில் உன் காணிக்கையைப் பீடத்தில் வைத்து விட்டு, உன் சகோதரன் உறவை, அயலான், இப்படி நீ தள்ளி வைத்திருப்பவருடனெல்லாம் ஒப்புரவாகிப் பின்னர் வந்து கடவுளுக்குக் காணிக்கையைச் செலுத்து என்று கூறப்பட்டது. இவையெல்லாம் நடக்கிறதா? ஆலயம் செல்கிறோம் மறையுரைகள் கேட்கிறோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆலய எல்லை கடந்து வெளியேறியதும் கேட்ட மறையுரைகள் மறந்து போகின்றன. மீண்டும் மனித மனம் வேதாளம் முருங்கை மரம் ஏறிய கதையாகிறது.

அயலவன் வீட்டில் அவலக்குரல், அழு குரல் எக்காளத்தொனியில் எக்களிப்பின் பிரதிபலிப்பு. பழிக்குப் பழி, இரத்தத்துக்கு இரத்தம் அடுத்தவன் பற்றி குறளி பேசுதல், கணவன் மனைவி, மாமியார், மருமகள், உடன்பிறப்புக்கள், அயலவர்கள், நண்பர் கள் எனப் பலதரப்பட்டவர்களிடையேயும் சிண்டு முடிந்து விரிசலை ஏற்படுத்துதல். இப்படி அடுத்தவன் குடிகெடுக்க அலையும் மனிதன் தன்னுடைய வீட்டிலும் இத்தகைய நிலைகள் ஏற்படும் என்பதை மறந்து போகிறான். அடுத்தவன் துன்பத்தில் குளிர் காயும் இந்த மனப்பாங்கு சரியானதா?

பணம் பணம் என அலையும் மனிதன் தான் மட்டும் வாழ்ந்தால் போதும் என்ற சுய நலப்பேயாக மாறிவருகிறான். பணத்தைக் கண்டதும் ஏழை எளியவர்களை இழிவு செய்கிறான். அநியாய வட்டி பெறுகிறான். இல்லாத ஒருவனிடம் உள்ள சொற்பத் தையும் கறந்து அவனை நடுத்தெருவில் ஆண்டியாக்குவதில் பணமுள்ளவனுக்கு ஒரு தனிப் பிரியம் அல்ல வெறி. காட்டிக் கொடுப்பு, போட்டுக் கொடுப்பு, அடுத்தவன் முன்னேற்றத்துக்குஆப்பு வைத்தல், திறமை உள் ளவர்களை ஓரம் கட்டு தல், ஒருவன் பற்றிய நல்ல விடயங்களை இருட்டடிப்புச் செய்தல், உயர நினைத்து உழைப் பவனை அடித்து மட்டம் தட்டுதல். தான் உயர் நிலை அடைந்ததும் ஏறிவந்த ஏணியை எட்டி உதைப்பதான செயற் பாடுகளில் ஈடுபடல். இப் படி இன்னோரன்ன கீழ்த்தரமானசெயற்பாடு களை பணத்தாலும், செல்வாக்கினாலும், வன் முறை வக்கிரமான பேச் சுக்களாலும் சாதித்து விட முடியுமென்ற தப் பான சிந்தனைகளுடன் வாழ்ந்து கொண்டிருக் கும் இந்த முகமூடி மனி தர்களின் முகத்திரைகள் அகல்வது எப்போது?

தற்பொழுது விஞ்ஞா னமும் தொழில் நுட் பமும் எவ்வளவு துரித கதி யில் வளர்ச்சி கண்டு வரு கிறதோ அதைவிட வேகத் தில் வன்முறைக் கலா சாரம் உலகை ஆட்டிப் படைக் கிறது. மண் ணாசை,பொன் ஆசை, பெண் ஆசை என் பவை உச்சம் தலைக்கேறி பல வக்கிரமான அராஜக செயற் பாடுகளில் மனிதன் இறங்கி யுள்ளான். பூமியெங்கும் போட்டி, பொறாமை, கொலைகள், தற் கொலைகள், கற்பழிப்பு, சிறுவர் துஷ்பிர யோகம், ஆள்கடத்தல், போதைப்பொருள் பாவனை, இணையத்தள மோசடிகள் இப்படி மனிதனின் குற்றச் செயல்களின் பட்டியல் நீண்டு கொண்டே செல்கின்றது.

உலகின் ஒரு பாதியில் மனிதன் சந்திரனிலும் செவ்வாயிலும் குடியேற வழிதேடிக் கொண்டிருக்க, மறு பாதியில் மனிதன் தன்னைத் தாங்கி நிற்கும் பூமியை சின்னாபின்னமாக்கி அழித்துக் கொண்டிருக்கிறான். எல்லைச் சண்டை, மதச் சண்டை, இனச்சண்டை, சாதிச் சண் டையென அரிவாளையும், துப்பாக்கி யையும் கையிலேந்தி கொலைவெறியுடன் வீதிகளில் அலைந்து திரிகிறான். ஆண், பெண், குழந்தைகள், சிறுவர்கள், முதியோ ரென எந்தவித பேதமும் இவர்களது ஆயு தங்களுக்குக் கிடையாது. ஈவிரக்கம் எதுவு மின்றி கண்ணில் பட்ட எல்லோரையும் வெட்டிச் சாய்க்கிறான்.

மனித உயிர் இன்று வெறும் மலினப் பொருளாகி விட்டது. ஒரு கையில் அரி வாளும் மறுகையில் மனிதத் தலையுமாக மனிதனைப் பார்க்கவே சகிக்க வில்லை. அந்த மனித மிருகத்தின் கோரத்தோற்றம் அநீதியை அழிக்கவந்த (மகிடாசுரனை அழித்திட்ட) காளியின் உருவையே கண் முன் கொண்டுவருகின்றது.

எதிரிக்குஎதிரி நண்பன் கூட்டுச் சேர்ந்து (உடன்பிறப்புகளுக்கு எதிராகவும்) செயற் படுவதும் தனக்கு இரு கண்களின் பார்வை அற்றுப் போனாலும் பரவாயில்லை. எதி ரிக்கு ஒரு கண்ணாவது அழிய வேண்டும் என நினைத்து செயற்படும் மனப்பான்மை என்று மனிதனை விட்டகலும்?

எதிர்காலம் எப்படி அமையுமோ என்ற ஏக்கத்தோடும் அவற்றுள்ளும் சிறிதும் பெரிதுமான நம்பிக்கைகளோடும் மல ரப்போகும். புத்தாண்டில் அனைவருக் கும் நல்லதே நடக்க வாழ்த் துவோம். உல கத் தலைமை கள், உள்நாட் டுத் தலைமை கள் மட்டுமல்ல. நாட்டின் ஒவ் வொரு நிர்வாக அலகுகளிலும் குறிப்பாககுடும் பங்களின் ஒவ் வொரு அங்கத் தவர் மனங்களிலும் மாறுதல் வேண்டி புத் தாண்டில் உறுதி மொழி செய்வோம்.

> பணம் பணம் என அலையும் மனிதன் தான் மட்டும் வாழ்ந்தால் போதும் என்ற சுய நலப் பேயாக மாறிவருகிறான் பணத்தைக் கண்ட தும் ஏழை எளியவர் களை இழிவு செய் கிறான்.

# இரணை இலுப்பைக்குளம் வீதியின் இடரைப் போக்குவது யார்?

தங்களது பத்திரிகையில் பலமுறை பிரசுரிக்கப்பட்டு பிரஸ் தாபிக்கப்பட்டபோதிலும் அரசு தரப்பினராலோ, எமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களாலோ வடமாகாண சபை உறுப்பினர்களாலோ கவனத்துக்கு எடுக்கப்படாத விடயம் இது.

வவுனியாவிலிருந்து மன்னார் வீதியில் பூவரசங்குளம் வைத்தி யசாலையிலிருந்து சற்றுத் தொலைவில் வடக்கு பக்கமாகச் செல்லும் இரணை இலுப்பைக்குளம் வீதி மோசமான நிலையில் காணப்படுகின்றது.

இந்த வீதியானது, சுமார் 30 வருடங்களுக்கு மேல் எந்த வித சீரமைப்பும் இன்றிக் காணப்படுகின்றது. இந்த வீதியானது புல வனார் ஊர், சிவன் நகர், மடுக்குளம், வேலங்குளம், சின்னத் தம்பனை, கோவில்மோட்டை, செங்கற்படை, கருங்காலிக்குளம், தெகிளங்குளம், குஞ்சுக்குளம், கோவில் புளியங்குளம், பூசாரி குளம், இரணை இலுப்பைக்குளம், காக்கையன் குளம், புதுக் குளம், பரசன் குளம், மண்கிண்டி, விளாத்திகுளம், பெரிய வலை யன்கட்டு, சின்னவலையன் கட்டு ஆகிய கிராம மக்களின் போக்கு வரத்துக்கான வீதியாகும்.

குறிப்பாக இந்த வீதியில் கோவில்புளியங்குளம் முத்துமாரிஅம்மன் கோவில் சந்தியிலிருந்து இரணை இலுப்பைக்குளம் வரையான பகுதி மிக மிக மோசமாக குண்டும் குழியுமாகவும், சைக்கிளில் கூடப் பயணம் செய்யமுடியாத நிலையிலுமுள்ளது. இந்தக் கிராம மக்கள் பாரம்பரியமாக விவசாயமே செய்து வருகின்றனர். இவர்களது இந்த நிலை மிகவும் மனம் வருந்தத்தக்கதும் கவலைக்கும் உரியதுமாகும். அடுத்தவருடம் 2016 மார்ச் மாதம் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்வரும் வேளையில் வாக்கு வேட்டைக்காக இந்த வறிய மக்களின் வாழ்வைத் திருப்பிப் பாராதவர்கள்; தாங்கள்தான். மக்களின் இரட்சகர்கள் என்று வாய்பிளக்கக் கூறப்போகிறார்கள். இது வரையில் இவர்கள் இந்த வீதியால் தங்கள் சொகுசு வாகனங் களில் எத்தனை தரம் பயணம் செய்து இருப்பார்கள். இதுவரை வீதியின் அவலநிலை தெரியவில்லையா? ஏன்? இந்த மக்கள் என்ன பாவம் செய்தார்கள்? அனேகமாக இந்தப் பகுதி மக் களில் பெரும்பாலானவர்கள் தங்கள் உறவுகளைத் தொலைத்தவர் கள். இந்த மண்ணுக்காக மரணித்தவர்கள். தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு உறுப்பினர்களே நீங்களோ உங்கள் வடமாகாணசபை உறுப் பினர்களோ சற்று சிரமம்பாராது இந்தக் கிராம மக்களிடம் சென்று அவர் களது நிலையை விசாரித்துப் பாருங்கள். ஒரு குடும்பத்தில் போர்க் காலத்தில் இளைஞர், யுவதிகள் மரணித்துப் போயிருக்கிறார்கள். ரிசாத் பதியுதீன் அவர்களே நீங்களாவது எமது இந்த அவல நிலை யைத் தாங்கள் அரசிடம் கூறி நீக்கமாட்டீர்களா?. நாங்கள் என்ன ஐயா, எமது தனிப்பட்ட சுயநலனுக்காகவா இவற்றைக் கேட் கிறோம். பொதுவாக எல்லோருடைய போக்குவரத்துப் பாதை சம்பந்த மாகவல்லவா கேட்கிறோம். தயவு செய்து தாங்கள் இந்தப் பாதையைக் கட்டாயம் வந்து பாருங்கள். உண்மைநிலை நன்கு புலப்படும். இத்னைப் பார்வையிடும் எமது மக்களே உங்களில் யாராவது இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட தரப்பினரின் கவனத்துக்கு இந்தச் செய்தியைக் கொண்டு செல்வதற்கு இதுவரை ஆவன செய்யாதிருந்தால் அது உங்களது சோம்பேறித்தனம். உங்க ளுக்கு இந்தப் பாதையால் போகும்போது ஏதாவது இடர் ஏற்பட் டால் அப்போது தான் அநுபவம் பேசும். இதுவரை ஏனோ தானோ என்ற நிலையில் தான் நீங்கள் இருந்தீர்கள் என்ற எண்ணம் புரியும். இவற்றை எழுதிய என்னை ஒரு புத்தி கெட்டவன் என்று எல்லோ ரும் நினைக்கலாம்.

இதன் பலாபலனை ஒவ்வொருவரும் ஒருநாள் அநுபவிக்கும் போது, அல்லற்படும்போது தெரியும். இவற்றை நிவர்த்தி செய்து தீர்ப்பது யார்? வீதி அபிவிருத்தி அதிகாரசபையா அல்லது பிரதேச சபைகளா? நாடாளுமன்ற உறுப்பினர்களா? வடமா காண சபை உறுப்பினர்களா? பெருந்தெருக்கள் திணைக்களமா? என்பதைப் பொறுத்திருந்து பாருங்கள்.

– இந்த வீதியால் அன்றாடம் பயணிக்கும் ஓர் அன்பர்.

# விபத்துக்களைத் தவிர்ப்போம் மனித உயிர்களைக் காப்போம்

இந்த ஆண்டு அதிகளவிலான வானக விபத்துக்கள் இடம்பெற்றதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. பத்திரிகைகளைப் புரட் டினால் தினமும் வாகன விபத்துத் தொடர் பான செய்திகளைப் படிக்கமுடிகின்றது.

வாகனங்கள் மனிதர்களின் வசதிக்காக உருவாக்கப்பட்டவை. ஆனால் இவை, அவர்களின் உயிர்களைப் பறிப்பதற்கு எந்தவகையிலும் இடமளிக்கக்கூடாது. வாகனங்கள் தாமாக வீதிகளில் ஓடுவ தில்லை–மனிதர்கள்தான் அவற்றை இயக்கு கின்றனர். மனிதர்கள் மேற்கொள்ளும் தவறுகளால்தான் வாகனவிபத்துக்கள் ஏற்படுகின்றன. குறிப்பாகத்தன்னிலைமறந்து வேகமாக வாகனங்களைச் செலுத்துவதா லும் வீதிஒழுங்குகளை மீறுவதாலும், அனே கமான வாகன விபத்துக்கள் இடம் பெறு கின்றன. இவற்றில் வயது வேறு பாடின்றி உயிர் இழப்புக்கள் ஏற்படுகின்றன. பலர் படுகாயங்களுக்கு உள்ளாகுகின்றனர். தமக்கு மட்டுமல்லாது பிறருக்கும் தீமையை விளைவிக்கக்கூடிய வாகன விபத்துக் களைத் தவிர்ப்பது ஒவ்வொருவரதும் கடமையாகும். கவனமாகச் செயற்பட்டால் விபத்துக்களின் மூலமாக ஏற்படக் கூடிய இடர்களைத் தவிர்த்துக் கொள்ள முடியும்.

– பா. எழிலன், பாசையூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திண்டுக்கல்லில் சாதனை நடனம்

திண்டுக்கல், டிசெ.29

உலக சாதனைக்காக 2 ஆயிரத்து 372 பேர் பரத நாட்டியம் ஆடிய நிகழ்ச்சி தமிழ் நாட்டின் திண்டுக்கல் மாவட்டத்தில் நடந்துள்ளது.

ஒரே நேரத்தில் 2 ஆயிரத்து 10 பேர் பரதநாட்டியம் ஆடியதே இதுவரை உலக சாதனையாக இருந்தது. இதை முறியடிக்கும் விதமாக 2 ஆயிரத்து 372 பேர் பங்கேற்ற பரதநாட்டிய நிகழ்ச்சி திண்டுக்கல் ஜிடிஎன் கல்லூரியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

ஆடவல்லான் இசைத்தமிழ் அறக்கட்டளை சார்பில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு, கல்லூரி முதன்மை நிர்வாக அதிகாரி ரத்தினம் தலைமை வகித்தார். தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் 2 ஆயிரத்து 372 பேர் திண்டுக்கல் வந்தனர். மாலை 5.15க்கு நடன நிகழ்ச்சி ஆரம்பமாகியது.

நடன மாந்தர்கள் தொடர்ந்து 31 நிமிடம் நடனமாடினர். திருக்குறளின் பல்வேறு பொருள்களை விளக்கும் வகையில் நடன அசைவுகள் இருந்தன. கின்னஸ் மட்டுமல்லாது, லிம்கா, அசிஸ்ட், ஆசியா புத்தகம், இந்திய புத்தகம், ஜெட்லி புத்தகம் உள்ளிட்ட 6 வகையான சாதனைகளுக்காக இந்த நிகழ்ச்சி நடைபெற்றது.

நடனமாடும் நிகழ்ச்சி, நேரம் என்பவை காணொலி கமராவில் பதிவு செய்யப்பட்டு கின்னஸ்ஸுக்கு அனுப்பப்பட உள்ளது. அதன் பிறகே நடன நிகழ்ச்சி சாதனையாக அங்கீகரிக்கப்பட்டு அறிவிப்பு வெளியாகும் என்று நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தவர்கள் தெரிவித்தனர். (உ-ரி4)

## அமில ரயில் விபத்து ஆஸியில் அவசர நிலை

சிட்னி, டிசெ.29

ஆஸ்திரேலியாவில் 2 கோடி லீற்றர் (44 ஆயிரம் கலன்) சல்பூரிக் அமிலத்தை சுமந்து வந்த தொடருந்து விபத்துக்குள்ளானதை அடுத்து குறித்த பிரதேசம் தவிர்ப்பு வலயமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த இடத்தில் அவசரகால நிலையும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் காலை 10:20மணியளவில்குயின்ஸ்லாந்தின் வட மேற்குப் பகுதியில் குறித்த விபத்து இடம் பெற்றுள்ளது. தொடருந்தில் பயணித்த பணியாளர்கள் பலர் கடும் காயங்களுக்கு ஆளாகியுள்ளனர்.

சல்பூரிக் அமிலம் தோல் அரிப்பை ஏற்படுத்தக் கூடியது என்பதால் விபத்து இடம்பெற்ற பகுதியின் 2 கிலோமீற்றர் சுற்றளவில் பொது மக்கள் நடமாட்டம் தடை செய்யப்பட்டுள்ளது.

20 ஆயிரம் லீற்றர் அமிலத்தில் எவ்வளவு அமிலம் நிலத்தில் சிந்தியுள்ளது என்கிற தகவல்கள் எவையும் சரிவர வெளியாகவில்லை. அத்துடன் விபத்து நடைபெற்ற இடம் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருந்தது என்று பொலிஸார் கூறுகின்றனர். விபத்துக்கான காரணம் என்ன எனத் தெரியவில்லை. (உ-ரி4)



# 4 ஐ.எஸ். தலைகள் வீதியில் காட்சிக்கு

### ஆப்கானிஸ்தானில் ஆயுதக் குழுவினர் அதிரடி

ஆப்கானிஸ்தானின் கிழக்குப் பகுதியில் உள்ள அச்சின் மாவட்டத்தில் உள்ளூர் ஆயுதக் குழுவினருக்கும், ஐ.எஸ் அமைப்பினருக்கும் இடையே கடுமையான மோதல் ஏற்பட்டது. இதில் ஐ.எஸ். அமைப்பினர் 4 பேரின் தலைகளைத் துண்டித்து அங்குள்ள முதன்மைச் சாலையில் மக்களின் பார்வைக்கு வைத்துள்ளனர்.

நாடாளுமன்றத் துணைச் சபாநாயகர் ஹஜி சகிர் என்பவரின் ஆதரவாளர்களான உள்ளூர் ஆயுதக் குழுவினர், கடந்த சில வாரங்களாக தலிபான் மற்றும் ஐ.எஸ். அமைப்பினருக்கு எதிராகப் போராடி வருகின்றனர்.

இந்தக் குழுவினரே 4 ஐ.எஸ். அமைப்பினரின் தலைகளைத் துண்டித்து வீதியில் வைத்தனர்.

மக்களின் பார்வைக்காக இந்தத் தலைகள் காட்சிக்கு வைக்கப்பட்டன என்று உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் அங்குள்ள மக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (உ)



# இசையால் ஈராக்கை வசமாக்கும் முயற்சி

ஈராக்கின் பக்தாத் நகரில் செலிஸ்ட் எனும் வாத்திய இசைக்கருவியை மீட்டுவதன் மூலம் மக்கள் மத்தியில் அமைதியை ஏற்படுத்த முனைகிறார் கரிம் வஸ்வி.

வீதிகளில் இசைக்கருவியை இசைப்பதனால் மக்களின் மனங்களைச் சாந்தப்படுத்த முடியும் என்று இவர் நம்புகிறார். இசைக்குழுவை நடத்தி வரும் கரிம், இசை மூலம் ஐ.எஸ். அமைப்பினரை எதிர்ப்பதாகவும் கூறுகிறார்.

ஈராக்கில் இடம் பெற்றுவரும் ஐ.எஸ். தாக்குதல்களால் மக்கள் மனமுடைந்துள்ளனர். எனது இசை அவர்களைத் தேற்றும் என்றார் அவர்.

மாலை வேளையில் சிறுவர்கள் பலர் அவரது இசையைக் கேட்டு மகிழ்கின்றனர். இசை மூலம் மக்கள் மனதில் அமைதியை ஏற்படுத்துவதே தமது நோக்கம் என கரிம் வஸ்வி தெரிவித்தார். (உ-ரி4)

## சீன சுர
## உரிமை

பீஜிங்,டிசெ.29
சீனாவின் ஜிப்ச
சொந்தச் சுரங்க
முயன்றுள்ளார்.
ஏற்பட்ட விபத்
தொடர்ந்து அவ
உள்ளூர் ஊடக
விபத்து ஏற்பட்
மீட்கப்பட்டனர்.
சிக்கிக் கொண்
தவறான முறை
பேணினால் சீ
வழங்குவார்கள்
காப்பு ஏற்பாடுக
நிகழ்வதற்குக் ச

## திட்டப

*அகதிகள் வருக*

ஆயிரக்கணக்கி
கள் அடுத்தடுத்
பாவுக்குள் நு
திட்டமிட்ட படை
போல் உள்ளத
செக் நாட்டு
மிலோஸ் செ
கூறினார்.
கிறிஸ்துமஸ் தி
யொட்டி, செக் ந
களுக்கு ஆற்றி
யில் அவர் இ
குறிப்பிட்டார்.
தனது உரையி
மேலும் தெரிவி
வயோதிபர்கள்
வர்கள், குழந்
களாக வருவதை
னத்தோடு ஏற்க
சிரியா, ஈராக்கி
டம் கூட்டமாக ம
என்பது தானா
வதாக எனக்
வில்லை. சட்ட
அகதிகளாக வரு
ஏராளமான இ
உள்ளனர். அ
ணம் ஆகாதவர்
கியமான உடல்
டவர்களாக உள்
அலை அலைய
ஐரோப்பாவுக்கு

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
08 . 08 . 1947

மறைவு
09 . 01 . 2015

திருமதி கமலாதேவி சுந்தரம்

வானுறையும் தெய்வத்தினுள் சங்கமமாகிய
எங்கள் குடும்பத்தின் தலைவியே!
பாசத்தின் பிறப்பிடமாய், பண்பின் உறைவிடமாய்
இப்பாரினில் வாழ்ந்த எம் பாசமிகு தெய்வமே!
எம்மையெல்லாம் துன்பக்கடலிலே தவிக்கவிட்டு
ஆண்டொன்று சென்றபோதும்
உங்கள் நினைவுகள் எம்மை விட்டு என்றும்
மறையாது...

வேதரடைப்பு, காரைநகர். குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சீன சுரங்க விதிகளை மீறிய உரிமையாளர் விபரீத முடிவு

ஜிங்,டிசெ.29

னாவின் ஜிப்சம் சுரங்கத்தின் உரிமையாளர் ஒருவர் தனது சொந்தச் சுரங்கத்தில் வீழ்ந்து உயிரை மாய்த்துக் கொள்வதற்கு முயன்றுள்ளார். அவரது சுரங்கத்தில் கடந்த வெள்ளிக்கிழமை ஏற்பட்ட விபத்தில் 17 வேலையாள்கள் உயிரிழந்ததைத் தொடர்ந்து அவர் இந்த விபரீத முயற்சியில் ஈடுபட்டார் என்று உள்ளூர் ஊடகங்கள் தெரிவித்தன.

விபத்து ஏற்பட்ட சுரங்கத்திலிருந்து 11 வேலையாள்கள் மீட்கப்பட்டனர். ஆனால் இன்னும் 17 பேர் சுரங்கத்தினுள் சிக்கிக் கொண்டுள்ளனர்.

தவறான முறையில், பாதுகாப்பற்ற ரீதியில் சுரங்கத்தைப் பணினால் சீன அதிகாரிகள் கடுமையான தண்டனை வழங்குவார்கள். குறித்த இந்த சுரங்க நிறுவனம் உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை முன்னெடுக்கத் தவறியமையே விபத்து நிகழ்வதற்குக் காரணமாகிவிட்டது.

(உ-ரி4)

## திட்டமிட்ட படையெடுப்பு

*அகதிகள் வருகை குறித்து செக் நாட்டுத் தலைவர் கருத்து*



ஆயிரக்கணக்கில் அகதிகள் அடுத்தடுத்து ஐரோப்பாவுக்குள் நுழைவது திட்டமிட்ட படையெடுப்புப் போல் உள்ளது என்று செக் நாட்டு அதிபர் மிலோஸ் ஜெமான் கூறினார்.

கிறிஸ்துமஸ் தினத்தையொட்டி, செக் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தனது உரையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வயோதிபர்கள், நோயுற்றவர்கள், குழந்தைகள் அகதிகளாக வருவதை மனிதாபிமானத்தோடு ஏற்க முடியும்.

சிரியா, ஈராக்கிலிருந்து கூட்டம் கூட்டமாக மக்கள் வருவது என்பது தானாக நடைபெறுவதாக எனக்குத் தெரியவில்லை. சட்ட விரோதமாக அகதிகளாகவருவோரிடையே ஏராளமான இளைஞர்கள் உள்ளனர். அவர்கள் திருமணம் ஆகாதவர்கள். ஆரோக்கியமான உடல் நிலை கொண்டவர்களாக உள்ளனர்.

அலை அலையாக அவர்கள் ஐரோப்பாவுக்குள் நுழைவது, திட்டமிட்ட படையெடுப்புப்போல உள்ளது. தங்கள் நாட்டை விட்டு அகதிகளாக வெளியேறாமல், இஸ்லாமிய தேச பயங்கரவாதிகளை எதிர்த்து அவர்கள் ஆயுதமேந்திப் போராட வேண்டும் - என்றார்.

இந்த ஆண்டு ஐரோப்பாவுக்குள் நுழைந்த அகதிகளின் எண்ணிக்கை 10 லட்சத்தைத் தாண்டிவிட்டது என்று புலம் பெயரிகளுக்கான சர்வதேச அமைப்பு (ஐஓஎம்) அறிவித்திருக்கிறது. இவர்களில் பெரும்பாலானவர்கள் சிரியா மற்றும் ஈராக்கில் இருந்து புலம் பெயர்ந்தவர்கள். (உ)

## சிகரெட் அடிக்கட்டையை வீதியில் எறிந்தால் தண்டம்

*இத்தாலியில் புதிய சட்டம் நடைமுறைக்கு*

ரோம், டிசெ.29

இத்தாலியில் புகைத்த சிகரட்டின் அடித்துண்டை கவனவீனமாக வீதியில் அல்லது வேறு இடத்தில் எறிவதற்கு எதிராக சட்டம் இயற்றப்பட்டுள்ளது. நாடாளுமன்றம் இந்தச் சட்டத்துக்கு அனுமதி வழங்கியுள்ளது.

சிகரட் துண்டைச் சுற்றுக் சூழலில் எறிபவர்களுக்கு 300 யூரோ தண்டப்பணம் அறவிட இந்தச் சட்டம் இடமளிக்கிறது. நாட்டின் தூய்மையைப் பேணுவதற்கும், சூழல் மாசுப் பிரச்சனையைக் கட்டுப்படுத்தவும் இந்தச் சட்டம் இயற்றப்பட்டது என்று அறிவிக்கப்பட்டுள்ளது

இவ்வாறான சட்டங்கள் பச்சை பொருளாதாரம் எனும் தலைப்பின் அடிப்படையில் இயற்றப்படுகின்றன. தெருக்களில் எறியப்படும் பில்கள், இதர பொருள்களுக்கு இணங்க 30 தொடக்கம் 150 யூரோ வரை தண்டம் அறவிடப்படவுள்ளது.

குப்பைத் தொட்டி தவிர்ந்த ஏனைய பகுதிகளான நிலம், நீர் என்பவற்றில் குப்பை போடப்பட்டால் இந்தச் சட்டம் பாயும். இந்த நடவடிக்கைகளைஇத்தாலியின் பிரதான நகரங்களில் முதற்கட்டமாக நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளன.

இத்தாலியின் மிலான், டெரின் நகரங்களில் வளி மாசடைவு அதிகம். இது அபாய அளவை எட்டியுள்ளது. ஐரோப்பிய நாடுகளில் இத்தாலியில்தான் வளி மாசடைவால் ஏற்படும் இறப்புக்கள் அதிகம் என நவம்பரில் வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாரிஸில் அண்மையில் மேற்கொண்ட காலநிலை ஒப்பந்தத்தின்படி சூழல் மாசடைவுக்கு இயைவாக இத்தாலி செயற்பட ஆரம்பித்துள்ளது என்று அதிகாரிகள் கூறுகின்றனர். (உ-ரி4)



## தற்கொலைத் தாக்குதலில் ஆப்கனில் ஒருவர் சாவு

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூல் விமான நிலையம் அருகே தலிபான்கள் நடத்திய பயங்கர தற்கொலைப்படைத் தாக்குதலில் ஒருவர் உயரிழந்தார். மேலும் 13 பேர் படுகாயமடைந்தனர்.

காபூல் விமான நிலையம் அருகே காலை வேளையில் மர்ம நபர் ஒருவர் தான் உடலில் கட்டியிருந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்தார் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். இதில் ஒரு சிறிய ரக பேருந்து வெடித்துச் சிதறியது.

தலிபான்கள் ஆப்கானின் பல்வேறு பகுதிகளில் தொடர்த் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். கடந்த 11ஆம் தேதி அங்குள்ள ஸ்பெயின் தூதரகத்தின் விருந்தினர் மாளிகை மீது தற்கொலைப்படைத் தாக்குதல் நடத்தினர்.

இதனை அடுத்து பக்ராம் விமானத் தளம் அருகே தலிபான்கள் நடத்திய தாக்குதலில் 6 அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டனர். (உ)

# அமெரிக்காவில் 965 பேர் பொலிஸார் சூட்டதில் சாவு

*2015இல் மட்டும் நடந்தன என்கிறது ஆய்வு*

2015இல் அமெரிக்கப் பொலிஸார் நடத்திய பல்வேறு தாக்குதல்களில் பொதுமக்களில் 965 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையில் ஆயுதம் இல்லாதகருப்பினத்தவர்கள் கணிசமானவர்கள் என ஓர் ஆய்வு கூறுகிறது.

அமெரிக்காவில் இனவெறுப்பு ரீதியான உள்நாட்டு வன்முறைகள் கடந்த சில ஆண்டுகளாகவே அதிகரித்து வருவதாகக் கூறப்படும் நிலையில் இந்த ஆய்வு வெளிவந்துள்ளது.

துப்பாக்கிக் கலாசார வன்முறை நாட்டில் அமைதியின்மையை ஏற்படுத்தியுள்ளது எனத் தெரிவித்த வொஷிங்ரன் போஸ்ட் பத்திரிகை இது குறித்து ஓர் ஆய்வை நடத்தியது.

வன்முறைகளுக்கு எதிராக அமெரிக்கப் பொலிஸார் தடுப்பு நடவடிக்கைகளை அதிரடியாக எடுத்து வருகின்றனர். அத்தகைய நடவடிக்கைகளில் துப்பாக்கியுடன் காணப்பட்ட 564 பேரும் கத்தி போன்ற குறைந்த அளவு ஆபத்தை ஏற்படுத்தும் ஆயுதங்களை வைத்திருந்த 281 பேரும் ஆயுதங்கள் ஏதும் இல்லாத 90 பேரும் கொல்லப்பட்டிருக்கின்றனர் என்று வொஷிங்டன் போஸ்ட் தனது ஆய்வில் தெரிவித்துள்ளது.

அது மட்டுமல்லாது, பொலிஸாரால் கொல்லப்பட்ட ஐந்தில் ஒருவர் அமெரிக்க கருப்பினத்தவர் அல்லது லத்தின் அமெரிக்கர் என்றும் அந்த ஆய்வு குறிப்பிட்டுள்ளது.

இந்தத் தாக்குதல்கள் அனைத்திலும் பொலிஸாருக்கு குறைந்த அளவிலான பலப்பிரயோகமே போதுமானதாக இருந்த போதும்அவர்கள்துப்பாக்கிச்சூடுநடத்தியிருந்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## இஸ்ரேலிய ஏவுகணைத் திட்ட தலைவர் திடீர் பதவி நீக்கம்

ஜெருசலேம், டிசெ.29

இஸ்ரேலின் ஏவுகணைப் பாதுகாப்புத் திட்டத்தின் தலைவர் பதவி நீக்கப்பட்டுள்ளார். திட்டத்தின் தகவல் பாதுகாப்பை மீறி அவர் செயற்பட்டதனால் அவர் நீக்கப்பட்டார் என்று அரசு அறிவித்துள்ளது.

மேலதிகமான தகவல் எதனையும் இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சு வெளியிடவில்லை. இஸ்ரேல் தன்னைச் சுற்றியுள்ள இஸ்லாமிய நாடுகளுடன் தொடர்ந்து போர்ச் சூழலைப் பேணி வருகிறது. இதனால் ஏவுகணைப் பாதுகாப்பு அதற்கு முக்கியமானது. பாலஸ்தீனம் மீது அது அடிக்கடி ஏவுகணைத் தாக்குதல்களையும் நடத்தி வருகிறது.

இந்த நிலையில் ஏவுகணைப் பாதுகாப்புத் திட்டத்தின் தலைவரான யேர் றமாட்டி தடை செய்யப்பட்ட தரவுகளையும் தகவல்களையும் தனது தனிப்பட்ட கணினியில் வைத்திருந்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார் என்கின்றன இஸ்ரேலிய ஊடகங்கள்.

யேரி றமாட்டி இந்தப் பதவியில் 4 வருடங்கள் கடமையாற்றியுள்ளார். அத்துடன் ஏவுகணை எதிர் பாதுகாப்பு திட்டம் உள்ளிட்ட முக்கிய திட்டங்கள் அவரது மேற்பார்வையில் நடத்தப்பட்டன. அவரது வெற்றிகரமான ஏவுகணைத் திட்டத்துக்காக இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சு அவரை முன்னர் பாராட்டியிருந்தது. (உ-ரி4)

## நிலச் சரிவுக்குக் காரணமான அதிகாரி சீனாவில் திடீர் சாவு

சீனாவின் ஷென்ஸென் நகரில் கடந்த 20ஆம் திகதி ஏற்பட்ட நிலச்சரிவுக்கு மனி தத் தவறே காரணம் என்று விசாரணை அதிகாரிகள் கூறிய நிலையில், குவித்து வைக்கப்பட்ட இடிபாடுகளை அகற்றும் பொறுப்பில் உள்ள அரச அதிகாரி ஒருவர் தனது உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார்.

ஷென்ஸென் நகர தொழிற்பூங்காவில், பலத்த மழை காரணமாக கடந்த 20ஆம் திகதி நிலச்சரிவு ஏற்பட்டது. அந்தத் தொழிற்பூங்காவில், கடந்த 2 ஆண்டுகளாக நடைபெற்று வரும் கட்டடப் பணிகளுக்காகத் தோண்டியெடுக்கப்பட்ட மண், 1 லட்சம் சதுர அடி பரப்பில், 100 மீற்றர் உயரத்துக்கு மலை போலக் குவித்து வைக்கப்பட்டிருந்தது. பலத்த மழை பெய்ததையடுத்து, அந்த மண் குவியல் சரிந்து நகரின் மீது வீழ்ந்தது. இதில் 25 பெண்கள் உள்பட 76 பேர் மண்ணுக்குள் புதையுண்டனர்.

நிலச்சரிவு ஏற்பட்ட 60 மணி நேரத்துக்குப் பிறகு இருவர் உயிருடன் மீட்கப்பட்டனர். அதில் ஒருவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். மண்ணுக்குள் புதையுண்ட மேலும் 3 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டன. எஞ்சியவர்களைத் தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இந்த நிலச்சரிவு குறித்து விசாரணை நடத்திய அதிகாரிகள், விபத்து இயற்கை இடர் அல்ல, இதற்கு மனிதத் தவறே காரணம் என்று தெரிவித்தனர். நிலச்சரிவுக்குக் காரணமானவர்கள் கண்டறியப்பட்டு, கடுமையாகத் தண்டிக்கப்படுவர் என்று அறிவிக்கப் பட்டது. கட்டுமான நிறுவன அதிகாரி ஒருவரை கைது செய்து பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.

இந்த நிலையில்தான், நிலச்சரிவு நடந்த இடத்தில் குவித்து வைக்கப்பட்ட கட்டட இடிபாடுகளை அகற்றும் பொறுப்பில் இருந்த அரச முகாமையின் தலைமைப் பொறுப்பாளர் ஸு மாடியில் இருந்து குதித்தார். வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட போது அவர் உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவர்கள் அறிவித்தனர்.

மன உளைச்சல் காரணமாக அவர் தற்கொலைசெய்துகொண்டிருக்கலாம் என்று கூறப்பட்டாலும், அது உறுதி செய்யப்படவில்லை.

(உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழையின் மனத்தில் அல்ல நேரடியாகவே ஏழையிடம் சென்றவர்



வ.இ.செல்வக்குமார்.

எமது காவிய நாயகன் கல்வெட்டு என்று தெரியாமலேயே தம்முடைய காகித அம்புகளால் தகர்த்து விடலாம் என்று நினைத்து தாங்களே தகர்ந்து போனார்கள் சிலர். மக்கள் இதய சிம்மாசனத்தில் மட்டுமே வீற்றிருந்த வள்ளல், அரசு சிம்மாசனத்தில் அமராத நேரமது. புதுக்கட்சி தொடங்கி புயலாய்ப் புறப்பட்ட நேரமது. அன்று வேலூர் எம்.எல்.ஏ. திருமணம். இராமவரம் தோட்டத்தில் இருந்து இருபது கார்கள் பின்தொடர எமது வள்ளல் காரில் ஏறி புறப்படுகின்ற நேரத்தில் கசங்கிய சட்டையுடனும் கலங்கிய மனதுடனும் வள்ளலுக்கு அருகில் ஒருவர் வருகிறார்.

வள்ளலே உங்களின் பாதம் அந்தப் பாவியின் வாசலை மிதித்துக் களங்கப்படவேண்டாம். கட்சியின் பெயரால் காலித்தனம் செய்துவரும் அந்த எம்.எல்.ஏ. பல குடும்பங்களைப் பரிதவிக்க விட்டவன். அங்கு நீங்கள் போகாதீர்கள். ஊரை ஏய்க்கும் அந்த ஊதாரி வீட்டுக்கு உத்தம தலைவன் நீர் சென்றால் ஊர் உம்மைப் பழிக்கும் என்று அந்த சாமானியத் தொண்டர் சரித்திர நாயகரிடம் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார். எல்லாவற்றையும் வள்ளல் கேட்டுக்கொண்டு அந்தத் தொண்டனின் குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்வதா? நிராகரிப்பதா? அதே நேரத்தில் விசாரிக்காமல் நீதி வழங்குவதும் நியாயமாகாது என்பதை உணர்ந்த வள்ளல் நீ தோட்டத்திலேயே இரு, திருமணத்துக்குப் போய் வந்துவிட்டு இதுபற்றிப் பரிசீலிக்கின்றேன் என்று வள்ளல் புறப்பட்டார்.

இரவு நேரத்தில் கார் சென்று கொண்டிருந்தாலும் அந்தத் தொண்டனின் குமுறலே வள்ளலின் நினைவில் வந்து கொண்டிருந்தது. தனக்கு அருகில் அமர்ந்த, அழைக்க வந்த வேலூர் கட்சிக்காரர்களிடம் எம்.எல்.ஏயின் செயற்பாடுகள் பற்றி விசாரணை நடத்துகிறார். அந்தத் தொண்டன் சொன்னதெல்லாம் உண்மைதான். தங்களின் பெயரை வைத்துக் கொண்டும் கட்சியின் பெயரை வைத்துக் கொண்டும் அவர் கண்ணியக் குறைவாக நடந்துகொள்வது பொய்யில்லை என்று உறுதிப்படுத்துகின்றனர். எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டே வள்ளல் எந்தவித சலனமும் இல்லாமல் மீண்டும் மௌனமாகப் பயணத்தைத் தொடர்கிறார்.

கார் ஆற்காட்டை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றது. காரின் இடது பக்கம் கண்களைப் படரவிடுகின்றார் வள்ளல். அந்த அர்த்த இராத்திரி இருட்டில் தார்த் தெருவுக்கு அப்பால் இடது புறத்தில் வயல் வெளியைத் தாண்டிய பொட்டல் காடு. அதற்கும் அப்பால் தொலை தூரத்தில் ஒரு குடிசையின் முகட்டில் இரட்டை இலை சீரியல் மின்குமிழ் சோடனையுடன் பிரகாசிக்கும் ஒளிமட்டும் திருவண்ணாமலை தீபமாய்த் தெரிந்தது. பூமழை தூவி வசந்தங்கள் வாழ்த்த ஊர்வலம் நடக்கிறது. நினைத்ததை முடிப்பவன். நீதியின் நாயகனின் பாடல் அது. அந்த நிசப்த இரவில் அந்தக் குக்கிராமத்தில் இருந்து வயல் வரம்பு தாண்டி, தோப்பு துரவு தாண்டி வள்ளலின் காதுகளில் அந்தப் பாடல் தென்றலாய் திகட்டாத தேனாய் விழுகிறது.

> கூற்றுவனைக் கூட ஏழெட்டுத் தடவை எட்டி உதைத்துப் பந்தாடிய வள்ளலின் முன்பு ராகுகாலம் எமகண்டமெல்லாம் எம் மாத்திரம்.

எம்மைப் பூசித்து மகிழ்கிற சாதாரண தொண்டன் வீட்டுத் திருமணம் என்பதை அந்த மின்குமிழ் ஒளியும், ஒலித்த பாடல்களும் உறுதி செய்கிறது.

அப்படியே இடதுபுறம் கற்றாழை முள்கள் மண்டிக்கிடக்கும் கரடுமுரடான வண்டிப் பாதையைக் காட்டி அதில் காரை செலுத்து என்கிறார். வள்ளல் சொன்ன வண்டிப் பாதையில் இருபது கார்களும் ஒன்றின் பின் ஒன்றாக புழுதியைக் கிளப்பிக் கொண்டுசெல்கின்றன. பகல்வேளையில் ஊருக்குள் கார் நுழைந்தாலே ஊரே கூடி வேடிக்கை பார்க்கும். அந்தக் கிராமத்தில் அந்த இராத்திரி நேரத்தில் இருபது கார்கள் ஒளி வெள்ளத்தில் வரிசையாக வருவதை மக்கள் பீதியுடன் பார்க்கிறார்கள். அந்த ஓலைக் குடிசையின் வாசலில் இருபது கார்களும் நிற்கின்றன.

கார் மேகத்தைக் கிழித்துக் கொண்டு பால்நிலவு வெளிக்கிளம்புவது போல கார்க் கதவைத் திறந்து கொண்டு உறையில் இருந்து கழற்றப்பட்ட தங்க வாளாய் எமது தங்கத் தலைவன் காரை விட்டுத் திருமண வீட்டு வாசலில் ஜோதி மயமாய் இறங்குகிறார். வள்ளல் வந்த செய்தி காட்டுத் தீயாய் சுற்றியுள்ள கிராமம் முழுவதும் பரவுகின்றது. கேட்டவர்களும் இதை நம்பவில்லை. நேரில் பார்த்தவர்களும் இதை நம்பவில்லை. வானத்துத் தேவர்கள் வாசல் தேடி வருவது எப்படிச் சாத்தியம், தேவதூதன் எமது தெருவுக்கு வந்திருக்கிறாரா தமக்குத்தாமே தங்களைக் கிள்ளிப் பார்த்துக் கொள்கிறார்கள்.

எப்படி இந்த அவதார புருசன் இங்கு வந்தான்? யார் இந்தத் தேவமைந்தனை அழைத்து வந்தது. நெஞ்சில் மட்டும் நினைத்து நினைத்து நெகிழ்ந்த இந்தத் தொண்டன் வீட்டு வாசலுக்கு வட்ட நிலா வழிய வந்து நிற்கிறதோ? இப்படி எண்ணி கணப் பொழுதில் நடந்த அற்புதத்திலிருந்து அவர்களால் மீள இயலவில்லை.

காரை விட்டு இறங்கிய வள்ளல் உள்ளூர்காரர்களாலே போடப்பட்ட பனை ஓலைப் பந்தலின் ஓரத்தில் கிடந்த துருப்பிடித்த (ஸ்டீல்) நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு சம்மந்தி வீட்டுக்காரரைப்போல் நிமிர்ந்து அமருகிறார். ஊர்க்காரர்களும், உறவுக்காரர்களும் அந்த நல்ல சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் அப்படியே வள்ளலை அள்ளி விழுங்கி விடலாமா? என்று அருகில் ஓடிவந்து வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் மணப் பெண்ணுக்கும், மணமகனுக்கும் வள்ளலின் வரவு அதிர்ச்சியையும், பேரானந்தத்தையும் அளிக்கின்றது. என்ன நடக்கின்றது என்பது தெரியாமல் சித்தப்பிரமை பிடித்தவர்கள்போல் சிலையாக மணமக்கள் இருவரும் வந்து நிற்கிறார்கள்.

வள்ளல் ஜிப்பாவை மேலே தூக்கி வேட்டி மடிப்பில் செருகி இருந்த இரண்டு ஐந்து பவுண் தங்கச் சங்கிலியை எடுத்து (இந்த இரண்டு சங்கிலிகளும் எம்.எல்.ஏ. மணமக்களுக்காக வாங்கி வந்தது.) மணமகன் கழுத்தில் ஒன்றையும் மணமகள் கழுத்தில் ஒன்றையும் அணிவிக்கிறார். தேவரும், மூவரும் சேர்ந்து வந்து வாழ்த்தினால் கூட அவ்வளவு மகிழ்ச்சி இருக்காது. ஆனால் காலமெல்லாம் கனவிலும், நினைவிலும் சுமந்து வணங்கப்பட்டதன் தலைவனே தன்னைத் தேடி வந்து வாழ்த்தியபோது அந்த மணமகன் மனதெல்லாம் மத்தாப்பாய் மகிழ்கிறான்.

சுதாகரித்துக் கொண்டே அந்த மணமகன் வள்ளலை இரண்டு மணிதுளிகள் இருக்கச் சொல்லிவிட்டு இரண்டு மாலைகளுடனும், தாலியுடனும் வந்து வள்ளலே! விடிந்தால்தான் முகூர்த்த நேரம் என்று பஞ்சாங்கம் கணித்திருக்கிறார்கள். ஆனால் நீங்கள் வந்த நேரமே எங்களுக்கு முகூர்த்த நேரம் என்று மாலையையும், தாலியையும் ஆசீர்வதித்துக் கொடுங்கள். உங்கள் முன்னிலையிலேயே திருமணத்தை முடித்துக் கொள்கின்றோம் என்று நிற்கிறார்.

பெரியவர்கள் நிச்சயித்த முகூர்த்த நேரத்தில் மணம் முடிப்பதுதான் முறை. உணர்ச்சி வசப்பட்டு மரபை மாற்றக் கூடாது என்று வள்ளல் எவ்வளவோ சொல்லியும் கேட்டுக்கொள்ளாத மாப்பிள்ளை, நீங்கள் மறுத்தால் தற்கொலை செய்து கொள்ளக்கூட தயங்கமாட்டேன் என்று அடம்பிடிக்கவே வள்ளல் தாலி எடுத்தக் கொடுக்கின்றார். கூற்றுவனைக் கூட ஏழெட்டுத் தடவை எட்டி உதைத்துப் பந்தாடிய வள்ளலின் முன்பு ராகுகாலம் எமகண்டமெல்லாம் எம் மாத்திரம். மணம் முடித்து வைத்த வள்ளல் வேலூர் சொல்லவில்லை. மீண்டும் ராமவாரம் தோட்டத்துக்கே வந்து விடுகின்றார். ஏழையின் மனத்தில் அல்ல! நேரடியாகவே அந்த ஏழையிடம் அல்லவா இறைவன் இறங்கி வந்திருக்கிறார். (தொடரும்....)

# வெளிவாரி பரீட்சைக்குத் தோற்றுவதனால் மருந்தாளராகப் பதிவு செய்து கொள்ளலாம்

நடராசா இராசநேரு

பதிவு செய்யப்பட்ட மருந்தாளர்கள் பற்றாக்குறை காரணமாக அனேகமான தனியார் மருந்தகங்களை மூடவேண்டிய நிலை உருவாகியுள்ளது. தற்போது யாழ். குடாநாட்டிலும் ஏனைய பகுதிகளிலும் அதிக வேலை வாய்ப்புள்ள தொழிலாக மருந்தாளர் பதவி உள்ளது. நீங்கள் மருந்தாளராக வர விரும்பினால் 21 வயதுக்கு மேற்பட்ட இலங்கைப் பிரசையாகவும் கீழ்க்கண்ட ஏதாவது ஒரு தகுதிச் சான்றிதழ் பெற்றவராகவும் இருக்கவேண்டும்.

1. மருத்துவ சட்டப்படி சிறிலங்கா மருத்துவ சபையில் இரண்டு வருடங்கள் மருந்தாளர் பயிலுநராகப் பதிவு செய்து இலங்கை மருத்துவக் கல்லூரி சபை (Ceylon Madical College Council) மருத்துவ பீடம், கொழும்பு பல்கலைக்கழகத்தினால் வருடம் தோறும் நடத்தப்படும் மருந்தாளர் வெளிவாரிப் பரீட்சையில் (Certificate of Efficiency As Pharmacist ) சான்றிதழ் பெற வேண்டும். அல்லது,

2. சுகாதார இலாகா மூலமாக (Health Department) நடத்தப்படும் பயிற்சித்திட்டத்தில் மருந்தாளர் உள்ளகத்தில் 2 வருடங்கள் பயிற்சியின் பின்னர் இலங்கை மருத்துவக் கல்லூரி சபையால் நடத்தப்படும் பரீட்சையில் (Certificate of Proficiency as Pharmacist) சான்றிதழ் பெறவேண்டும். அல்லது,

3. பல்கலைக்கழகத்தில் மருந்தாளர் பட்டதாரி அல்லது மருந்தாளர் டிப்போளமா (Universities Act No. 16 of 1978) தகுதி இருக்கவேண்டும். மேற்குறிப்பிட்ட தகுதிச் சான்றிதழ்கள் பெறுவதற்குரிய கற்கை நெறிகளுக்கான குறைந்த பட்ச கல்வித் தகைமைகள்.

1. ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் ஆங்கில பாடத்தில் சாதாரண சித்தி.

2. ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் இரசாயன பாடத்தில் விசேட சித்தியுடன் (Credit Pass) வேறு 2 விஞ்ஞான பாடங்களில் சாதாரண சித்தி பெற்றிருக்க வேண்டும்.

தற்போது Pharmacist (External) பரீட்சைக்குரிய பயிலுநர் மருந்தாளராக (Apprentice Pharmacist) பதிவு செய்வதற்கு ஜி.சீ.ஈ.உயர்தரத்தில் இரசாயன பாடம் உட்பட மூன்று விஞ்ஞான பாடங்களில் சாதாரண சித்தி போதுமானதாக உள்ளது. மேலும் மருந்தாளர் வெளிவாரி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு வயதுக் கட்டுப் பாடு இல்லை. அறுபது வயதுக்கு மேற்பட்டவர்களும் பரீட்சையில் சித்தியடைந்தால் இலங்கை மருத்துவ சபையில் மருந்தாளராகப் பதிவு செய்து தனியார் மருந்தகங்களிலும் தனியார் வைத்தியசாலைகளிலும் தமது ஆயுள்காலம்வரை பணியாற்றலாம்.

தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள மருந்தாளர் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய மேற்படி கல்வித்தகைமையுள்ள ஓய்வுபெறும் நிலையில் உள்ள பட்டதாரிகள், ஆசிரியர்கள் மற்றும் அரச ஊழியர்கள் முன்வர வேண்டும். வெளிவாரி மருந்தாளர் பரீட்சைக்குரிய பயிற்சி வகுப்புக்கள் தற்போது யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணக் கல்லூரியில் (வெளிவாரி பட்டப்படிப்பு) நடைபெற்றுவருகின்றன.

மேலதிக விவரங்களுக்குத் தொடர்பு கொள்ளும் **முகவரி:** மருந்தாளர் பரீட்சை இணைப்பாளர், யாழ்ப்பாணக் கல்லூரி (கொமர்ஷல் வங்கிக்கு அருகில்) 464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**தொலைபேசி இலக்கம்: 0776256292**

கட்டுரையாளர்
மருந்தாளர் பரீட்சை இணைப்பாளர்,
யாழ்ப்பாணக் கல்லூரி (வெளிவாரி பட்டப்படிப்பு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விறகுகள் சிறகு தர
# நித்தமும் பாடுபடும் உறவுகள்

செ.உமாசுதன்

யாழ். குடாநாட்டின் வடக்கே கடல் வளமும் நிலவளமும் சிறந்து விளங்கிய,மக்கள் ஒற்றுமையாய்ச் சேர்ந்து இயங்கிய, வாழ் வில் சிறந்தோங்கிய பிரதேசம் வலி. வடக்கு.கீரிமலை, காங்கேசன்துறை, மாவிட்டபுரம், பலாலி, மயிலிட்டி, வளலாய், வயாவிளான் என இன்னும் பல ஊர்களின் உயிர்கள் வளமாய் இருந்தன.வாழ்வாதாரங்களின் வலிமையாய் தாய் மண்ணின் அழகாய் வளம் பெற்றன.பாடம் தந்த பள்ளிகள் பலவும், அருட்கோலம் தந்த வானுயர் கோபுர கோயில்களும், கல்வி ஒளியும், அருள் ஒளியும், தந்து எமை கற்பித்துக் காத்து நின்றன.எல்லாமுமாய் சிறப்புற்றிருந்தன.

1992ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் எம்மூர்களில் முன்னேறிப் பாய்ந்த இலங்கை இராணுவச் சப்பாத்துகளின் இடுக்குகளிலும் கந்தக வாடையிலும் கருகிப்போனது தாய்மண்.பூஞ்சோலையாய் இருந்த நிலமடந்தை, தன் இயல் நிலை இழந்து குற்றுயிராய், புதர் மண்டி அழகற்றுப் போனது. இன்னமும் மீளவில்லை அந்த ஊர்கள் பல.தொலைந்து போன அழகை மீண்டும் கொண்டு வந்து காண்பி என்று கேட்பதற்கும், தமிழ் சமூகத்தை கட்டிக்காப்பதற்கும் இருந்த வலியவர்கள் போய்விட்டனர் சாமி.வந்து விட்டனர் ஆசாமிகள்.புலித் தோல் போர்த்திய பூச்சாண்டிகள்.

25 வருடங்களுக்கும் மேலாக சொந்த இடம்விட்டுப் பெயர்ந்து, பல இடம் நகர்ந்து சோர்ந்து போய், முகாம்களில் முகவரி தொலைத்த முகங்களோடு மக்கள் முடங்கிக் கிடக்கின்றனர்.ஆங்காங்கே ஒவ்வோர் ஊர்களின் எல்லைப்புறங்களிலும் கிழக்காயும் மேற்காயும், வடக்காயும் தெற்காயும் குடிசை அமைத்து ஒதுங்கியிருக்கின்றனர்.ஒடுங்கியிருக்கின்றனர்.நம்பிக்கையின் பற்றுதலோடு ஒட்டியுறவாடி வாழ்ந்து வருகின்றனர். அவர்களின் அன்றாட வாழ்வின் ஓட்டம் சீராக இன்றி, ஒருவரையொருவர் சார்ந்த உதவிக் கரங்களின் பற்றுதலோடு பயணிக்கின்றது.

### வீடுகளை இழந்தவர்கள்

வலி.வடக்கிலிருந்து தங்கள் நிரந்தர வீ(கூ)டுகளை இழந்து வந்தவர்கள் ஒன்று சேர்ந்து பல நலன்புரி முகாம்களில் தங்கள் முகங்களை புதைத்து மீண்டுவரத் துடிக்கின்றனர்.இந்த இதயத் துடிப்புகளின் ஒரு பகுதியினர் உரும்பிராய் யோகபுரம் நலன்புரி முகாமிலே காலத்தைக் கழித்து வருகின்றனர்.கோப்பாய் பிரதேச செயலர் பிரிவின் கீழ் வருகின்ற இந்த நலன்புரி முகாமில் ஏறத்தாழ 62 குடும்பங்கள் வரை வாழ்ந்துவருகின்றனர்.இவர்களின் பொருளாதார மேம்பாடு என்பது விறகு வெட்டுதல், தோட்டம் செய்தல் என்றவாறு நகர்கிறது.இருந்தாலும் மிக அதிகமானவர்கள் நீண்ட தூரங்களுக்குச் சென்று விறகு வெட்டும் தொழிலைச் செய்து வருகின்றனர்.

இவர்கள் விறகு வெட்டிவர வேறு இடங்களுக்கு செல்லவில்லை. மாறாக உயர் பாதுகாப்பு என்ற அடிமை அரண்களுக்குள் சிக்குண்டு விடுவிக்கப்பட்ட தங்கள் சொந்த தாய் மண்ணை அலங்கரித்த அயலூர்களை நோக்கிச் செல்கின்றனர்.வாரத்தில் ஐந்து நாள்களும் 13 கிலோ மீற்றர் தூரத்தைக் கடந்து பயணிக்கின்றனர். எந்தவித செயற்கை விசையும் உறுதுணை செய்யாத போதும், ஓட்டை உடைசலோடு ஊசலாடும் சைக்கிளை வாகனமாக்கி உடல் உழைப்பையும் வியர்வையையும் ஊதியமாய் செலுத்தி, அன்றாடம் பிழைக்கின்றனர்.ஒவ்வொரு நாள்களும் தாய் மண்ணை ஸ்பரிசிக்கும் ஆறுதலோடும், வாழ்வின் எதிர்காலச் சுமையோடும் சைக்கிளின் மிதியை உதைத்து சீராய் சுழன்று காற்றோடு கதைபேசி காலையில் பயணிக்கின்றனர்.

ஆனால் மீண்டும் மதிய வேளையில் இருப்பிடம் வரும்போது வியர்வையின் உழைப்பான விறகுகளின் சுமையை வண்டிகளில் தாங்கி காற்றின் எதிர்விசையோடுபோராடி அங்கும் இங்கும் அல்லாடி வந்து சேர்கின்றனர். இவர்களின் உழைப்புக்கு ஈடு இணை ஏது...?

[illegible]
ஒவ்வொரு நாளும் காலை 8 மணிக்கு புறப்படும் இவர்கள் மதியவேளை தாண்டி விறகுகளின் சுமையோடு மீண்டு வருகின்றனர். 50 கிலோ வரையான விறகை தங்களின் வாழ்வின் விடியலுக்காய் கொண்டு வந்து சேர்க்கின்றனர்.மீண்டும் பல மைல்கள் பயணித்து, வாடிக்கையாக பெறும் சிலருக்கும், பல வீடுகளின் கதவைத் தட்டி விறகு வேண்டுமா என கேட்டும், கொடுத்து வருகின்றனர்.நீண்ட தூரம் பயணிக்கும் இவர்கள் ஒரு கிலோ விறகை 10 ரூபா வீதம் கொடுக்கின்றனர்.இந்த வருவாய் என்பது எல்லாச் சந்தர்ப்பங்களிலும் உடனடியாக கிடைத்துவிடுவதில்லை.ஏனெனில் இப்போது எல்லோரும் விறகு அடுப்பை பாவிப்பதில்லை.காஸோடும், கறண்ட் அடுப்போடும், மண்ணெண்ணெய் குக்கரோடும் சமையலை முடித்துவிடுகின்றனர். சுமையோடு பல இடம் அலைந்து திரியும் இந்த உறவுகள் மீண்டும் வசதிகள் அற்ற சிறிய வீட்டின் அடைப்புக்கள் முடங்குகின்றனர். விறகையும் ஓரமாய் பரப்பி வைத்து அதை விற்று வாழ்வை ஓட்டக் கஷ்டப்படுகின்றனர். பலர் இவர்களைக் கண்டு கொள்வதில்லை. மாறாக விறகுகாலைகளிலே சென்று ஒரு தூக்கு விறகை 1,500 ரூபாவிலை கொடுத்து வீட்டுக்குக் கொண்டு செல்கின்றனர். ஏன் இந்த உறவுகளின் உழைப்புக்கும் வியர்வைக்கும் இவர்கள் ஓர் ஊதியத்தை தந்துவிடக் கூடாது....?

### கூலி வேலைகள்


இவை தவிர இதற்குச் சமாந்தரமாக அருகில் உள்ள வயற் காணிகளுக்கும் தோட்டங்களுக்கும் சென்று கூலி வேலைகளை செய்து வருகின்றனர்.ஆண்கள் அதிகபேர் விறகு வெட்டச் செல்ல பெண்கள்களை எடுத்தல், புகையிலைக் கன்று நடல், கீற்றுக் கீறல்,தறை தட்டுதல், கரட் பீற்றூட் பாத்தி கட்டுதல் என பலவற்றை ஆண்களுக்கு நிகராகச் செய்கின்றனர்.பாரங்களைத் தலையில் சுமந்து வாழ்வுக்காய் உழைக்கின்றனர். பிள்ளைகளின் எதிர்காலத்துக்காய் துயரம் சுமந்து பாடுபடுகின்றனர்.

மழைக் காலங்களில் வீடுகளுக்குள் முடங்கிப் போகும் இவர்கள், பின்னர் வாழ்வின் வலிமைக்காக மீண்டும் துடிப்போடு எழுந்து வேகமெடுக்கின்றனர்.இடை நாள்களில் ஆண், பெண் என்ற வரையறை வேற்றுமையின்றி தோட்டம் துரவுகளில் நிலக்கிழாராய் நிமிர்ந்து உலாவருகின்றனர்.

### ஒளியின் கீற்றுத் தென்படுமா?

இவர்களின் வாழ்வில் பிரகாசமான ஒளியின் கீற்று எப்போது தென்படும்? சொந்தத் தாய் மண்ணின் சுவீகரிப்பு எப்போது இவர்களை அன்பால் அரவணைக்கும்..? சுதந்திரக் காற்றின் சுவாசம் எப்போது இவர்களுள் வாசம் செய்யும்...? உழைப்பின் நம்பிக்கையோடும். உறவுகளின் அன்பான கூட்டிணைவோடும் ஆங்காங்கே ஊசலாடித் திரிகின்றனர். வானத்தைச் சோகம் கலந்த புன்னகையில் வளைத்தபடி. சொந்தத் தாய் நிலங்களின் கரங்களை நம்பிக்கையோடு நினைவுகளில் இறுகப் பற்றியபடி. விடியலை எதிர் பார்த்தபடி. இருந்தும், வசந்தங்களின் வருகைக்கான அறிகுறிகள் இது வரை தென்படவில்லை. பார்த்திருக்கின்றனர்....






> **விறகையும் ஓரமாய் பரப்பி வைத்து அதை விற்று வாழ்வை ஓட்டக் கஷ்டப்படுகின்றனர். பலர் இவர்களைக் கண்டு கொள்வதில்லை மாறாக விறகுகாலைகளிலே சென்று ஒரு தூக்கு விறகை 1500 ரூபாவிவைக் கொடுத்து வீட்டுக்குக் கொண்டு செல்கின்றனர். ஏன் இந்த உறவுகளின் உழைப்புக்கும் வியர்வைக்கும் இவர்கள் ஓர் ஊதியத்தை தந்துவிடக் கூடாது....?**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோதிடனின் நயவஞ்சகம்

சங்ககிரி என்ற நாட்டின் அரண்மனையில் நவீன் என்ற சோதிடன் இருந்தான்.

மன்னன் சிவானந்தின் ஆஸ்தான சோதிடன் அவன். எந்த ஒரு காரியமானாலும் நவீனிடம் கலந்து பேசாமல், சிவானந்த் செய்வதில்லை. அவனுக்கு சோதிடத் திறமை அபாரமாக இருந்தாலும் ஒரு கீழ்த்தனமான எண்ணமும் அவன் மனதுக்குள் இருந்தது. மன் னருக்கு அழகிய மகள் ஒருத்தி இருந்தாள். அவள் பெயர் ரூபா. அவளுக்குத் திருமணம் ஆகவில்லை. அவளை எப்படியாவது திருமணம் செய்து விட வேண்டும் என்ற எண்ணத்தைத்தான் அவன் தன் மனதுக்குள் வைத்துக் கொண்டிருந்தான். அதற்கான தருணத்தை எதிர்பார்த்து அவன் காத்திருந்தான்.



ஒரு நாள்மன்னர் நவீன்! ரூபாவுக்கு வயது அதிகமாகிக் கொண்டே போகிறது. இதுவரை வந்து சென்றஎந்தவரனிலும்அவளுக்குத்திருப்தி இல்லை. எனக்கும் திருப்தி இல்லை. ஆனால் வரன் தேடாமலும் இருக்க முடியவில்லை. ஒரு நல்ல வரனைப் பார்! என்று கேட்டார்.

அதற்கு நவீன் ஏற்கனவே எண்ணி வைத்திருந்த விதத்தில், மன்னா! ரூபாவின் ஜாத கத்தைப் பார்த்ததில் அவளுக்குப் பதினெட்டு வயது தொடங்கியதும், உங்கள் அரசு பறிபோகும் என்ற நிலை உள்ளது என்றான்.

இந்த நயவஞ்சகமான பேச்சை உணர்ந்து கொள்ளாத மன்னர், நவீன்! நீ என்ன சொல்கிறாய்? என்று திடுக்கிட்டுக் கேட்டார்.

உண்மைதான் மன்னா! என் பேச்சில் தங்களுக்கு நம்பிக்கை இல்லையா? என்று தேன் ஒழுகப் பேசினான்.

இன்னமும் இரண்டு மாதத்தில் அவளுக்குப் பதினேழு வயது பூர்த்தியாகி, 18 ஆவது வயது தொடங்கப் போகிறது. அப்படியானால், இன்னும் இரண்டு மாதம்தான் இந்த அரசு எனக்குச் சொந்தமாக இருக்குமா? என்று தழுதழுத்த குரலில் கேட்டார் மன்னர்.

மன்னா! பதறாதீர்கள். அதற்கும் ஜாதகத்தில் ஒரு யோசனை உள்ளது. அதாவது ரூபா தங்களிடம் இருக்கும் வரைதான் தங்களுக்குப் பிரச்சினை. அவள் உங்களை விட்டு எங்காவது வெகு தொலைவில் சென்று விட்டால், அவளுக்குப் பதினெட்டு வயது தொடங்கினாலும் நீங்கள் அரசை இழக்கமாட்டீர்கள்! என்றான் ஜோதிடன் நவீன்.

அப்படியா! அப்படியானால் இந்த இரண்டு மாதங்களுக்குள் ஏதாவது ஒரு வரனைப் பார்த்து, அவளுக்குத் திருமணத்தை நடத்தி, மாமியார் வீட்டுக்கு அனுப்பி விட்டால், என் பெற்ற கடமையும் தீரும். அரசும் தங்கும். எப்படி என் யோசனை? என்று கேட்டார் மன்னர்.

மன்னா! யோசனை நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் அவளது ஜாதகப்படி அவளுக்குத் திருமணம் நடப்பது பதினெட்டாவது வயதில் தான். இந்த இரண்டு மாதங்களுக்குள் அவளது திருமணத்தை நடத்தவே முடியாது! என்றான் நவீன்.

அப்படியானால் என் அரசை இழக்காமல் இருக்க வழி? என்று கேட்டார் சிவானந்த்.

மன்னா! ஒரே ஒரு வழிதான் உள்ளது. ரூபாவை நீங்கள் கண்காணாத தேசத்துக்கு அனுப்பி விட வேண்டும். மிகவும் கஷ்டமாகத்தான் இருக்கும். ஒரு மகளை இழந்தால் உங்களால் இன்னொரு மகளைப் பெற்றுக் கொள்ள முடியும். ஆனால் அரசை இழந்தால் உங்களால் திரும்ப அதனை அடையவே முடியாது. இந்த இரண்டில் உங்களுக்கு எது விருப்பமோ அதன் படி செய்யுங்கள்!என்றான் நவீன்.

மன்னருக்கு அரசுதான் பெரிதாகத் தோன்றியது. நவீன் எனக்கு அரசுதான் முக்கியம். ரூபாவை எப்படி, எங்கு அனுப்பி வைப்பது?

அதற்கும் வழி உள்ளது. ஆளின் நீளத்துக்கு ஒரு பேழை (பெட்டி) செய்து அதில் அவளைப் படுக்க வைத்து, ஆற்றில் விட்டு விடலாம். ஆறு போகிற போக்கில் பெட்டி போகும். எமது நாட்டின் எல்லையை அந்தப் பெட்டி கடந்து விட்டாலே போதும். உங்கள் அரசுக்கு எந்தவித ஆபத்தும் இல்லை! என்றான் நவீன்.

அடுத்த இரண்டாம் நாளே அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டது. ஐந்தடி நீளமும் இரண்டடி அகலமும் கொண்ட சந்தன மரத்தைக் கொண்டு அழகிய பேழை தயார் செய்யப்பட்டது. இரவில் ரூபாவுக்கு உணவில் மயக்க மருந்து கலந்து கொடுக்கப்பட்டது. அதைச் சாப்பிட்டு அவள் மயக்கமானதும், அவள் அந்தப் பெட்டிக்குள் படுக்க வைக்கப்பட்டாள். மூச்சுக் காற்றுப் போய் வருவதற்கு மட்டும் பெட்டியின் மேற் புறத்தில் ஒரு சிறு துளை இடப்பட்டது. பிறகு பெட்டி தாழிடப் பட்டு இரவோடு இரவாக ஆற்றில் கொண்டு போய் விடப் பட்டது. மறுநாள் காலை நேரம் பெட்டியின் வருகைக்காககுறிப்பிட் தூரத்தில்ஆற்றின்கரை யோரமாகக் காத்திருந்தான் சோதிடன் நவீன். இதற்கிடையேஅதே ஆற்றின் கரையில், நவீன் அமர்ந்திருந்த இடத்துக்கு முன்னே சிறிது தூரத்துக்கு அப்பால்விகடபுரிநாட்டு இளவரசன் இளங் குமரன் அமர்ந்து மீன் பிடித்துக் கொண்டிருந்தான்.

(தொடரும்)

## வரலாற்றில் இன்றைய தினம்

1539 - மின்னல் தாக்கி சென் ஜேக்கப் தேவாலயம் எரிந்தது.
1848 - வெள்ளை மாளிகையில் காஸ் விளக்குகள் முதன் முதலாகப் பொருத்தப்பட்டன.
1948 - இஸ்ரேலை கணடா அங்கீகரித்தது.
1949 - தொழிற்சாலைகளை ஹங்கேரி தேசியமயமாக்கியது.
1862 - கிரிக்கெட் பந்து கண்டுபிடிக்கப்பட்டது.
1968 - இஸ்ரேலிய கொமாண்டோக்கள் 13 லெபனானிய விமானங்களை அழித்தனர்.
1972 - 'லைப்' சங்சிகையின் வெளியீடு நிறுத்தம்
1983 - யுனெஸ்கோவிலிருந்து விலகுவதாக அமெரிக்கா அறிவிப்பு.
1988 - பொதுத் தேர்தல் நியமனப் பத்திரம் தாக்கல் இன்று.
1999 - புங்குடுதீவுப் பகுதியில் 20 வயது இளம் பெண் சரவணபவானந்தக் குருக்கள் சாரதாம்பாள் கடத்தப்பட்டுப் படுகொலை.
2002 - ஆலயங்களில் பூசைகள் நிறைவெய்தியதும் தமிழில் ஆசீர்வாதம் வழங்குவது என சிவாச்சாரியர்கள் ஒன்று கூடி முடிவு.
2002 - மீள்குடியமர்வு பற்றியே அடுத்த சுற்றுப் பேச்சு என லண்டனில் அன்ரன் பாலசிங்கம் அறிவிப்பு.
2006 - கூட்டமைப்பு எம்பிக்கள் கனடா செல்ல அரசு அனுமதி மறுப்பு.
2006 - கடத்தப்பட்ட புளொட் உறுப்பினர்கள் சடலங்களாக மீட்பு. இராணுவம் மீதே சந்தேகம் என்கிறார் சித்தார்த்தன்.
2006 - சதாம் ஹுசைன் தூக்கிலிடப்பட்டார்.
2009 - இடம்பெயர்ந்தோர் மீள்குடியமர்வு; காலக்கெடு விதிக்க முடியாதென அரசு அறிவிப்பு
2009 - குற்றச்சாட்டு இன்றி சிறையில் தமிழர்; விரைவில் விடுவிக்க ஏற்பாடு என சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் தெரிவிப்பு.
2011 - கடந்த 2010 இல் யாழ்.மாவட்டத்தில் 83329 வாகனங்கள் பதிவு; அவற்றில் மோட்டார் சைக்கிள்கள் 63781.
2013 - மன்னார் பெரிய மனித புதைகுழிதொடர்பாக ஆராய சர்வதேச நிபுணர் குழுதேவையென தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கோரிக்கை.






## கடிகாரம்



எங்கள் வீட்டுக் கடிகாரம்
எனக்கு நல்ல ஆத்தாரம்
அதிகாலை என்னை அழைக்கும்
அழகாய் என்னை எழுப்பும்

படுக்கையை விட்டு எழுவேன்
பாங்காய் பாடம் படிப்பேன்
காலைக்கடன்கள் முடிப்பேன்
கடமைகள் யாவையும் செய்வேன்.

பள்ளி செல்லும் நேரம்
பாடிச் சொல்லும் கடிகாரம்
புத்தகப் பையை எடுப்பேன்
பள்ளி நோக்கிச் செல்வேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குணத்தை அறிந்து நடப்பதே நல்லது

தமிழ் சமூகத்துடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான சில முக்கிய நகர்வுகளை இலங்கையின் புதிய அரசு முன்னெடுத்துள்ளது. தமிழ் மக்கள் மீண்டும் தேசிய அரசியலுக்குள் கொண்டு வரப்படுகின்றனர்.

உள்நாட்டுப் போரின்போது இடம்பெற்ற பல்வேறு குற்றச்செயல்களை விசாரணை செய்வதற்காகவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீட்டை வழங்குவதற்குமான உண்மை மற்றும் மீளிணக்கத்துக்கான சுயாதீன உள்நாட்டு ஆணைக்குழு ஒன்று உருவாக்கப்படுவதற்கான திட்டங்கள் அங்கு காணப்படுகின்றன.

முன்னர் காணப்பட்ட அதிகாரத்துவ ஆட்சி மற்றும் சமூகப் பிரிவினைகள் போன்றவற்றிலிருந்து விலகி சிறந்த எதிர்காலத்தை நோக்கி இலங்கை நகர்கிறது.

இவ்வாறு இலங்கை குறித்து பல்வேறு கருத்துகள் உலக அரங்கில் வெளிக்கிளம்பத் தொடங்கியுள்ளன. இதுமட்டுமின்றி சில எதிர்வு கூறல்களும் முன்வைக்கப் படுகின்றன.

இந்த நிலையில் தற்போதைய அதி உத்தம தலைமையின் அணுகுமுறைகள் தமிழ்மக்கள் மத்தியில் சற்று நம்பிக்கையை எழச்செய்திருக்கின்றன. காலாகாலமாக இலங்கை ஆட்சியாளர்கள் தமிழர்கள் தாயகத்தை ஓர் எதிரி நாடாகவே பார்த்தனர். அவர்கள் தமிழ் மக்களின் மனங்களை வெற்றிகொள்ளத் தவறினர். அடக்கினால் வெற்றி பெறலாம் என்றும் நினைத்தனர்.

அது ஜே.ஆர். ஆக இருக்கட்டும், பிரேமதாஸவாக இருக்கட்டும், சந்திரிகா அம்மையாராக இருக்கட்டும், மகிந்த ராஜபக்சவாக இருக்கட்டும்.- ஆட்சிபீடம் ஏறிய அத்தனை பேருமே வடக்கு, கிழக்கை அடக்குமுறைக்குள்ளேயே வைத்திருக்கவே முயற்சித்தனர். இதன் பெறுபெறாகவே கடந்த 30 ஆண்டுகளாக இந்த நாட்டில் இரத்த ஆறு ஓடியது.

ஆனால், ஜனாதிபதி மைத்திரி இந்தக் கணக்கில் இருந்தும் அந்தப் பாதையில் இருந்தும் சற்று விலகி நடக்கின்றார். அவர் ரணில் விக்கிரமசிங்கவின் மூளையின் உபாயத்தில் இருந்து செயற்படுகின்றார் என்பது அரசியல் நோக்கர்களின் கருத்தாகவும் இருக்கிறது. எனினும், பிரதமர் ரணிலின் மென்மையான நகர்வுகள் எப்படி இருக்கும் என்பது பற்றி தமிழ் தலைமைகள் பட்டறிவோடு செயற்பட வேண்டியது அவசியமாகும்.




அதே நேரம் வடக்கு மக்களின் மனங்களை வென்று, அவர்களிடம் நற்பெயர் பெற்றால் மட்டுமே எதிர்காலத்தில் இராணுவத்தினருக்காகத் தொங்கிக் கொண்டிருக்கும் தூக்குக் கயிறுகளை கீழ் இறக்க முடியும் என்பதும் ஒரு கணக்காக இருக்கிறது. இது தப்புக்கணக்கு அல்ல, சரியான இலக்கு என்பதும், போர்க்குற்றம் பற்றிப் பேசிய அமெரிக்கா இப்பொழுது அது பற்றி வாய் திறக்காமல் அமைதி அடைந்துவிட்டது. இந்த நிலையில், தமிழ் மக்களையும் அமைதியடையச் செய்ய வேண்டுமாயின் நாட்டின் தலைவர் நல்லவர் எனும் நிலையைத் தமிழ் மக்களின் மனங்களில் விதைத்தாக வேண்டிய கட்டாய சூழல் இப்பொழுது ஏற்பட் டுள்ளது. இவை ஆய்வாளர்களின் கருத்தாகவும் இருக்கிறது.

மைத்திரிபால சிறிசேன மென்மையானவர், எளிமையானவர் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், அவரது நகர்வுகள், தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயத்தில், போர்க்குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட விடயங்களில் எவ்வாறு அமையும் என்பது நோக்கற்பாலானது.

இன்னொன்றையும் இவ்விடத்தில் தெளிவாகக் கூறலாம். மைத்திரிபால சிறிசேன மகிந்த ராஜபக்சவைக் காப்பாற்றுவார். அவர் தமிழ் மக்களிடம் நல்ல பெயரைக் பெற்றுக்கொண்டு இன்னொரு புறத்தில் சிங்கள மக்களின் நன்மைக்காகப் பாடுபடுவார்.

இதனை எடுத்தியம்பும் வகையிலேயே அவரது அண்மைய வடக்குப் பயணம் அமைந்துள்ளதைப் பார்க்க முடிகிறது. வடக்கு மீது மையம்கொள்ளும் மைத்திரிபாலசிறிசேன கூறும் கருத்துக்கள் உண்மையில் வரவேற்கப்பட வேண்டியவைதான். அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஆனால் அவர் அவற்றை எல்லாம் எந்த நோக்கத்துக்காகச் செய்கின்றார் என்பதில்தான் தங்கியுள்ளது தமிழர்களின் எதிர்காலம்.

ஏனெனில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆட்சி ஏற்ற ஓராண்டு காலப்பகுதியில், அவர் தமிழ்த் தலைமைகளுக்குக் கொடுத்த வாக்குறுதிகளில் எவற்றையெல்லாம் நிறைவேற்றினார் என்பது குறித்து ஆராய்ந்தும், அவற்றைப் பெற எத்தகைய வழிமுறைகள் முன்னெடுக்கப்பட்டன என்பது குறித்தும் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

இதுவரை காலமும் சோரம் போகாமல் இருந்த தமிழ் மக்களின் தலைமைகள், வெற்றுவார்த்தைகள் மீது மயக்கம் கொள்ளாமல் இருப்பார்கள் என்று நம்புவோம். மயங்கினால் தமிழர்களின் இருப்புக்குச் சாதகமான நிலைமையில்லை என்பதையும் கருத்தில் கொண்டு செயற்படுவதே எமது அபிலாசைகளை எட்டக்கூடிய நிலைமையை உருவாக்கும் என்பதை மனதிலிருத்திக் கொள்வோமாக!



# கொழுந்து விட்டு எரியும் ஆசையும் கொதிக்கும் மனோநிலையும்

கார்த்தி

ஒருவன் முன்னேறுவானா அல்லது மாட்டானா என்பதைச் சோதித்துப் பார்க்கும் உரைகல் எதுவென்றால், அவன் வேலை மீது கொள்ளும் கொழுந்து விட்டெரியும் ஆவல்தான்.

நீ உன்னுடைய வாழ்வில் முன்னேற வேண்டுமானால்உன்னுடையவேலையை விரும்பினால் மட்டும் போதாது. அதன் எசமானன் என்ற உணர்ச்சி மேலிட்டு நீ வேலை செய்ய வேண்டுமேயன்றி, அதனுடைய அடிமைபோன்று நீ வேலை செய்யக்கூடாது. நீ எந்த வேலை செய்த போதிலும் ஒரு வெற்றிவீரன் போன்று வேலை செய்வாயாக. வெற்றி வீரன் அடையக்கூடிய பலத்தை, ஆற்றலை அந்த வேலையிலிருந்தும் நீ பெற்றுக் கொள்வாயாக. இந்த உலகில் காரண காரியங்களின் தொடர்பை நாம் அறிவோம். ஒவ்வொரு காரியத்திலும் ஒரு காரணம் இருக்கிறது. ஒரு காரணம் ஒரு காரியத்தில் முடிகின்றது. இது உலக நியதி. அந்த அளவில் எண்ணம் ஒரு காரணம்; பயன் ஒரு காரியம். எண்ணங்களை நாம் உபயோகிக்க முடியுமா?

> இந்த உலகில் காரண காரியங்களின் தொடர்பை நாம் அறிவோம். ஒவ்வொரு காரியத்திலும் ஒரு காரணம் இருக்கிறது. ஒரு காரணம் ஒரு காரியத்தில் முடிகின்றது. இது உலக நியதி.

முடியும் என்கிறார்கள் மனோதத்துவ நிபுணர்கள், உளச்சிகிச்சை மருத்துவர்கள். பல மருத்துவமனைகளில் நோய்கள் உளச்சிகிச்சை மூலம் குணப்படுத்தப்படுகின்றன. முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜெர்ரி போர்டு பலமுறை மனநலமருத்துவர்களிடம் சென்று சிந்தனைகளைச் சீர்ப்படுத்திக்கொண்டு வந்திருக்கிறார். எண்ணங்களை மாற்றுவதன் மூலம், ஆராய்வதால், அதன் மூலம் நெருக்கடி குறைகிறது என்கிறார் அவர். மக்களில் பெரும்பான்மையானோர் பழகிய பாதைகளில் பயணம் செய்வதையே விரும்புகிறார்கள். புதிய பாதை, புதுமை ஆர்வம், புதிய சாதனைகளில் அவர்கள் ஈர்க்கப் படுவார்கள்.

எனினும் தாங்கள் தங்களுடைய சொந்த வாழ்க்கையில் புதுமைகளைச் செய்ய, புதிய மாறுதல்களில் ஈடுபடத் தயங்குவார்கள்.

வாழ்க்கை என்பது வேறுபாடுகளே. வேறுபடுவதனாலேயே அவை பளிச்சென்று அடையாளம் காணப்படுகின்றன; போற்றப்படுகின்றன; நேசிக்கப்படுகின்றன; கவரப்படுகின்றன. உங்கள் முறை இன்னதென்று நீங்கள் தேர்ந்தெடுத்து விட்டால், அந்தத் துறையில் உங்கள் இடம் என்ன? அந்தத்துறையில்மிளிர்வதற்காக இயற்கையில் உங்களுக்கு வழங்கப்பட்ட நன்கொடை போன்ற ஆற்றல் என்ன? இதை முன்கூட்டியே ஒரு தூரப் பார்வையோடு கணக்கிடுங்கள்; கற்பனை செய்யுங்கள்.

நீரிலிருந்து வரும் ஆவியால் ஓர் இயந்திரத்தை ஓட்ட வேண்டுமானால் அந்த நீர் 240 டிகிரி கொதிக்க வேண்டும். 200 டிகிரி கொதித்தால் அது போதாது. 240 டிகிரிக்குக் குறைவான வெதுவெதுப்பான நீரை எடுத்துக் கொண்டு ஏன் தங்களுடைய வாழ்க்கை இயந்திரம் ஓடவில்லை என்று ஆச்சரியப்படுகின்றார்கள். எந்தவிதம் வெதுவெதுப்பான நீர், ஓர் இயந் திரத்தை ஓட்டிக் கொண்டு செல்லாதோ, அதே மாதிரி கொதிக்கும் மனோநிலையின்றி வெதுவெதுப்பான,மனோநிலையுடன் எந்தக் காரியத்தையும் ஆற்ற முடியாது. எனவே, நாம் எம்முடைய எண்ணத்தையும் போதியளவு கொதிக்கவைக்க வேண்டுமானால் நம் மனதை ஒருமுகப்படுத்தி அதில் செலுத்த வேண்டும். அந்த எண்ணம் கொதித்து ஆவியாகி எம்முடைய அகமெங்கும் பரவி, ரத்தக்குழாய்களில் ஓடி ஒவ்வொரு மயிர்க்காம்புகள் வழியாகவும் வெளியேற வேண்டும். அது எம்முடைய இதயத் துடிப்பை விட, மூச்சை விட எமக்கு நெருங்கியதாக இருக்க வேண்டும்; அது எம்முடைய ஒவ்வொரு தசைநாரிலும் தன்னுடைய ஒளிப்படத்தைத் தொங்க விட்டிருக்க வேண்டும். 1757 ஆம் ஆண்டு இளையடிட் டேவன், உயர் கோமகனிடம் கூறினார். 'பிரபு'வே! என்னால் இந்த நாட்டைக் காப்பாற்ற முடியும். வேறு எவராலும் முடியாது ஆம்! அவ்விதம் காப்பாற்றினார். நெப்போலியனைத் தோற்கடித்து, செயிண்ட் ஹெலினா தீவுக்குக் கப்பலேற்றினார். அவருக்குக் கலை, சங்கீதம், சித்திரம் ஆகியவைகளின் மீது கொஞ்மேனும் பிரேமையில்லை. அவர் விரும்பியதெல்லாம் அரசியல் ஆதிக்கம்தான். அதைத் தன்னுடைய கொதிக்கும் மனோநிலை யால் பெற்று வெற்றி அடைந்தார்.

மனிதனுக்கு வேண்டிய விடயங்கள் மூன்றே மூன்றுதான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** நண்பர்கள் எதிர்பார்ப்புடன் நடந்து கொள்வர். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். பெண்கள், வீட்டுச் செலவுக்காகக் கடன் வாங்குவர். உடல் நலத்துக்குச் சிகிச்சை தேவைப்படலாம்.

**இடபம்:** நற்செயலால் சமூகத்தில் புகழ் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். இஷ்டதெய்வ வழிபாடு சிறப்பாக நடந்தேறும். புத்திரரின் நற்செயல் பெருமை தேடித் தரும்.

**மிதுனம்:** நண்பருடன் கருத்து வேறுபாடு ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். சேமிப்புப் பணம் செலவுக்குப் பயன்படும். உடல்நலத்துக்குச் சிறு அளவில் மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம்.

**கடகம்:** கடந்த கால உழைப்புக்கான நற்பலன் கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் உயரும். பெண்கள், குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர். இஷ்ட தெய்வ வழிபாட்டை நிறைவேற்றுவீர்கள்.

**சிங்கம்:** மன அமைதியைப் பாதுகாப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். பெண்களுக்குக் குடும்பத்தில் திடீர் செலவு ஏற்படலாம். சீரான ஓய்வு இன்றேல் உடல்நலம் பாதிக்கும்.

**கன்னி:** அவமதித்துப் பேசியவரும் அன்பு பாராட்டுவர். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் உயரும். சுப நிகழ்ச்சி நடத்தத் திட்டமிடுவீர்கள். மாணவர்கள் ஆர்வத்துடன் படிப்பர்.

**துலாம்:** எதிர்கால வளர்ச்சிக்காகப் பாடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் மேலதிக இலாபம் கிடைக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள்கள் வாங்குவர். பணியாளர்களுக்குப் பணிச்சுமை குறையும்.

**விருச்சிகம்:** குடும்பத்தில் பொறுப்பு அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில், புதிய உத்தி மூலம் ஆதாயம் அடைவீர்கள். கண்களின் பாதுகாப்பில் கவனம் தேவை. பெண்களால் நன்மை உண்டாகும்.

**தனுசு:** இனம் புரியாத குழப்பம் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் நிர்வாகச் செலவு அதிகரிக்கும். உடல் நலத்தில் கவனம் தேவை. மாணவர்கள் சாகச விளையாட்டில் ஈடுபடக் கூடாது.

**மகரம்:** சாதுரியமாகச் செயற்பட்டு வெற்றி காண்பீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் உயரும். உறவினர்களுக்கு இயன்ற அளவில் உதவுவீர்கள். மாணவர்கள் சிறந்த தரத் தேர்ச்சி பெறுவர்.

**கும்பம்:** எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேரும். தொழில் வளர்ச்சியால், வருமானம் அதிகரிக்கும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள்.


**மீனம்:** வழக்கத்துக்கு மாறாகப் பணிச்சுமை அதிகரிக்கும். தொழிலில் அளவான மூலதனம் போதும். இலாபம் சுமாராக இருக்கும். பெண்கள் நகை இரவல் கொடுத்து, வாங்குவது கூடாது.

# ஜனவரி1 இல் எட்டுப் படங்கள் வெளிவரும்



வழக்கமாக தீபாவளி, பொங்கல், தமிழ்ப் புத்தாண்டு, சுதந்திர தினம் போன்ற விசேட நாள்களில் தான் அதிக படங்கள் வெளியாகும். இந்த முறை (ஜனவரி 1) ஆங்கிலப் புத்தாண்டு அன்று ஏராளமான படங்கள் வெளியாகின்றன. புதுமுகங்களின் நடிப்பில் கீதாஞ்சலி செல்வ ராகவன் இயக்கியுள்ள "மாலை நேரத்து மயக்கம்", ஆர்.பி.ரவி இயக்கத்தில் சக்திவேல் வாசு நடிக்கும் "தற்காப்பு", பிரியங்கா நடித்துள்ள "கோடைமழை", நிகா, இனியா நடிக்கும் "கரையோரம்" தவிர "பேய்கள் ஜாக்கிரதை", "நாலு பேரு நாலுவிதமா பேசுவாங்க", "ஓம் மகாசக்தி", "இதுதாண்டா போலீஸ்" என 8 படங்கள் வெளியாக உள்ளன.










பேஸ் புக்கில் பிடித்தவை...



கணவன் மனைவி இருவரும் ஓவியக் கண்காட்சி ஒன்றுக்குச் சென்றிருந்தார்கள். இலைகளால் ஆன ஆடை அணிந்த ஒரு பெண்ணின் படத்துக்கு வசந்த காலம் என்று தலைப்புக் கொடுத்திருந்தனர்.

அந்தப் படத்தின் அருகே வெகுநேரம் நின்று கொண்டிருந்த கணவரைப் பார்த்து எரிச்சலோடு மனைவி சொன்னாள்.

நீங்க எவ்வளவு நேரம் நின்றாலும் இலையுதிர் காலம் வராது, வாங்க போகலாம்.

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 6 | | | 4 | | | 9 |
| | | | | 3 | | 8 | | |
| 9 | | | | | | | 6 | |
| | | | 6 | | | | | 2 |
| | 8 | | | 7 | | | 3 | |
| 3 | | | | | 5 | | | |
| | 9 | | | | | | | 1 |
| | | 1 | | 9 | | | | |
| 4 | | | 3 | | | 2 | | 7 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 3 | 6 | 1 | 2 | 5 | 4 | 7 | 9 |
| 2 | 1 | 7 | 9 | 6 | 4 | 3 | 5 | 8 |
| 4 | 9 | 5 | 8 | 7 | 3 | 2 | 1 | 6 |
| 9 | 8 | 1 | 7 | 4 | 2 | 6 | 3 | 5 |
| 5 | 7 | 4 | 6 | 3 | 1 | 9 | 8 | 2 |
| 3 | 6 | 2 | 5 | 8 | 9 | 7 | 4 | 1 |
| 1 | 2 | 8 | 4 | 9 | 7 | 5 | 6 | 3 |
| 7 | 5 | 3 | 2 | 1 | 6 | 8 | 9 | 4 |
| 6 | 4 | 9 | 3 | 5 | 8 | 1 | 2 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தைஏற்படுத்தவேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதி ... என்றும் அழைக் ...) இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப் பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட் டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டி ருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்பவேண்டியதேவேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப் பானிய நிறுவனமான நிக்கோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றி கரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது ... பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமையலறை இரகசியம்

கறியை விரைவாகச் சமைக்க, அத்துடன் சிறிதளவு மசித்த பப்பாசிப்பழத்தைச் சேர்க்கவும்.

கீரையைச் சமைக்கும் போது பச்சை நிறம் மாறாமல் இருக்க, ஒரு சிட்டிகை அப்பச் சோடாவை அல்லது பேக்கிங் சோடாவைச் சேர்க்கவும்.

பச்சைக் காய்கறிகளைச் சமைக்கும்போது மூடிபோட்டு சமைத்தால், சீக்கிரம் சமைக்கலாம். அத்துடன் அவற்றின் சத்தும் வெளியேறாது.

விதவிதமான சோறு சமைக்கும் போது அரிசியைக் கழுவியபின் அதில் 2 தேக்கரண்டி எண்ணெய் சேர்த்து ஊற வைத்தபின் வேக வைக்கவும். அரிசி ஒன்றோடு ஒன்று ஒட்டாது தனித் தனியாக இருக்கும்.


## இது புதுசு





# ஆடை அலங்காரப் பொருள்கள்

பெண்களின் ஆடைகளுக்கு வைத்துத் தைக்கக்கூடிய கல் வேலைப்பாடுகள், உடை அலங்காரப் பொருள்கள் கடைகளில் விதம் விதமாக விற்பனை செய்யப்படுகின்றன. அவை ரூபா 600 முதல் 1,200 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றன.



**நாளை**
**மார்கழி -14**
**புதன்கிழமை 30.12.2015**
**திதி: பஞ்சமி மு.இ. 06.53**
**நட்சத்திரம்: மகம் பி.ப.05.03**
**ராகுகாலம்: 12.29 - 01.59வரை**
**சுபநேரம்: 04.59 - 06.29 வரை**

# மரக்கறிகளின் நேற்றைய விலை நிலைவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 120 | 80 | 100 | 120 | 140 | 120 | 120 |
| கத்தரி | 280 | 240 | 200 | 120 | 220 | 160 | 110 |
| கரட் | 250 | 270 | 200–400 | 220 | 300 | 300 | 220 |
| மரவள்ளி | 40 | 50 | 50 | 40 | 50 | 30 | 30 |
| பயிற்றை | 250 | 220 | 240 | 220 | 260 | 300 | 250 |
| பாகல் | 350 | 330 | 300–400 | 300 | 300 | 380 | 350 |
| கருணைக்கிழங்கு | 80 | 100 | 80 | 80 | 80 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 80 | 80 | 90 | 90 | 90 | 100 | 80 |
| சி.வெங்காயம் | 140 | 140 | 120 | 140 | 140 | 180 | 120 |
| பூசணி | 50 | 50 | 60 | 60 | 40 | 80 | 40 |
| தக்காளி | 150 | 160 | 160 | 160 | 140 | 140 | 150 |
| வாழைக்காய் | 60 | 60 | 50 | 50 | 60 | 60 | 40 |
| கீரை | 20 | – | 40 | 40 | 40 | 50 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 30 | 30 | 30 | 40 | 60 |
| பச்சை மிளகாய் | 800 | 900 | 800 | 800 | 700 | 1000 | 700 |
| புடோல் | 140 | 130 | 120 | 120 | 120 | 160 | 120 |
| கோவா | 120 | 150 | 200 | 200 | 160 | 160 | 150 |
| வெண்டி | 200 | 150 | 150 | 150 | 120 | 120 | 120 |
| போஞ்சி | 300 | 280 | 300 | 300 | 280 | 320 | 250 |
| லீக்ஸ் | 200 | 180 | 160 | 160 | 160 | 200 | 160 |
| தேங்காய் | 50 | 38 | 50 | 50 | 50 | 50 | 40 |
| உருளைக்கிழங்கு | 80 | 90 | 80 | 80 | 90 | 100 | 120 |
| தேசிக்காய் | 150 | 120 | 100 | 100 | 160 | 120 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 20 | 20 | 15 |
| கறிமிளகாய் | 500 | 120 | 500 | 300–500 | 400 | – | 350 |
| இராசவள்ளி | 250 | 120 | 150 | 150 | 160 | 160 | 200 |

# கடலுணவுகளின் நேற்றைய விலை நிலைவரம்

| | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 650 | 600 | 800 | 700 | 700 | 600 |
| நண்டு | 300 | 400 | 300 | 400 | 400 | - |
| கணவாய் | 500 | 600 | 500 | 600 | 700 | - |
| பாரை | 400 | 500 | 600 | 700 | 700 | 400 |
| சுறா | 450 | 600 | - | 600 | 100 | - |
| சீலா | 250 | 400 | 600 | 450 | 400 | 350 |
| விளை | 400 | 500 | 250 | 600 | 500 | 400 |
| முரல் | 300 | 350 | 300 | 400 | 400 | - |
| கும்பிளா | 350 | 300 | - | 450 | - | - |
| கிழாக்கன் | 450 | 800 | - | 400 | 200 | - |
| ஒரா | 300 | 450 | 300 | 300 | 400 | 350 |
| திரளி | 200 | 300 | 200 | 250 | 150 | 300 |
| நகரை | 150 | 250 | - | 400 | 150 | 350 |
| சூடை | 150 | 150 | 100 | 200 | - | - |
| ஒட்டி | 200 | 150 | 200 | 300 | 300 | 300 |
| திருக்கை | 150 | 350 | 250 | 400 | 400 | - |
| மதனம் | 150 | 200 | 200 | 300 | 300 | - |
| கொய் | 100 | 150 | 60 | 100 | 50 | 250 |
| பாலை | 350 | 150 | 250 | 400 | 400 | - |
| வாளை | 100 | 200 | 200 | 300 | - | 250 |

# பேரிச்சம்பழம் கேசரி

**தேவையான பொருள்கள்:**

பேரிச்சம் பழம் -10
ரவை - 1 கப்
சர்க்கரை - 2 கப்
வெண்ணிலா எசன்ஸ் -1 கரண்டி
முந்திரி சிறிதளவு
நெய் - 3 கரண்டி

**செய்முறை:**

ஒரு பாத்திரத்தில் 2 கப் தண்ணீர் விட்டு சர்க்கரை போட்டு நன்கு கரைத்துக் கொள்ளவும்.

பிறகு அதனைக் கொதிக்க விட வேண்டும். கொதி வந்தவுடன் அதில் பேரிச்சம் பழம் போன்றவற்றைப் போட்டு பின்னர் அதில் ரவையைப் போட்டு கிளறவும். இடை இடையே சிறிது சிறிதாக நெய்யை ஊற்றி ரவை நன்றாக வெந்து கேசரி பதத்துக்கு வந்தவுடன் எசன்ஸ் ஊற்றிக் கிளறவும். பேரிச்சம் பழக் கேசரி தயார்.

## சமைப்போம் வாங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# நல்லாட்சி அரசில் அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும்

## கம்பஹாவில் “கோறல் சிற்றி” செயற்றிட்ட ஆரம்ப நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அழைப்பு



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான நல்லாட்சி அரசில் இன, மத, பேதம் இன்றி அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும்.-

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

கொழும்பின் பிரபலமான கட்டுமானத்துறை நிறுவனமான “கோறல் ஹோல்டிங்ஸ்”, கொழும்புக்கு வெளியேயான தனது முதலாவது செயற்றிட்டத்தை ஆரம்பித்துள்ளது. “கோறல் சிற்றி” என்ற பெயரில் இலக்கம் 431, கொழும்பு வீதி, கம்பஹாவில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இத்திட்டம், அந்த நிறுவனத்தின் 11ஆவது செயற்றிட்டம் என்பதோடு, அனைத்து வசதிகளையும் கொண்ட மாபெரும் திட்டமாக அமைந்துள்ளது. நீச்சல் தடாகம், உடற்பயிற்சிக் கூடம், மேற்புறத்தில் திறந்தவெளி விருந்துப் பகுதி என்பவற்றை உள்ளடங்கிய 55 வீடுகளையும், அதற்கு முன்பாக 45 கடை களைக்கொண்ட கடைத்தொகுதியையும் கொண்டதாக இத்திட்டம் அமையவுள்ளது.

இச் செயற்றிட்டத்தை ஆரம்பித்துவைப்பதற்கான நிகழ்வு கம்பஹா – வெயாங்கொடையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, பிரதம விருந்தினராகக்



கலந்து கொண்டதோடு, அமைச்சர் துமிந்த திஸாநாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ன ராஜகருணா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

கோறல் ஹோல்டிங்ஸின் கம்பஹா தொடர்மாடிக் கட்டட நிர்மாணமும், கடைத்தொகுதி அமைப்பும் புதிய வரவு – செலவுத் திட்டத்துக்கிணங்க நிறைவேற்றப்படலாமென நினைக்கிறேன். இந்த நகர நிர்மாணம் கம்பஹாவுக்கு புதிய தோற்றத்தை அளிக்கக்கூடியது. 2015ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான நல்லாட்சி அரசு, அதன் வரவு – செலவுத் திட்டத்தில் தனியார் துறைக்கு அதிக நலன்களை அளிக்கின்றது. அதனால் தனியார் துறையோடு கைகோர்த்து நாட்டை அபிவிருத்தி செய்ய அரசு முயல்கின்றது.

நாட்டை அபிவிருத்தி செய்வதில் தனியார் துறையினரின் எதிர்பார்ப்புகளை இந்த வரவு – செலவுத் திட்டம் நிறைவேற்றிவைக்கும்.

இந்தத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்படுவதற்கு நகரத் திட்டத் தலைவர், சபைப் பணிப்பாளர்கள் ஆகியோருக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்” – என்றார்.

“கோறல் சிற்றி” செயற்றிட்டம், இரண்டு வருடங்களில் பூர்த்தியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. கோறல் ஹோல்டிங்ஸ் நிறுவனம், டாக்டர் சுப்பிரமணியம் பிரபாகரன், சுப்பிரமணியம் வசீகரன், திருமதி நிரோஜினி சிறிகரன் ஆகியோரால் 2003ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதோடு, 1,000 இற்கும் மேற்பட்ட மகிழ்ச்சியான குடியிருப்பாளர்களுக்கான பாதுகாப்பானதும், சௌகரியமானதுமான குடியிருப்புகளை அமைத்து வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

# பிகாஸ் கம்பஸ் நடத்திய ஆராய்ச்சி மாநாடு

## உயர் கல்வித் துறையில் மற்றுமொரு முன்னுதாரணம்

நம்நாட்டு தனியார் உயர்கல்வித்துறையில் முன்னோடியான பிகாஸ் கம்பஸ் தனது முதலாவது ஆராய்ச்சி மாநாட்டை கடந்த 18 ஆம் திகதி கொழும்பில் நடத்தியது. பிகாஸ் கம்பஸின் பிரதான வளாகங்களில் ஒன்றான கல்கிஸ்ஸை வளாகத்தில் நடைபெற்ற இந்த ஆராய்ச்சி மகாநாட்டில் ஆராய்ச்சிக் கட்டுரைகள் பல பிகாஸின் விரிவுரையாளர்களினாலும், மாணவர்களினாலும் சமர்ப்பிக்கப்பட்டன.

குறித்த தினத்தில் காலை 9.30 மணி முதல் மாலை 6 மணிவரை நடைபெற்ற இம் மகாநாட்டுக்கு முன்னாள் பல்கலைக் கழக மாணியங்கள் ஆணைக் குழுவின் தலைவரும், தற்போதைய பிகாஸ் கம்பஸ் தலைமைப் பீடாதிபதியுமான பேராசிரியர் சானிகா ஹிரும்புரேகம தலைமை தாங்கினார்.

இந்த நிகழ்வில் சிரேஷ்ட கல்வியாளரான நீதியரசர் சலீம் மர்சூப், பிரதம அதிதியாகக் கலந்து கொண்டதுடன், களனிப் பல்கலைக் கழகத்தின் முகாமைத்துவப் பீடத்தின் திணைக் களத் தலைவர் கலாநிதி பண்டார வன்னியாராச்சி, இலங்கையிலுள்ள சிரேஷ்ட சட்டத்துலைற வல்லுநரான ஜனாதிபதி சட்டத்தரணி கனகேஸ்வரன் ஆகியோர் விசேட அதிதிகளாகக் கலந்து கொண்டனர். அத்தோடு மாஸ் கோஸ்டிங் நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரி தயான் கோமஸ் மற்றும், மென்பொருள் ஏற்றுமதியில் சர்வதேச புகழ்மிக்க நிறுவனமான வேர்க்ருசா நிறுவனத்தின் மனிதவள பணிப்பாளர் துசாற ஹெட்டி கம ஆகியோரும் இதில் சிறப்பு அதிதிகளாகக் கலந்து கொண்டிருந்தனர்.

வணிகம்

இவ்வாராய்ச்சி மாநாட்டின்போது கணினி, தகவல் தொழில் நுட்பம், பொறியியல், நிதி முகாமைத்துவம், சட்டம், உயிரியல் மருத்துவம் , ஆங்கில இலக்கியம் மற்றும் தொலைத் தொடர்பு பொறியியல் ஆகிய துறைகளை உள்ளடக்கியதாக 21 ஆராய்ச்சிக் கட்டுரைகள் பிகாஸ் கம்பஸின் விரிவுரையாளர்களினாலும், மாணவர்களினாலும் சமர்ப்பிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட அதிதிகளை வரவேற்ற பிகாஸ் கம்பஸின் தலைவர் பொறியியலாளர் அப்துர் ரஹ்மான், இம் மகாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரைகளின் சாரம்சங்களை உள்ளடக்கிய புத்தகங்களை அதிதிகளுக்கு வழங்கி வைத்தார். அத்தோடு அவர்களுக்கான நினைவுப்படிகங்களையும் பேராசிரியர் சானிகாவுடன் இணைந்து அதிதிகளுக்கு வழங்கி வைத்தார்.

கடந்த 16 வருடங்களில் தனியார் உயர் கல்வித் துறையில் பல்வேறு முன்னுதாரணங்களை ஏற்படுத்தியிருக்கும் பிகாஸ் நிறுவனம், ஆராய்ச்சி மகாநாடு ஒன்றை தனியார் உயர் கல்வித் துறையில் முதன்முறையாக நடத்தியிருக்கிறது என்பது பெருமைக்குரிய மற்றுமொரு முன்னுதாரணமாகும். (த)

# நுட்பம்




## பொருள்களை வழங்குவதற்கு அமேசானின் குட்டி விமானம்

பொருள்களை வீடுகளுக்குக் கொண்டு சென்று வழங்குவதற்கு வசதியாக டிரோன் ஆளில்லா விமானங்களை உபயோகித்து வரும் அமேசான் நிறுவனம், தற்போது அதை மேம்படுத்தி தங்களுக்கென பிரத்தியேக ரோபோ சிறு விமானத்தை தயாரித்து உள்ளது.

உலகின் முன்னணி வலைத்தள வர்த்தக நிறுவனம் அமேசான். இணையத்தளம் வழியாக நாம் கோரும் பொருள்களை, ஆள்களின் மூலமாக வீடுகளுக்குக் கொண்டு வந்து தருகின்றனர்.

எதிர்காலத்தில் பொருள்களை வழங்குவதற்கு வசதியாக ஆளில்லா விமானங்களைப் பயன்படுத்தும் அமேசான் நிறுவனம், தற்போது மேம்படுத்தப்பட்ட தங்களுக்கென பிரத்தியேக குட்டி விமானத்தைத் தயாரித்துள்ளனர்.

கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு இதுபற்றிய அறிவிப்பை வெளியிட்ட அமேசான், சென்ற வருடமே ஒரு சிறிய விமானத்தை வடிவமைத்தது. தற்போது, மேம்படுத்தப்பட்ட ரோபோ வழங்கல் விமானம் தயாராகி உள்ளது.

ஹெலிகாப்டர் போன்று தோன்றாமல், மாறுபட்டுக் காணப்படும் இந்தக் கருவியை பறக்கும் டிராலி என்று சொல்லலாம். 15 மைல் தொலைவுக்குள் பொதிகளைக் கொண்டு செல்ல இந்த குட்டி விமானம் பயன்படுத்தப்படும்.

அதிகபட்சம் 55 மைல் வேகத்தில் பறக்கக்கூடிய இது, சில நிமிடங்களிலேயே இலக்கை அடைந்து, உரிமையாளர்களிடம் பொருள்களை வழங்கிவிடும் திறன் கொண்டது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## மனிதர் வாழக் கூடிய கிரகம் கண்டுபிடிப்பு!

மனிதர்கள் வாழ்வதற்கு சாத்தியமுள்ள ஒரு கிரகம் வானியல் ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

மனிதகுல வரலாற்றிலேயே முதன்முறையாக பூமிக்கு மிக அருகில் வாழத்தக்க ஒரு கிரகம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

எமது கிரகத்தை விட நான்கு மடங்கு பெரிதான இந்தக் கிரகம், கோல்டிலொக்ஸ் சோன் எனும் மண்டலத்தில் சரியாக அமைந்துள்ளது என்று கூறப்படுகின்றது. அதாவது தண்ணீர் அணுக்கள் திரவ நிலையில் இருப்பதற்கான வெப்ப மண்டலத்தில் அமைந்துள்ளதாம் இந்தக் கிரகம்.

பாறைகளால் ஆன மேற்பரப்பைக் கொண்ட ஒரு கிரகத்தை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளதும் இதுவே முதன்முறையாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வோல்வ் 1061சி என பெயரிடப்பட்டுள்ள இந்தக் கிரகத்தோடு சேர்த்து, மொத்தம் 3 கிரகங்களை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர் என்றும் அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுவிக்கப்படும்

ஜனாதிபதியின் செயலாளர் தலைமையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலின் பிரகாரம் வலி.வடக்கில் மேலும் 700 ஏக்கர் காணி தைப்பொங்கலுக்கு முன்பாக விடப்படவுள்ளது இவ்வாறு விடப்படும் காணிகளை இனம்காணும் பணிக்காக மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலக அதிகாரிகள் குழு நாளை (இன்று) குறித்த பிரதேசங்களுக்கு நேரில் சென்று பார்வையிடுவார்கள் .

இந்தக் கலந்துரையாடலில் செயலாளர் , மாவட்ட அரச அதிபர் , மீள் குடியேற்ற அமைச் சின் செயலாளர் , இராணுவத் தளபதி மற்றும் ஆளுநரின் செயலாளர் ஆகியோர் பங்கு கொண்டனர்-என்றார். (த-101)

## மழை

இடி யுடன்கூடிய மழை பெய்ய வாய்ப்பிருப்பதாக வளி மண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்று மாலையே கடும் மழை பெய்துள்ளது. நேற்று முன்தினம் காலை 8.30 மணியிலிருந்து நேற்றுக் காலை 8.30 மணிவரை அதிகளவாக 108.1 மில்லிமீற்றர் மழை பெய்துள்ளது. நேற்றுக் காலை 8.30 மணியிலிருந்து நேற்று மாலை 5.30 வரை 15 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. எனினும் அதற்குப் பின்னரே குடாநாடு பூராகவும் கடும் மழை பெய்துள்ளது. யாழ்.நகர் வீதிகள் சிலவும் நீரில் மூழ்கியிருந்தன.

நேற்றுமுன்தினம் இரவு பெய்த கடும் மழை காரணமாக குளங்கள் நிரம்பியுள்ளதோடு நாவற்குழி உவர்நீர்த் தடுப்பணையும் நிரம்பியுள்ளது. அதனால் தடுப்பணைக் கதவுகள் திறந்துவிடப்பட்டுள்ளன. இந்த மழை தொடருமெனின் தொண்டமானாறு தடுப்பணைக் கதவுகளும் திறக்க வேண்டிய நிலை ஏற்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-4)

## ஐ.எஸ்.

பேர் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிர வாத அமைப்பில் இணைவதற்கெனச் சிரியா சென்றுள்ளதாகவும், இவர்கள் கண்டி, குருநாகல் மற்றும் தெஹிவளை ஆகிய பிரதேசங்களை சேர்ந்தவர்களெனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே ஐ.எஸ்.ஐ.எஸ் தாக்குதலில் இலங்கையைச் சேர்ந்த நபரொருவர் உயிரிழந்துள்ளதோடு, அவரது குடும்பத்தார் சுமார் 16 பேர் சிரியாவில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் தெஹிவளையில் கைது செய்யப்பட்ட நபரும் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாத அமைப்பை சேர்ந்தவரென சந்தேகம் வெளியிடப் பட்டிருந்தது.

இதேவேளை, இலங்கைக்கு ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாத அமைப்பின் எச்சரிக்கை உள்ளதாகப் பொது பல சேனா அமைப்பு தொடர்ந்து குரல்கொடுத்து வருகின்றது. இந்நிலையில், ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாத அமைப்பிலிருந்து நாட்டைக் காப்பதில் அரசின் பங்கு குறித்து இன்று பொது பல சேனா அமைப்பு ஊடக சந்திப்பொன்றை நடத்தவும் ஏற்பாடு செய்துள்ளது. (டு)

## தமிழரின்

இந்தக் கூட்டத்துக்கு, கிழக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் என்று சொல்லப்படும் சிலரும் பங்கேற்றிருந்தனர். அவர்களே கூட்டமைப்புக்கு எதிரான விமர்சனங்களை முன்வைத்தனர்.

அம்பாறை மாவட்டத்தில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான பல காணிகள் முஸ்லிம் மக்களால் அபகரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதனைத் தடுப்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதனைத் தடுப்பதற்கு எந்தச் செயற்பாட்டையும் செய்யவில்லை. கூட்டமைப்பினர் பேசாமல் இருக்கின்றனர் என்று குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

திருகோணமலை மாவட்டத்தில் பிரபல தமிழ் அரசியல்வாதி ஒருவர் தனது காணிகளை முஸ்லிம் மக்களுக்கு விற்று வருகின்றார். தமிழ் மக்களுக்குச் சொந்தமாக இருந்த பல காணிகள் இதன் மூலம் முஸ்லிம் மக்களுக்குச் சொந்தமாகியுள்ளன என்ற குற்றச் சாட்டும் கிழக்கிலிருந்து கலந்து கொண்ட சிவில் சமூகப் பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்டது. (த-5)

## மரண அறிவித்தல்

### திருமதி சகுந்தலாதேவி சுந்தரலிங்கம்



பிறப்பு 1959.08.23

இறப்பு 2015.12.26

கிளிநொச்சி நாலாம் வாய்க்காலைப் பிறப்பிடமாகவும் கொழும்பை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சகுந்தலாதேவி(கௌரி) சுந்தரலிங்கம் 26.12.2015 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கராசா நாகேஸ்வரி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்ற நடராசா தெய்வநாயகி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சுந்தரலிங்கம்(ஐயாண்ணை) அவர்களின் அன்பு மனைவியும் ஷர்மிலா(UK), கமிலா(UK), மயூலா ஆகியோரின் அன்புத் தாயாரும் சுதாகரன்(UK), ரமேஷ் (UK) ஆகியோரின் அன்பு மாமியாரும் அனர்ஷன், அகன்விகா ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும் தர்மராஜா(ராசா -UK), சரோஜாதேவி(அம்மன்), சிவானந்தன்(ஆனந்தன் - கனடா), பால சரஸ்வதி (பாலா - கனடா), விஜயலட்சுமி(விசியா -UK), கலைவாணி(கலா - கனடா ), ஜெயவாணி (ஜெயா - UK), ஜெயசங்கர்(காந்தி - UK) ஆகியோரின் சகோதரியும் தர்மதேவா, சரோஜாதேவி(UK), விஜியா(கனடா), மூர்த்தி(கனடா), ஜெயராஜன் (கனடா), மகேந்திரன்(கனடா), பாலசிங்கம்(UK), கௌரி(UK), காலஞ்சென்ற தவராஜா காலஞ்சென்ற யோகராஜா, சிவராஜா, மனோரஞ்சிதமலர், தவமணி தேவி, ரூபாவதி, வசந்தகுமாரி, வசந்தராஜன், வசந்தயோகினி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 29.12.2015 செவ்வாய்க்கிழமை கொழும்பு கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் 30.12.2015 புதன்கிழமை கிளிநொச்சியில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 31.12.2015 வியாழக்கிழமை பிற்பகல் 1மணிக்கு இறுதிக் கிரியைகள் நடத்தப்பட்டு கிளிநொச்சி பொதுமயானத்தில் அன்னா ரின் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

| | |
|---|---|
| தகவல்: குடும்பத்தினர். | தொடர்புகளுக்கு: 077 711 0977 (பாலா) |

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கனகாம்பிகை சதாசிவம்



யாழ்.புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும், இராசாவின் தோட்டத்தை வசிப்பிடமாகவும் கனடா Brampton ஐ வதிவிடமாகவும் கொண்ட கனகாம்பிகை சதாசிவம் சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை மனோன்மணி தம்பதிகளின் அன்பு புதல்வியும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் காமாட்சி தம்பதிகளின் அன்பு மருமகளும், சதாசிவம்(கனடா - முன்னாள் யாழ்.இலுப்பையடி வர்த்தகர்) அவர்களின் அன்பு மனைவியும் மனோகரி காலஞ்சென்றவர்களான யோகேஸ்வரி, சிவரூபன் ஆகியோரின் அன்புத் தாயாரும் பத்மநாதன்(இலங்கை), பத்மநிதி(கனடா), சபாநாதன் (லண்டன்), சிறிநாதன்(சுவிஸ்), தயாநிதி(க்னடா), ராசநாதன்(கனடா), சிவாநிதி (கனடா), செல்வநாதன்(கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், அருணன் (Mr.1Hr Photo உரிமையாளர்), நித்தியலட்சுமி ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான கௌரிஅம்பாள், தனலெட்சுமி மற்றும் அருணாசலம், சரோஜா, தேவராசா, மனோன்மணி, காங்கேசன், ஜெயந்தி, திருப்பதி காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு, செல்லத்துரை மற்றும் ஞானாம்பாள், ராசம்மா, கனகம்மா, பரமலிங்கம், பாலசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும். அர்ச்சனா, கீர்த்தனா, ரிஷிபன் ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30.12.2015 புதன்கிழமை கனடா வில் நடைபெறும் .

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| 30/18 குறுக்கு வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். | தகவல்: குடும்பத்தினர். | தொடர்புகளுக்கு: சதாசிவம்(கணவர்), மனோகரி(மகள் - கனடா) +19056540066 அருணன் - கனடா +14165435149 செல்வன் - கனடா +16472069374 |

## மரண அறிவித்தல்கள்

### வைத்தி நவரத்தினம்



மானிப்பாய், சங்குவேலியைப் பிறப்பிடமாகவும் நாவற்காடு, அச்சுவேலி தெற்கை வதிவிடமாகவும் கொண்ட வைத்தி நவரத்தினம் நேற்று(28.12.2015) திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்தி சின்னத்தங்கம் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் நாகரத்தினத்தின் பாசமிகு கணவரும் தயாபரன்(லண்டன்), சுபாஜினி (லண்டன்) காலஞ்சென்ற கிருபாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயந்தி (லண்டன்), பிரகாஷ்(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான சரசு, அன்னம், தருமு மற்றும் நாகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் தங்கரத்தினம், சிவசுப்பிரமணியம்(கோபாலு) ஆகியோரின் அன்பு மைத்துனரும் டிலான் (லண்டன்), டிலானி(லண்டன்), டர்சிகா(லண்டன்) மற்றும் றோயிசன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நாவற்காடு, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

076 537 9246
077 651 8563

தகவல்: குடும்பத்தினர்.

### பெரியதம்பி நடராசா



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பெரியதம்பி நடராசா நேற்று (28.12.2015) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பெரியதம்பி - பொன்னம்மா தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணபிள்ளை- மங்கையர்க்கரசி தம்பதியரின் அன்பு மருமகனும் அருந்ததியின் அன்பு கணவரும் லஜிதா, பகீரதன், லாவண்யா ஆகியோரின் தந்தையும் விக்கினேஸ்வரன்,சுதர்சன் ஆகியோரின் மாமனும் சருண்னா, சமிஸ்டன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.12.2015) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 3 மணியளவில் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.86, திருமகள் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திருமதி இராஜலஷ்சுமி சின்னத்துரை



அல்வாய் தெற்கைப் பிறப்பிடமாகவும், நாரஹேன்பிட்டி கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராஜலஷ்சுமி சின்னத்துரை 27.12.2015 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் - சின்னத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கா.சுந்தரம் - தெய்வானை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சீவரத்தினம் மற்றும் ஈஸ்வரதாஸ், டாக்டர் வேலும்மயிலும், திருமதி S.ஜெயலஷ்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெயந்திமலர், ஜெயந்திரூபி, நவநீதபாலன், காலஞ்சென்ற வசந்தி, துரைமதி, சந்திரகுமாரன், கிருஷ்ணா, பிரபாகரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், நவநீதபாலன்,சந்திரகுமாரன், பிரபாகரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், நகோமி, சலோமி, நித்தியா,நிசாம், சாரங்கன், சிவானி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (30.12.2015) புதன்கிழமை பொரளை ஜயரட்ண மலர்ச்சாலையில் 9 மணி தொடக்கம் 5 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு தகனக்கிரியைகளுக்காக வியாழக்கிழமை 31.12.2015 பிற்பகல் 3 மணியளவில் கனத்தை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

| | |
|---|---|
| தகவல். ஜெயந்திமலர் சின்னத்துரை (மகள்) (இலங்கை மின்சாரசபை ஓய்வுபெற்ற படவரைவாளர்) | தொடர்பு: 071 828 0868 |

(சி/28073)(11,15,17,18)

# பகுதிநேர வேலை நிறுத்தத்தில் வடிகாலமைப்புச் சபை ஊழியர்

கொழும்பு, டிசெ.29

வருட இறுதிக் கொடுப்பனவு குறைக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை ஊழியர்கள் நேற்றுத் திங்கட்கிழமை பகுதிநேர வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுக் காலை 8.30 மணிக்கு இந்த வேலைநிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்த ஊழியர்கள், நண்பகல் 12 மணி வரை அலுவலக வேலைகள், வாடிக்கையாளர் சேவை ஆகியவற்றைத் தவிர்த்ததாக நீர்வழங்கல் தொழிற்சங்கக் கூட்டமைப்பின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

வருட இறுதியில் வழங்கப்பட்டு வந்த கொடுப்பனவு இம்முறை 25 ஆயிரமாகக் குறைக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ள சபையின் ஊழியர்கள், கடந்த இரண்டு நாள்களாகத் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தனர்.

இந்தநிலையில் தமது கோரிக்கை நிறைவே றாத பட்சத்தில் நாடு தழுவிய ரீதியில் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

எனினும், முன்னொரு போதும் இல்லாத வகையில் இவ்வருடம் போனஸ் உள்ளிட்ட அதிக கொடுப்பனவுகள் மற்றும் சம்பளம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை நிர்வாகம், சபையினால் வழங்கப்படக்கூடிய அதிகூடிய தொகையே தற்போது வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(தி)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கலாதேவி காளிதாஸ்




ஓட்டுமடத்தைப் பிறப்பிடமாகவும் நல்லூர் சங்கிலியன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கலாதேவி காளிதாஸ் நேற்று (28.12. 2015) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிங்காரவேலு காமாட்சி அம்மாள் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சிவசாமி சாந்தநாயகி தம்பதிகளின் அன்பு மருமகளும், காளிதாஸ் (நாதஸ்வரவித்துவான்) அவர்களின் அன்பு மனைவியும், கார்த்திகன், சுபாங்கி ஆகியோரின் அன்புத் தாயும், நவரூப னின் அன்பு மாமியும், ஜெயமணி, காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் நாகேஸ்வரி, நவநீதரெத்தினம் (ஜேர்மனி), யோகநாதன், ஆனந்தராசா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், மகேந்திரன் -சுசிலாதேவி, ஜெயராஜன் -கருணாநிதி, சிவகுருநாதன் -கலாநிதி (கனடா), காலஞ்சென்ற சண்முகதாஸ் மற்றும் ஜெயாநிதி, பாலசரவணபவன் (கனடா), தங்கவேல், பாலகிருஸ்ணன், காலஞ்சென்ற பரமசிவம், விஜய வனிதா, இராஜஸ்வரி, ஜெயந்தி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.12.2015) செவ்வாய்க்கிழமை மு.ப.11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண் பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

| | |
|---|---|
| 63/2, சங்கிலியன் வீதி, நல்லூர் | தகவல்: குடும்பத்தினர். |

### பிரம்மஸ்ரீ அபிராமசாஸ்திரிகள் மகாதேவசர்மா



இந்தியா திருவனந்தபுரம் தளியல் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட வரும், தலைமன்னார் முத்துமாரி அம்மன் ஆலய முன்னாள் பிரதம குருவும்நவிண்டில் குழவியடி அம்மன் ஆலய பிரதமகுரு வுமாகிய பிரம்மஸ்ரீ அபிராமசாஸ்திரிகள் மகாதேவசர்மா அவர்கள் நேற்று (28.12.2015) திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் அவரது இல்லத்தில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அபிராமசாஸ்திரிகள் -கோமதி அம்மா தம்பதியரின் புத்திரனும், காலஞ்சென்ற நவிண்டில் இராமலிங்கக்குருக்கள் -சீதாலட்சுமிஅம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சரஸ்வதி அம்மா அவர்களின் அன்புக் கணவரும், இரங்கநாயகி (வசந்தா, பருத்தித்துறை), கௌரி சங்கர் (ஆஸ்திரேலியா), இராதலட்சுமி (கொழும்பு), சீதாலட்சுமி (நவிண்டில்), அபிராமசர்மா (நவிண்டில்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நாராயணன், ஜானகி, சங்கரசீதாராமன், இராஜேஸ் வரி ஆகியோரின் அன்பு மாமனும், வத்சலா, நிரஞ்சனி, ஜயபாஸ் கர், ஈஸ்வரநிவாசக்குருக்கள், ஜயப்பிரகாஷ், சந்திரசேகர், அரவிந் தன், துளசி, அஸ்வினி ஆகியோரின் அன்புப் பேரனும், ஹரிஷ், மனஸ்வினி, நிஷேவினி, சுபஹரி, சுபஸ்ரீ, சித்தேஷ், தேவன் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.12. 2015) செவ்வாய்க்கிழமை மு.ப.10.00 மணியளவில் வடுவன் தோட்டம் நவிண்டிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைகளுக்காக எள்ளன்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| வடுவன் தோட்டம், கரணவாய் மத்தி, நவிண்டில், கரவெட்டி. | தகவல்: பிரம்மஸ்ரீ ம. அபிராமசர்மா. | தொடர்பு: 077 9789351 |

## தொடர்ச்சிகள்....

### வித்தியா

ஊர்காவற்துறை நீதிமன்றில் தற்போதைய நீதிவான் செ.லெனின்குமார் குறித்த மாணவியின் வழக்கை விசாரித்து வந்திருந்த நிலையில் இந்த வருடம் நிறைவடைவதற்குள் ஆய்வு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

அவற்றை விரைவில் சமர்ப்பிக்கும்படி நீதிமன்று குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்குப் பல தடவைகள் கூறியிருந்தது. எனினும் அதில் தாமதம் நிலவுகிறது.

இந்நிலையில் தற்போதைய நீதிவான் வருடாந்த இடமாற்ற அடிப்படையில் எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி இடமாற்றம் பெற்றுச் செல்கின்றார்.

குறித்த மாணவியின் வழக்கில் மாணவியினதும் சந்தேக நபர்களினதும் மரபணுப் பரிசோதனை அறிக்கை இன்னும் கிடைக்கப் பெறவில்லை. அந்தப் பரிசோதனை அறிக்கைக்காக, மாணவியின் உடலில் இருந்து எடுக்கப்பட்ட விந்தணு மாதிரிகள், சந்தேக நபர்களின் இரத்த மாதிரிகள், மாணவியின் தாயாருடைய இரத்த மாதிரி, மாணவி பயன்படுத்தியதாகக் கூறப்படும் கண்ணாடி தொடர்பான அறிக்கைகள் நீதிமன்றில் இதுவரை சமர்ப்பிக்கப்படவில்லை. எனினும் அவை விரைவில் சமர்ப்பிக்கப்படும் என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கூறப்பட்டு வருகின்றது.

குறித்த வழக்கில் ஏற்கனவே 9 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், சில வாரங்களுக்கு முன்னர் 10 ஆவது சந்தேக நபராக மற்றொருவர் கைது செய்யப்பட்டு விசாரணையில் உள்ளார். அவரும் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ளவர்களில் 5 ஆம் 6 ஆம் சந்தேக நபர்களும் மகசின் சிறையில் வைத்து விசாரணைக் குட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

கடந்த தவணை அதற்கான அனுமதி வழங்கப்பட்டிருந்தது. தொடர்ந்தும் மகசின் சிறையில் வைத்து விசாரிப்பதற்கென நேற்றைய தினமும் அதற்கான அனுமதியைக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் பெற்றுள்ளனர். ஏனைய 7 பேரும் வழமை போன்று வவுனியா சிறையில் தடுத்து வைக்கப்பட்டு வருகின்றனர்.

நேற்றைய வழக்கில் 9 ஆவது சந்தேக நபரான சுவிஸ் குமார் என்பவர், தன்னைத் தனது பிரிவுக்கு அப்பாற்பட்ட பகுதிகளைச் சேர்ந்த பொலிஸார் கைது செய்ய முடியாது என்ற சாரப்பட நீதிமன்றிடம் கேட்டுள்ளார். ஆனால் குற்றஞ்சாட்டப்படும் நபர்கள் நாட்டில் எந்தப் பகுதியைச் சேர்ந்த பொலிஸாராலும் கைது செய்யப்படலாம் என்று நீதிமன்று அவருக்குக் கூறியுள்ளது.


10 ஆவது சந்தேக நபர் தனக்கு மருத்துவ உதவி தேவைப்படுவதாக நீதிமன்றிடம் கூற அது சிறைச்சாலை அத்தியட்சகர் ஊடாக வழங்கப்படும் என்று நீதிமன்று கூறியது. 10 ஆவது சந்தேக நபர் மனநிலை பாதிக்கப்பட்டவர் என்று அவர் சார்பில் வாதாடிவரும் சட்டத்தரணி நீதிமன்றில் கூறியுள்ளதோடு அவரைப் பிணையில் விடுவிக்குமாறும் கோரியுள்ளார். எனினும் விசாரணைகளின் பின்னர் அவர் குற்றச் செயலுடன் தொடர்புபட்டுள்ளாரா இல்லையா என்பது தெரியவரும் என்று நீதிமன்று கூறியுள்ளது.

(த-4)

## மரண அறிவித்தல்

### மேரிவியாணி வெண்சஸ்லோஸ்

(பொபி)



தோற்றம் 1943.09.27 — மறைவு 2015.12.27

சுருவிலைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் 3ஆம் குறுக்குத்தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட மேரிவியாணி வெண்சஸ்லோஸ் (பொபி) 27.12.2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் மனோகரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை - அலிஸ் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான சாமிநாதர், பிலோமினா தம்பதிய ரின் அன்பு மருமகனும், றீகன் (ஜேர்மனி), கிறிஸ்சாந்தி, ஜோண்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கௌரி (ஜேர்மனி), ஜீவன் ஆகியோரின் அன்பு மாமனும், Dr.லீமா (லண்டன்), சில்வி (கொழும்பு), ஜெனற் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சண்முகநாதன் (லண்டன்) மற்றும் தாசீசியஸ்(கொழும்பு) , குமார் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், வஸ்ரியாம்பிள்ளை (சிங்கப்பூர்), ராணி (கொழும்பு), றஞ்சினி (இந்தியா), பீற்றர் (ஜேர்மனி), மல்லிகா (கொழும்பு) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஆன், அனற், கபிஷன், கியானா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை நாளை (30.12.2015) புதன்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் அவரின் இல்லத்திலிருந்து யாழ்.அடைக்கல அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டுப் பின்னர் சுருவில் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| 85, 3ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (67183)(11,15,18) | தகவல்: மனைவி, பிள்ளைகள். | தொடர்பு: 077 257 8030, 021 222 5404 |

### உறுதியளித்த

ஜனாதிபதி இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

கடந்த ஒரு வருட காலப்பகுதியில் பொருளாதாரம் பின்னடைவைச் சந்திக்கவில்லை. நிலையான பொருளாதாரக் கொள்கையே அதற்குக் காரணம். நாட்டின் அரசியல்வாதிகள் பொருளாதார விடயங்கள் குறித்த போதிய தகவல்கள் அறிந்து வைத்திருக்கவேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

(த-4)

### தேசிய

துள்ள பலாலி இராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் நடத்துவதற்கு ஆலோசிக் கப்பட்டுள்ளது.

இராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் பொங்கல் நிகழ்வுகள் இடம்பெற்று முடிந்த பின்னர், தைப் பொங்கல் விழாவின் ஏனைய நிகழ்வுகளை வீரசிங்கம் மண்டபத்தில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வுகளில், ஜனாதிபதி மைத்திரிபால மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் பங்கேற்கவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதாரக் கொள்கை பலவீனமான நிலையில்

## அரசைச் சாடுகிறார் கம்மன்பில

கொழும்பு, டிசெ.29

தேசிய அரசால் கடந்த நவம்பரில் தாக்கல் செய்யப்பட்ட வரவு-செல வுத் திட்டத்தில் திருத்தங்களைச் செய்ததன் மூலம் அரசின் பலவீன மான பொருளாதாரக் கொள்கை முழு உலகுக்கும் வெளிச்சமாகியுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அத்துடன், வரவு-செலவுத்திட்டத்தின் உண்மை நிலைமை எதிர்வரும் மூன்று மாதங்களில் அம்பலமாகும் எனவும் கம்மன்பில கூறினார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், வரவு- செலவுத்திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான விவாதத்தில் திருத்தங்கள் செய்ய முடியும் என அரசு தனது பிழைகளை மூடி மறைத்துக் கொள்ள முயற்சிக்கின்றது.

கடந்த அரசு எதேச்சாதிகாரப் போக்கில் செயற்பட்டதாகவும் வரவு- செலவுத்திட்டத்தில் திருத்தங்கள் செய்யவில்லை எனவும் தற்போதைய அரசு குற்றம் சுமத்தியுள்ளது.

உண்மையில் இம்முறை சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் குறைபாடுகளை மூடி மறைக்கவே இவ்வாறு அரசு கடந்த அரசின் மீது குற்றம் சுமத்தி வருகின்றது.

எதிர்வரும் ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் அரசின் வரவு-செலவுத்திட்டம் பற்றி மக்கள் அறிந்துகொள்வார்கள் என்றார். (த)

# விபத்தில் இளம்பெண் சாவு வெதமுல்லையில் பதற்றம்

கொழும்பு, டிசெ.29

நுவரெலியா, வெதமுல்லையில் லொறியில் மோதுண்டு பெண்ணொருவர் நேற்று மாலை உயிரிழந்ததைத் தொடர்ந்து அந்தப் பகுதியில் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

நுவரெலியா நகரத்தில் இருந்து கண்டி நோக்கிச் சென்ற லொறி ஒன்று, வெதமுல்லை தொழிற்சாலைக்குச் செல்லும் சந்தியில் வைத்து பாதையைக் கடக்க முயன்ற பெண் மீது மோதியதில் அவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

விபத்தில், வெதமுல்லையைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தாயான வரதராஜ் சந்திரகலா (வயது- 36) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இந்தநிலையில் தோட்ட மக்கள் லொறியையும், லொறியின் சாரதியையும் அவ்விடத்திலிருந்து வெளியேற விடாது சூழ்ந்துகொண்டதால் அங்கு பதற்ற நிலை ஏற்பட்டதாகத் தெரியவருகிறது.

பெண்ணின் சடலம் தற்போது கொத்மலை வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. விபத்துடன் தொடர்புடைய லொறியின் சாரதியைப் பொலிஸார் கைது செய்துள்ளதுடன் விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (த)

## மரண அறிவித்தல்

### அந்தோனிமுத்து ஜெனிபேட் (தனேஸ்)



மாரீசன்கூடல் இளவாலையைப் பிறப்பிடமாகவும் தும்பளை பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிமுத்து ஜெனிபேட் (தனேஸ்) நேற்று (28.12.2015) திங்கட்கிழமை அகாலமரண மடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிமுத்து மற்றும்கயித் தானிக்கம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், ஜோன் லோறற், முத்தம்மா தம்பதியரின் மருமகனும், மேரி பற்றிமாவின் (மலர்) அன்புக் கணவரும், ஜெனிஸ்ரன், நிதுஷா ஆகியோரின் பாசமிகு தந்தையும், தவராசா (லண்டன்), கவிதா, யோகேஸ்வரன் (தயா, பிரதேசசெயலக உத்தியோகத்தர், ஊர்காவற்றுறை) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், தங்கமலர், ஜோண் அன்ரன், ஞானம், நேசம், சந்திரன், யூட், விஜயா (லண்டன்), நித்தியா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைக்காக இன்று (29.12.2015) பி.ப. 2.00 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு பருத் தித்துறை புனித தொம்மையப்பர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் தொம்மையப்பர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும் . இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

| | |
|---|---|
| தும்பளை, பருத்தித்துறை. | தகவல்: குடும்பத்தினர். |

" ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ "

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

கொண்டவனைக் கடவுளென மதித்துப் போற்றி
குடும்பத்தைக் கோயிலெனப் பூசித்து ஓம்பி
அன்பென்னும் நீர் பொழிய அள்ளிப் பாச்சி
கள்ளமற்ற உள்ளத்தோடு கருத்து வைத்து
பண்பாக மகிமையோடு மக்களெமை வளர்த்து
புண்ணியவதி எனப் பலபேர் ஏற்றிப் போற்ற
ஆண்டிரண்டு கழிந்ததம்மா நற்கதி சேர்ந்து
உன் செயலும் உன் நினைவும்
என்றுமே மாறாதம்மா.



அமரர்

### கமலாதேவி சண்முகநாதன்

(அம்மாப்பிள்ளை)

தோற்றம் 13.08.1948 — மறைவு 20.12.2013

திதி : அபரபக்க சதுர்த்தி
29.12.2015

உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கும்
அன்புக் கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

"ஞானதீபம்"
22/12, பத்திரகாளி கோவிலடி,
சுழிபுரம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 08 - 11 - 1955



மறைவு 09 - 01 - 2015

அமரர்

### திரு. வேலுப்பிள்ளை சுந்தரலிங்கம்

(ரஜனி பீடா ஸ்ரோர்ஸ் - உரிமையாளர்)

அயராது எமக்கு உழைத்த அன்புத் தந்தையே!
மாதங்கள் பன்னிரண்டு ஆனாலும் ஆறவில்லை எம் துயரம்
ஈரவிழிகளுடன் உங்கள் ஆத்மா சாந்தியடைய
ஈசனை வேண்டுகின்றோம்...

குடும்பத்தினர்.

இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

021 - 226 3612
077 - 1677286

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்துரை கமலச்சந்திரன்

காரைநகர்தங்கோடையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை கமலச்சந்திரன் கடந்த (26.12.2015)சனிக்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரவேலு-பொன்னம்மா (கனடா) தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - இலட்சுமிப்பிள்ளை தம் பதியரின் அன்பு மருமகனும், தேவீஸ்வரியின் (கனடா) அன்புக் கணவரும், ரவிசங்கர் (கனடா), தர்சினி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், பிரதீபாவின் (கனடா) அன்பு மாமனும், அகர்சியனின் (கனடா) அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.12.2015) செவ்வாய்க்கிழமை கனடாவில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவி னர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

| | | | |
|---|---|---|---|
| ஆலடி, காரைநகர் | 30/2,10ஆவது ஒழுங்கை, வைரவப்புளியங்குளம் | தகவல்: குடும்பத்தினர். | தொடர்பு: 077 2626214 |

### திருமதி சக்திமலர் கணேசன்

பிறப்பு- 16.11.1944



இறப்பு- 27.12.2015

குரும்பசிட்டி,தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும் 54, விக்டோரியா கோட், 2/2 ,உருத்ரா மாவத்தை , வெள்ளவத்தையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சக்திமலர் கணேசன் அவர்கள் 27.12.2015 காலை 9.00 மணியளவில் இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா- நாகம்மா தம்பதிகளின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான நடராஜா- மனோகரஞ்சிதமலர் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற Vet Dr நடராஜா கணேசனின் அன்பு மனைவியும் Dr சத்திய மூர்த்தி, ஈஸ்வர மூர்த்தி, சிவமலர், காலஞ்சென்ற கருணாமூர்த்தி, யோகமூர்த்தி, குமார மூர்த்தி, ஸ்கந்த மூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும் S.சாந்தகுமாரி, மாலினி, காலஞ்சென்ற ஸ்ரீஸ்கந்தபாலன், காலஞ்சென்ற நாகேஸ்வரி, Y சாந்தகுமாரி, தாரிணி, தயாளினி ஆகியோரின் அன்பு மைத்துனியும், Dr பிரதீப்குமார் (சீமாட்டி வைத்தியசாலை, கொழும்பு , பொரளை), டிலீப்குமார் (London) , ஜனனி(London), சதீஸ்குமார் (London)ஆகியோரின் அன்பு தாயாரும் Dr ரேணுகா( தேசிய ஆயுர்வேத வைத்தியசாலை பொரளை), சுகிர்தா(London), ரமணதாஸ்(London), கமலாதேவி(Italy) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் யதுர்சன், பிரணவி, விதுர்ஷன், கோபிகா, கிஷான் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் மகிந்தபாலரில் அஞ்சலிக்காக செவ்வாய்க்கிழமை 29.12.2015மு.ப 11.00 மணிமுதல் மாலை 8.00 மணிவரையும் புதன்கிழமை 30.12.2015 காலை 8.00முதல் மாலை 4.00 மணிவரையும் வைக்கப்படும்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30.12.2015 புதன்கிழமை மாலை 3.00 மணியளவில் மகிந்தபாலரில் நடைபெற்று மாலை 4.30 மணியளவில் கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

| | |
|---|---|
| தகவல்: Dr.கணேசன் பிரதீப்குமார் | 077 728 6155 |
| கணேசன் டிலீப்குமார் | 004 420 828 11953 |
| கணேசன் ஜெனனி | 004 420 341 72241 |

### சங்கரப்பிள்ளை இளையதம்பி (பசுபதி)



இணுவிலைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை இளையதம்பி நேற்று (28.12. 2015) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை -சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் இரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், பத்மநாதன், கணேசமூர்த்தி, இந்திராணி, புலேந்திரன் (பிரான்ஸ்), பாலச்சந்திரன் (பிரான்ஸ்), சுயாஷனி ஆகியோரின் அன்புத் தந்தையும், இராசமணி, பத்மசாந்தி, பரமலிங்கம், விஜிதா, ஜெனித்தா, சசிகுமார் ஆகியோரின் அன்பு மாமனும், பவித்திரா-சிவாரன் (பிரான்ஸ்), கபிலன், சிந்துஜன், திருஷாலினி, மது ரந்தி, டுஸ்யந்தி - மாதுளன், யோகானந்தி - திருக்குமார் (லண்டன்), டுஸ்யந்தன்-சுரேஸ்சிகா, டுஸ்மோகன், அபிஷா, விதுஷன், பிரசாத், விவுஷா, லாவண்யா, அனித்தா,வானதி, பாரதி, விதுக்ஷன், கதிரவன், கனியவன் ஆகியோரின் பேரனும், தர்ஷிகா, தஸ்வின், சாஜயா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.12.2015) செவ் வாய்க்கிழமை மு.ப.09.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கந்தன்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


| | |
|---|---|
| மார்க்கம் புரை, கோப்பாய் வடக்கு, கோப்பாய். | தகவல்: குடும்பத்தினர். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊக்கமருந்து விவகாரத்தில் தடை விதிக்கப்பட்டார் யாசீர்

பாகிஸ்தான் அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளரான யாசீர் சா ஊக்கமருந்து உட்கொண்ட காரணத்தினால் சர்வதேச கிரிக்கெட் கட்டுப் பாட்டுச் சபையால் தடை விதிக்கப்பட்டுள்ளார்.
பல்வேறு சோதனைகளுக்கு ஆளாகி அதில் இருந்து மெதுவாக மீண்டு வரும் பாகிஸ்தான் அணிக்கு தற்போது பெரிய அடி விழுந்துள்ளது.
அந்த அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளராக இருப்பவர் யாசீர் சா. இவர் நியூசிலாந்திற்கு எதிரான ஒரு நாள் தொடரின் உத்தேச அணியில் இடம் பெற்றுள்ளார். இந்த நிலையில் ஐ.சி.சி. யால் தடைவிதிக்கப்பட்ட ஊக்க மருந்தை உட்கொண்டதால் அவர் மீது ஊக்க மருந்துக்கு எதிரான விதியின்படி தடை விதிக்கப்பட்டுள்ளது.
சூதாட்டத்தில் ஈடுபட்ட காரணத்தினால் தடை விதிக்கப்பட்டு நீண்ட இடைவெளியின் பின்னர் ஆமீர் அணிக்கு திரும்பியிருக்கையில் யாசீர் தடை பெற்றுள்ளார். (ம)






# இன்னிங்ஸ் தோல்வியில் இருந்து தப்பிப் பிழைத்தது மே.இ.தீவுகள்

மேற்கிந்தியத் தீவுகளுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது ஆட்டத்தின் மூன்றாம் நாளான நேற்றைய தினத்தில் தீவுகள் முதல் இன்னிங்ஸுக்காக 271 ஓட்டங்களில் சுருண்டதுடன் இரண்டாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிவரும் ஆஸ்திரேலியா 179-3 என்ற நிலையில் உள்ளது.
நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தீவுகள் முதலில் களத்தடுப்பைத் தீர்மானிக்க ஆஸ்திரேலியா 551-3 என்ற நிலையில் இருந்த போது ஆட்டத்தை இடைநிறுத்தியது. கவாயா 144 ஓட்டங்களையும் சிமித் 134 ஓட்டங்களையும் பேர்ண்ஸ் 128 ஓட்டங்களையும் வோக்ஸ் 106 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் தீவுகள் சார்பாக ரெய்லர் இரு இலக்குகளையும் பிரீத்வைட் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
பதிலுக்குக் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் நாள் முடிவில் தீவுகள் 91-6 என்ற நிலையில் இருந்தது. பிராவோ 13 ஓட்டங்களுடனும் பிரீத்வைட் 3 ஓட்டங்களுடனும் மூன்றாம் நாளுக்காக களமிறங்கினர். மேலதிக இலக்குகள் இழப்பில்லாமல் 150 ஓட்டங்களை எட்டியது தீவுகள். தீவுகளின் பரிதாப நிலைமையை பிராவோ, பிரீத்வைட் இருவரும் இணைந்து போக்கினர். இணைப்பாட்டமாக 90 ஓட்டங்கள் பகிரப்பட்டு அணியின் ஓட்டங்களின் எண்ணிக்கை 173 ஆக இருந்தபோது 59 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் பிரீத்வைட். பிராவோ நிலைத்து நிற்க மறுமுனையில் இலக்குகள் சரிந்துகொண்டிருந்தன. இறுதி இலக்காக பிராவோவின் இன்னிங்ஸ் 81 ஓட்டங்களுடன் முடிவுக்குவர 271 ஓட்டங்களில் சுருண்டது தீவுகள். பந்து வீச்சில் ஆஸியின் சார்பாக லையன், பற்றின்சன் இருவரும் தலா 4 இலக்குகளையும், சிடில் இரு இலக்குகளையும் கைப்பற்றினர்.
இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க வேண்டுமாயின் மேற்கிந்தியத் தீவுகள் 351 ஓட்டங்களைப் பெற்றிருக்க வேண்டும். எனவே பொலோ ஒன் கொடுக்கக் கூடிய தகுதியில் ஆஸ்திரேலியா இருந்தாலும் அதற்கு உடன்படாது தொடர்ந்து துடுப்பெடுத்தாடுவதாக அறிவித்தார் சிமித். எனவே இன்னிங்ஸ் தோல்வியில் இருந்து தப்பிப்பிழைத்தது தீவுகள்.
இரண்டாவது இன்னிங்ஸில் ஆஸியின் ஆரம்பம் சிறப்பாக அமையவில்லை. 4 ஓட்டங்களுடன் வீழ்ந்தார் பேர்ண்ஸ். வோர்ணரை வெளியேற்றினார் பிரீத்வைட். ஒருநாள் ஆட்டங்களின் பாணியில் விளையாடி 52 பந்துகளில் அரைச் சதம் கடந்தார் சிமித். 56 ஓட்டங்களுடன் கவாயாவின் இன்னிங்ஸ் முடிவுக்கு வந்தது. மார்ஷ் சிமித்துடன் தாக்குப்பிடிக்க நாள் முடிவில் ஆஸ்திரேலியா 179-3 என்ற நிலையில் உள்ளது. சிமித் 70 ஓட்டங்களுடனும் மார்ஷ் 18 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். பந்துவீச்சில் தீவுகள் சார்பாக கோல்டர் 2 இலக்குகளையும் பிரீத்வைட் ஓர் இலக்கையும் கைப்பற்றினர். (ம)


# தென்னாபிரிக்காவும் தடுமாற்றம் புரோட்டின் வேகம் எடுபடுகிறது

தென்னாபிரிக்கா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான நான்கு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டத்தின் இரண்டாம் நாளான நேற்று முன்தின முடிவில் இங்கிலாந்து 303 ஓட்டங்களில் சுருண்டதுடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிவரும் தென்னாபிரிக்கா 137-4 என்றுள்ளது.
நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்கா முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்ய இங்கிலாந்து முதல் நாள் முடிவில் 179-4 என்றிருந்தது. ஹெமாம்டன் 63 ஓட்டங்களுடனும் ஸ்ரோக்ஸ் 5 ஓட்டங்களுடனும் இரண்டாம் நாளுக்காக களமிறங்கினர். குவித்தார். சிறிது அச்சுறுத்திய புரோட் - பின் இணையை முடித்து வைத்தார் ஸ்ரெயின். மொத்தத்தில் இங்கிலாந்தின் இன்னிங்ஸ் 303 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது. பந்துவீச்சில் ஸ்ரெயின், மோர்கல் இருவரும் தலா 4 இலக்குகளையும் அப்பொட், பியட் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்காவுக்கும் ஆரம்பம் மோசமாகவே இருந்தது. ஓட்டங்கள் பெறப்படாத நிலையிலேயே ஸ்ரெயினைச் சாய்த்தார் புரோட். அம்லாவும் புரோட்டின் வேகத்தில் நடையைக்கட்ட தென்னாபிரிக்கா 12-2. எல்கரும் வில்லியர்ஸும் இணைய மேலதிக இலக்குகள்



ஸ்ரோக்ஸால் நீடிக்க முடியவில்லை. 85 ஓட்டங்களுடன் ஹெறாம்டனை வீழ்த்தினார் மோர்கல். மொயின் அலி, வோக்ஸ் இருவரும் ஓட்டங்களைப் பெறாமல் அடுத்தடுத்து வெளியேற சிறிது நம்பிக்கை கொடுத்த புரோட் ஒருநாள் பாணியில் 32 ஓட்டங்களைக் இழப்பில்லாமல் 100 ஓட்டங்களை எட்டியது தென்னாபிரிக்கா. 100ஆவது ஓட்டத்திலேயே 49 ஓட்டங்களுடன் வீழ்ந்தார் வில்லியர்ஸ். மொயின் அலியின் பந்தில் பிளாசிஸ் போல்ட் ஆக நாள் முடிவில் தென்னாபிரிக்கா 137-4 என்ற நிலையில் உள்ளது. (ம)

# வோக்ஸின் மைல்கல்



அறிமுகமாகிய வருடத்தில் ஆயிரம் ஓட்டங்களை எட்டிய மூன்றாவது வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார் ஆஸ்திரேலியாவின் அடம் வோக்ஸ்.
தனது 35 ஆவது வயதில் கடந்த ஜூன் மாதம் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான ஆட்டத்தில் வோக்ஸ் அறிமுகமானார். அப்போதிலிருந்து தற்போது மெல்பேர்ணில் நடைபெற்று வரும் ஆட்டம் வரை விளையாடி வருகிறார். இவர் தனது அறிமுக ஆண்டிலேயே 1000 ஓட்டங்களைக் கடந்து சாதனை படைத்துள்ளார். இதற்கு முன் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் மார்க் ரெய்லர் 1989ஆம் ஆண்டு டெஸ்ட் ஆட்டத்தில் அறிமுகமாகி 4 சதங்களுடன் 1,219 ஓட்டங்களைக் குவித்து இந்த மைல் கல்லை எட்டிய முதலாவது வீரர் என்ற பெருமையைப் பெற்றிருந்தார்.
இங்கிலாந்து அணியின் தற்போதைய டெஸ்ட் அணித்தலைவர் அலிஸ்டர் குக் 2006ஆம் ஆண்டில் அறிமுகமாகி அந்த வருடத்தில் 4 சதங்களுடன் 1,013 ஓட்டங்களைக் குவித்திருந்தார்.
வோக்ஸ் இந்த வருடம்; அறிமுகமாகி இதுவரை 4 சதங்களுடன் 1028 ஓட்டங்களைக் குவித்துள்ளார். இதன்மூலம் அறிமுக ஆண்டிலேயே 1000 ஓட்டங்களைத் தாண்டிய 3ஆவது வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார். (ம)

# சச்சினுடன் கைகோர்த்த கிறிஸ்ரியானோ ரொனால்டோ





போர்த்துக்கல் கால்பந்து அணியின் தலைவரான கிறிஸ்டியானோ ரொனால்டோ சச்சினின் நிறுவனத்துடன் இணைந்துள்ளார்.
சுமாஸ் எண்டர்டெயின்மெண்ட் என்ற நிறுவனத்தின் உரிமையாளராக இந்திய அணியின் முன்னாள் வீரர் சச்சின் உள்ளார். இந்த நிறுவனம் கிரிக்கெட், கால்பந்து என ரசிகர்கள் விளையாடும் வகையில் பல இடங்களில் பார்க் அமைத்துள்ளது. இதில் விளையாட்டு நட்சத்திரங்களுடன் ரசிகர்கள் விளையாடி மகிழலாம். இந்த நிலையில் கால்பந்துக்கு என பிரத்தியேகமாக பார்க் ஒன்றை சவூதி அரேபியாவில் தொடங்க இந்த நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இதில் ரொனால்[illegible] இந்த நிறுவனத்துடன் ரொனால்டோ இணைந்தமை தொடர்பாக சச்சின் [illegible] சுமாஸ் எண்டர்டெயின்மெண்ட் நிறுவனத்துடன் இணைந்தது மகிழ்ச்சி. இதன் மூலம் ரசிகர்கள் இவருடன் சேர்ந்து கால்பந்து விளையாட வேண்டும் என்ற கனவு நனவாகும் என்று தெரிவித்துள்ளார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சென்.யூட், ஐயனார் அணிகளுக்கு வெற்றி

யாழ்ப்பாணம், டிசெ. 29
ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் நடத்தி வரும் தொடரில் சென். யூட், துறையூர் ஐயனார் அணிகள் வெற்றிபெற்றுள்ளன.

வடமாகாண ரீதியாக நடத்தப்பட்டுவரும் இந்தத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. அதில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற ஆட்டங்களில் முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் சென்.யூட் அணியை எதிர்த்து தெல்லிப்பழை நாமகள் அணி மோதிக் கொண்டது. இதில் சென். யூட் அணி 6:2 என்ற கோல் கணக்கில் வெற்றி



பெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் ?ரியாலை ஐக்கிய அணியை எதிர்த்து துறையூர்ஐயனார் அணிமோதிக் கொண்டது. இதில் துறையூர் ஐயனார் அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)



# சென்.சேவியர் அணியை வீழ்த்தி கிண்ணம் வென்றது விண்மீன்

யாழ்ப்பாணம், டிசெ. 29
பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட 5 வீரர்கள்பங்குபற்றும்கால்பந்தாட்டத் தொடரில் சென்.சேவியரை வீழ்த்தி கிண்ணம்வென்றது விண்மீன். கடந்த ஞாயிற்றுக்கிழமை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த இறுதி ஆட்டத்தில் பலாலி விண்மீன் அணியை எதிர்த்து சக்கோட்டை சென்.சேவியர் அணி மோதிக் கொண்டது. கோல் கணக்கு ஆரம்பிக்கப்படாமலே முடிவடைந்தது முதல்பாதி. இரண்டாம் பாதியும் அதே நிலைமைதான். இதனால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் கிண்ணம் தீர்மானிக்கப்பட்ட வேண்டிய நிலைமை. முடிவில் பலாலி விண்மீன் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது. மூன்றாம் இடத்துக்கான ஆட்டத் தில் உடுத்துறை பாரதி அணியை எதிர்த்து உடுத்துறை செந்தமிழ் அணி மோதிக் கொண்டது. இதில் உடுத்துறை செந்தமிழ் அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

## ஹபீஸ், அசாரிடம் கண்ணீருடன் மன்னிப்புக் கேட்ட மொகமட் ஆமிர்

சூதாட்டத்தில்ஈடுபட்டு அணிக்குத் திரும்பிய ஆமிரை ஹபீஸ், அசார் அலி இருவரும் ஏற்க மறுத்ததையடுத்து அவர் இருவரிடத்திலும் கண்ணீர் மல்க மன்னிப்புக் கேட்டுள்ளார். அவர்களும் ஆமிரின் மன்னிப்பை ஏற்றுள்ளனர்.

பாகிஸ்தான் அணியின் வேகப் பந்து வீச்சாளரான ஆமீர் சூதாட்டத்தில் சிக்கி தடைக்கு உள்ளனார். தடை முடிந்து தற்போது முதல்தர ஆட்டங்களில் விளையாடி வருகிறார். பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் பயிற்சி முகாமில் அவர் பங்கேற்க அனுமதிக்கப்பட்டுள்ளார். ஆமிர் பங்கேற்க எதிர்ப்பு தெரிவித்த ஹபீஸ், அசார் அலி இருவரிடமும் ஆமீர் சூதாட்டத்தில் ஈடுபட்டதற்காக கண்ணீர் விட்டு மன்னிப்புக் கேட்டார். அவரை அவர்கள் கட்டித்தழுவி ஆறுதல் படுத்தி அவரது மன்னிப்பை



ஏற்றுக்கொண்டனர். இது குறித்து கருத்துத் தெரிவித்த ஹபீஸ் - ஆமிருடன் எனக்கு எந்தத் தனிப்பட்ட பகையும் இல்லை. நான் சூதாட்டத்துக்கு எதிரானவன். ஆமிர் மனதளவில் தனது தவறை உணர்ந்த பின்னர் அவர் அணியில் இணைவதில் தவறில்லை. என்றார். (ம)



இலங்கை காரத்தே சங்கம் நடத்திய நடப்பு வருடத்துக்கான கராத்தேத் தொடரில் யாழ். மத்திய கல்லூரி மாணவன் எ.சாள்ஸ் 16 வயதுப் பிரிவு ஆண்களுக்கான 65 கிலோ எடைப்பிரிவின் குமித்தேப் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தைக் கைப்பற்றினார். (ம-23)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 29
ஊரெழு றோயல் விளை யாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாச்சிக்குடா சென்.மேரிஸ் அணியை எதிர்த்து உரும்பிராய் திருக்குமரன் அணி மோதவுள்ளது. மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பலாலி விண்மீன் அணியை எதிர்த்து மன்னார் விடத்தல்தீவு ஐக்கிய அணி மோதவுள்ளது. (ம-23)

# நியூசியின் கருணையற்ற அடியில் இலங்கை அணி தவிடுபொடி



இலங்கை - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தில் நியூசிலாந்து 10 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று தொடரில் 2:0என்றுமுன்னிலையில்உள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. குறிப்பிட்டு சொல்லும் அளவுக்கு இலங்கை வீரர்கள் எவரும் செயற்படவில்லை. இலக்குச் சரிவை ஆரம்பித்து வைத்தார் டில்சான். திரிமன்னே ஒரு ஓட்டத்துடனும் சந்திமல் 9 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க இலங்கையின் தடுமாற்றம் ஆரம்பமானது. மத்தியூஸ், சிறிவர்த்தன, கப்புக்கெதர, குலசேகர நால்வரும் மத்திய வரிசையில் சிறிது போராட்டம் காட்டினர். இருப்பினும் ஒருவர் கூட முழுமையாக இருபது ஓட்டங்களை எட்டவில்லை. தனிநபர் ஒருவரின் அதிகபட்ச ஓட்டங்கள் குலசேகர எடுத்த 19 ஓட்டங்கள்தான். பின்வரிசை வீரர்கள் ஒற்றை இலக்கத்துடன் வெளியேற 117 ஓட்டங்களில் சுருண்டது இலங்கை.

பந்துவீச்சில் நியூசிலாந்து சார்பாக ஹென்றி 4 இலக்குகளையும் மக்கெல்நாதன் 3 இலக்குகளையும் பிரேஸ்வெல், சொட்கி இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

சொந்த மண்ணில் இதெல்லாம் நியூசிலாந்துக்கு ஓர் இலக்கே இல்லை. ஆரம்ப வீரராக குப்திலுடன் லாதம் களமிறங்கினார். மக்கலம் களமிறங்கவில்லை. முதல் பந்துப்பரிமாற்றத்தில் இருந்து ஆரம்பமானது குப்திலின் வேட்டை. 16 பந்துகளில் அரைச்சதம் கடந்த குப்தில் விளாசலில் வில்லியர்ஸை கொண்டுசென்று ஓர் மூலையில் இருத்திவிட்டார். குப்தில் ஓர் முனையால் நொறுக்கித்தள்ள மறுமுனையில் லாதம் குப்திலுக்கான வாய்ப்புக்களை வழங்கிக் கொண்டிருந்தார். இலங்கையின் ஒரு பந்துவீச்சாளர்கூட மிச்சமில்லை. பவிலியனுக்கு சென்று பந்தை எடுப்பதும் விழியைப் பிதுக்குவதுமாக இருந்தனர் எம் நாட்டு வீரர்கள். எட்டே பந்துப்பரிமாற்றத்தில் இலங்கை ஊதித் தள்ளி 250 பந்துகள் மிச்சமிருக்க ஆட்டத்தை முடித்தது நியூசிலாந்து. ஆட்டநாயகனாக 30 பந்துகளில் 93 ஓட்டங்களை விளாசிய குப்தில் தெரிவானார். (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கை கிரிக்கெட்டுக்கு கேவலமான நாள் பயிற்சியாளர் ஜெயரத்ன காட்டமான கருத்து

நியூசிலாந்து அணிக்கு எதிரான ஒருநாள் தொடரில் இலங்கை அணியின் செயற்பாடு மிகவும் ஏமாற்றம் அளிக்கிறது என்று இடைக் கால பயிற்சியாளர் ஜெரோம் ஜெயரத்ன தெரிவித்துள்ளார்.
இலங்கை அணி நியூசிலாந்துக்குச் சுற்றுப் பயணம்மேற்கொண்டுவிளையாடிவருகிறது. இதில் டெஸ்ட் தொடரை 2-0 என இழந்துள் ளது. ஒருநாள் தொடரிலும் இலங்கை அணி மோசமாக விளையாடி வருகிறது. முதல் ஒருநாள் ஆட்டத்தில் 188 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்த இலங்கை தோல்வியைத் தழுவியது. நேற்றுநடைபெற்ற இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தில் 117 ஓட்டங்களுக்கு அனைத்து இலக்குகளையும் இழந்து படு தோல்வி அடைந்தது.



இது தொடர்பாக இலங்கை அணியின் இடைக் கால பயிற்சியாளர் ஜெரோம் ஜெயரத்ன தெரி விக்கையில், 'உண்மையில் இன்று இலங்கை அணிக்கு கேவலமான நாள். இலங்கை அணியின் இத்தகைய செயற்பாடு மிகவும் ஏமாற்றம் அளிக்கிறது. இது போன்ற மோச மான செயற்பாட்டை நாங்கள் எதிர்பார்க்க வில்லை. டெஸ்ட் தொடரில் கூட ஆட்டத்தைக் காப் பாற்ற வேண்டும், வெற்றியை நோக்கி முன் னேற வேண்டும் என்ற நோக்கம் இருந்தது. ஆனால் நடந்து முடிந்த இரண்டு ஒருநாள் ஆட்டங்களிலும் அது போன்ற எண்ணம் வீரர்களிடம் இல்லை' என்றார். (ம)

# சௌதாம்டனைப் பந்தாடிய ஆர்சனல்



இங்கிலாந்து பிறீமியர் லீக் தொடரில் ஆர்சனல் அணி 4:0 என்றகோல்கணக்கில்சௌதாம் டன் அணியைப் பந்தாடியுள் ளது.
ஆட்டத்தில் முதல் இருபது நிமி டங்கள் வரை கோல்கள் ஏவை யும் பதியப்படவில்லை. 23 ஆவது, 28ஆவது நிமிடங் களில் சேன் லொங் இரண்டு கோல்களையும் 36ஆவது நிமிடத்தில்குகோமாட்டினா மற்று மொரு கோலையும் பதிவு செய்ய முதல் பாதியின் முடிவில் 3:0 என்று முன்னிலை வகித் தது ஆர்சனல். இரண்டாவது பாதியின் 18ஆவது நிமிடத்தில் ஆர்சனலின் ஜோஸ் ஓர் கோலை அடிக்க முடிவில் 4:0 என்று வெற்றிபெற்றது ஆர் சனல். (ம)

# இந்தியா பாகிஸ்தான் தொடர் நடைபெறும் என்கிறார் சகாரியர்



இந்தியா - பாகிஸ்தான் அணி களுக்கு இடையிலான தொடர் மீண்டும் நடைபெறும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார் பாகிஸ்தான் கிரிக்கெட் கட் டுப்பாட்டுச் சபையின் தலைவ ரான சகாரியர் கான்.
இந்தியா பாகிஸ்தான் அணி களுக்கு இடையிலான தொடர் நீண்ட காலமாக நடைபெறவில்லை. மும்பையில் நடத்தப்பட்ட பயங்கரவாத தாக்குதலும், எல்லையில் நிலவும் பதற்றமான சூழ்நிலையுமே தொடர் நடத்தப்படாமைக்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது. தொடரை பொது இடமான இலங் கையில் இந்த மாதம் 26ஆம் திகதி நடத்த முடிவு செய்யப்பட்டது. இதற்காக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை மத்திய அரசிடம் அனுமதி கோரியது. ஆனால் இதுவரை அனுமதி அளிக்கப்பட வில்லை. இதனால் தொடர் கைவிடப்பட்டது.
பிரதமர் நரேந்திர மோடி ஆப்கானிஸ்தான் சென்றுவிட்டு டெல்லி திரும்பும் வழியில் திடீரென பாகிஸ்தானுக்கு சென்றார். அந்நாட்டு பிரதமர் நவாஸ் செரீப்பை சந்தித்து பிறந்தநாள் வாழ்த்து தெரிவித் திருந்தார். மோடி - செரீப் சந்திப்பால் இந்தியா - பாகிஸ்தான் தொடர் நடத்தப்பட வாய்ப்பு உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
தொடர் தொடர்பாக பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் தலைவர் சகாரியார் கான் தெரிவிக்கை யில், பிரதமர் மோடி யின் பாகிஸ்தான் பய ணத்தால் தொடர் புத் துயிர் பெறும். விரை வில் நல்ல செய்தி வரும். இந்தியா - பாகிஸ் தான் தொடர் நடைபெறும். என் றார். (ம)

# ஓய்வுபெறும் எண்ணமில்லை எனத் தெரிவிக்கிறார் வில்லியர்ஸ்



தனக்கு ஓய்வுபெறும் எண்ணம் இல்லை என்று தெரிவித்துள்ள வில்லியர்ஸ், அடுத்த சில உலகக்கிண்ணங்கள் வரை தான் மூன்று வகையான அணியிலும் தொடரவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.
தென்னாபிரிக்க அணிக்கு மூன்று வகையான ஆட்டங்களிலும் தூணாக இருப்பவர் வில்லியர்ஒஸ். தற்போது ஒருநாள் தரவரிசையில் முதல் இடத்திலும், டெஸ்ட் தர வரிசையில் மூன்றாவது இடத்திலும் இருக்கிறார். அத்துடன் அதிவேக சதம், அதிவேக அரைசதம், அதி வேக 150 ஓட்டங்கள் எடுத்த வீரர் என்ற பெருமையையும் பெற்றுள் ளார். இவருக்கு முதுகு வலி இருப்பதால் கிரிக்கெட்டில் இருந்து சில காலங்களில் ஓய்வுபெற்றுவிடுவார் என்று சொல்லப்பட்டது. இந்த விமர்சனங்களுக்கு வில்லியர்ஸ் முற்றுப்புள்ளி வைத்துள்ளார்.
தனது ஓய்வு தொடர்பாக வில்லியர்ஸ் தெரிவிக்கையில் "கிரிக்கெட்டை அனுபவித்து விளையாடுவதுதான் முக்கியமான விடயம். வருங் காலத்தைப்பற்றி கூற வேண்டுமென்றால் என்னுடைய பெறுபேறு களைப் பார்ப்பது முக்கியமானது. ஒவ்வாரு ஆட்டத்திலும் உற்சா கத்துடன் அனுபவித்து விளையாடுவது என்பது பற்றி மட்டுமே நான் யோசித்து வருகிறேன். என்னுடைய நாட்டுக்காக விளையாடுவதை விரும்புகிறேன். அதில் எந்தவொரு மாற்றமும் இல்லை. ஓய்வுபெறும் எண்ணம் இப்போதைக்கு இல்லை." என்றார். (ம)



கழகங்களுக்கு இடையிலான தொடர்களின் அடிப்படையில் நடப்பு வருடத்தின் சிறந்த வீரராக மெஸ்ஸி தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இதன்மூலம் ஆண்டின் சிறந்த வீரருக்கான விருது ரொனால் டோவுக்குக் கிடைப்பது [illegible] உறுதியாகியுள்ளது. (ம)

# ஜனவரியில் 5 நாள்கள் விளையாட்டு வாரம்

கொழும்பு, டிசெ. 29
ஜனவரி 25 ஆம் திகதி தொடக் கம் 30 ஆம் திகதி வரையான 5 நாள்களையும் விளையாட்டு மற்றும் தேகாரோக்கிய தேசிய வாரமாகப் பிரகடனப் படுத்தப்பட வுள்ளதோடு அதில் ஒரு நாளை விசேட நாளாகவும் பிரகடனப் படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ இல்லத்தில் நேற்று இடம் பெற்ற விசேட கலந்துரையாடல் ஒன்றில் இந்தத் தீர்மானம் முன்வைக்கப்பட்டுள்ளது.
ஆரோக்கியமும் மகிழ்ச்சியும் நிறைந்த வாழ்வுக்காக விளை யாட்டு மற்றும் உடற்பயிற்சி களை நாட்டுக்கு அறிமுகப் படுத்தும்நோக்கில்விளையாட்டு மற்றும் தேகாரோக்கிய தேசிய வாரம் மற்றும் விசேட தினத் தைப் பிரகடனப்படுத்த அரசு தீர்மானித்துள்ளது.
விளையாட்டை மக்கள் மயப் படுத்தும் ஒரு விளையாட்டுக் கலாசாரத்தை நாட்டில் கட்டி யெழுப்பவும் திறமை வாய்ந்த விளையாட்டு வீரர்கள் விளை யாட்டுத் துறையிலுள்ள தொழின் மையாளர்கள் மற்றும் அமை ச்சின் எண்ணக்கருவுடன் இந்த நாள்கள் அறிவிக்கப்பட்டுள் ளன. அதன்மூலமாக விளை யாட்டு, தேகாரோக்கியம் என் பனவற்றைத் தேசிய வாரத்தில் பிரதேச செயலாளர் மட்டத்தில் நாடளாவிய ரீதியில் நடத்துவதற் குத் திட்டமிடப்பட்டுள்ளது. நடை பாதைகளின் அபிவிருத்தி மற் றும் சிரமதான நிகழ்ச்சித் திட் டங்களின் ஊடாக விளையாட்டு மைதானங்கள் மற்றும் விளை யாட்டுக் கூடங்களை புனர்நிர் மா ணம் செய்தல் போன்றவையும் அதன்போது மேற்கொள்ளப்பட வுள்ளன என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)

உடனடி வேலைவாய்ப்பு
யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட் டுள்ள புடைவை நிலையத்திற்கு பொறுப்பான பெண்கள் தேவை.
தொடர்புகளுக்கு : 077 8389 362

COLLEGE OF PHYSICS
Arasady Road Kantharmadam
A/L 2018
தமிழ்மொழி மூலம்
English Medium
ஆரம்பம் புதன்
30.12.2015 4.00 pm
N.KAPILAN B.sc

உடன் தேவை
வீடு பராமரிப்பவர் (ஆண்)
வீட்டுப்பணிப்பெண் (தங்கி நின்று சமையல் மற்றும் குழந்தை பராமரிப்பவர்)
வயதெல்லை இல்லை.
தொடர்பு:
077 791 1219

NEC
ஆரம்பம் 01.01.2016
A/L 2018
கலை வர்த்தகம்
கணிதம் உயிரியல்
தொழில் நுட்பம்
Note: NEC கல்வி நிறுவனத்தின் 10 வருட நிறைவினை முன்னிட்டு 27.12.2015 தொடக்கம் 01.01.2016 வரைக்கும் அனுமதி பெறும் அனைத்து மாணவர்களுக்கும் அனுமதிக்கட்டணம் இலவசம்
புதிய அனுமதிகளை இன்றுமுதல் பெற்றுக்கொள்ளலாம்.

FLC
FRENCH LANGUAGE CENTRE
FOR BETTER FRENCH
பிரெஞ்சு மொழி வகுப்பு
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diploma in French
FRANCE, CANADA, SWISS, BELGIUM செல்வோர் எம்மிடமே கற்கின்றனர்
MR. V. JEGAN (Trained in France - 2007)
DELF A1, A2 Exam இல் 100% சித்தி.. 1025 மாணவர்கள் French கற்றுள்ளனர்
0779 789 456 / 021 221 7781
No. 40,
TP: 021 3202973
கண்டி வீதி, சாவகச்சேரி
ஆரம்பம்: 13.01 @ 4pm
Bus நிலையம் → அரியகுளம் → 100M → பலாலி வீதி → FL Centre

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.12.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.